பக்கங்கள்: பதினாறு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஆவணி 22 திங்கட்கிழமை (07.09.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 285

# நாட்டையும் மக்களையும் சீரழிக்கும் மஹிந்த அரசைத் தோற்கடிப்போம்!

## அனைத்து மக்களையும் அணிதிரள ரணில் பகிரங்க அழைப்பு



கண்டி, செப்ரெம்பர் 7

ஜனநாயக விரோதச் செயல்களில் ஈடுபட்டு நாட்டையும், நாட்டு மக்களையும் சீரழித்துக்கொண்டிருக்கும் மஹிந்த அரசின் ஆட்சியைத் தோற்கடிப்பதற்கு அனைத்து மக்களும் அணிதிரளவேண்டிய தருணம் வந்துவிட்டது என்று எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

63 வருடங்களுக்கு முன்னர் இந்த நாட்டின் அனைத்து இன மக்களின் ஒத்துழைப்போடு ஐக்கிய தேசியக் கட்சியால் ஈட்டிக்கொடுக்கப்பட்ட சுதந்தி ரத்தை ஜனாதிபதியும் அவரது அரச தரப்பினரும் தவிடுபொடியாக்கி வரு கின்றனர் என்றும் ரணில் குற்றஞ்சாட்டினார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## நியூஸிலாந்தில் நேற்று ஈழத்தமிழர்கள் பேரணி

கொழும்பு, செப். 07

இலங்கையில் வன்னி முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அக திகளை இலங்கை அரசு உடனடியாக விடு விக்க வேண்டும் என்று வலியுறுத்தி நேற்று ஞாயிற்றுக்கிழமை ஈழத் தமிழர்கள் நியூஸிலாந்தில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினர்.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நியூஸி லாந்தின் Aucklad Aotea சுற்று வட்டத்தில் இடம் பெற்றது. இதில் நூற்றுக் கணக்கான ஈழத் தமிழர்கள் பங்கேற்றனர்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கூட்டமைப்பினர் இன்று ஜனாதிபதியுடன் முக்கிய சந்திப்பு

### மீள்குடியேற்றம், அரசியல் தீர்வு குறித்துப் பேசுவர்

கொழும்பு, செப். 07

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர் மட்டக் குழு இன்று திங்கட்கிழமை மாலை 4.30 மணியளவில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்திக்கவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தலைமையில் மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன், ஸ்ரீகாந்தா, இமாம், தங்கேஸ்வரி மற்றும் சிவசக்தி ஆனந்தன் ஆகியோரே இன்று ஜனாதிபதியை சந்திக்கவுள்ளனர்.

இச்சந்திப்பின்போது வன்னி அகதிகளின் மீள் குடியமர்வுப் பிரச்சினைக்கு முதலிடம் அளிக்கப்படும் என்றும் இனப் பிரச்சினைத் தீர்வுக்கான இலங்கை அரசின் உத்தேசத் திட்டத்தை மேலும் கால தாமதப்படுத்தாமல் உடனடியாக முன்வைக்குமாறும் வலி

(16 ஆம் பக்கம் பார்க்க)

## தோட்டத் தொழிலாளர் விவகாரம்; கொழும்பில் இன்று முக்கிய பேச்சு

கொழும்பு, செப்.07

தோட்டத் தொழிலாளர்களின் 500 ரூபா சம்பள உயர்வு தொடர்பாக முதலாளிமார் சம்மேளனத்துக்கும் கூட்டு ஒப்பந்த தொழிற்சங்கங்களுக்கும் இடையில் இன்று முக்கிய பேச்சு கொழும்பில் நடைபெறவுள்ளது.

இதில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், இலங்கைத் தேசிய தோட்டத் தொழி

(16 ஆம் பக்கம் பார்க்க)

## எந்த நாட்டுக்கும் நாம் முகம் கொடுக்கத் தயார்

-ஜனாதிபதி

கொழும்பு, செப். 07

இலங்கைக்கு எதிராக உலகில் உள்ள பல நாடுகள் செயற்படுகின்றன. ஆனால் இலங்கை எந்த நாட்டுக்கும் எதிராகச் செயற்படவில்லை. அதனால் எந்த நாட்டுக்கும் எவ்வித அச்சமும் இன்றி முகம் கொடுக்க நாங்கள் தயாராக இருக்கிறோம்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேற் கண்ட

(16 ஆம் பக்கம் பார்க்க)

## ‘யுனிசெவ்’ அமைப்பின் பேச்சாளர் எல்டெரை நாட்டைவிட்டு வெளியேற அரசு உத்தரவு

### போரின் விளைவுகள் குறித்துப் பாதகமாக விமர்சித்தாராம்

கொழும்பு,செப்.7

ஐக்கிய நாடுகள் சபையின் ‘யுனிசெவ்’ அமைப்பின் கொழும்பு அலுவலகப் பேச்சாளரான ஜேம்ஸ் எல்டெரை இன்று நாட்டைவிட்டு வெளியேறுமாறு அரசு உத்தரவிட்டுள்ளது.

விடுதலைப்புலிகளுக்கு எதிராக போர் தொடுக்கப்பட்டது குறித்து ஜேம்ஸ் வெளியிட்ட கருத்துக்களை அடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்படுவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.



வெளிநாட்டுத் தொலைக்காட்சிகள், செய்திச் சேவைகள், ஊடகங்கள் ஆகியவற்றுக்கு அவர் அளித்த தகவல்களில், இரத்தம் தோய்ந்த இன மோதல்களில் இளம் வயதினர் பாதிக்கப்பட்டுள்ளனர் என விமர்சித் திருக்கிறார் என்று அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## புலம்பெயர் தமிழர்களுடன் அமெரிக்க அதிகாரிகள் உத்தியோகபூர்வமாக பேசியதால் இலங்கை அரசுக்கு வந்தது பெரும் கோபம்!

### ஐ.நா. சபை பொதுக் கூட்டத்துக்கு மஹிந்த செல்லாமைக்கு அதுவும் ஒரு காரணமாம்

கொழும்பு, செப். 07

புலம்பெயர்ந்த தமிழர்களுடன் அமெரிக்க அரச அதிகாரிகள் உத்தியோக ரீதியில் சந் தித்துக் கலந்துரையாடியதாலேயே நியுயோர்க்கில் நடைபெறவுள்ள ஐ.நா. சபை பொதுக் கூட்டத்தில் ஜனாதிபதி மஹிந்த கலந்துகொள்ளாதிருக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக ‘ த நேஷன்’ஆங்கில வாரப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அப்பத்திரிகையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

16 புலம்பெயர் தமிழர் அமைப்புகள் அங்கம் வகிக்கும் ‘ அமெரிக்க தமிழ் அரசியல் செயலவை' என்னும் அமைப்பு அண்மையில் ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க உதவி அமைச்சர் றொபேட் ஓ பிளேக்கை சந்தித்துக் கலந்துரையாடியது.

இந்தச் சந்திப்பில் இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் ஜேம்ஸ் மூரேயும் கொழும்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. பணியாளரின் விடுதலை கோரி விரைவில் உயர்நீதிமன்றத்தில் வழக்கு

கொழும்பு, செப். 07

இலங்கைப் படையினரால் கைது செய்யப்பட்டு நீண்டகாலமாகத் தடுத்துவைக் கப்பட்டிருக்கும் ஐ.நா. ஊழியர்கள் இருவரின் விடுதலை கோரி உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்படவுள்ளன எனத் தெரியவருகிறது:

(16 ஆம் பக்கம் பார்க்க)

## ஜப்பானிய விமான நிலையத்தில் பிரதமர் ரட்ணசிறியிடம் விசாரணை

### கைரேகையும் பதிவு

கொழும்பு, செப்.7

ஜப்பானிய விமான நிலையத்தில் இலங்கைப் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவின் விரல் ரேகை நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பதிவு செய்யப்பட்டது. அத்துடன், அவர் 30 நிமிடங்களுக்கும் மேலாகத் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மிக முக்கிய நபர்களுக்கு (வி.ஐ.பி.) வழங்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச் சட்டத்தை எதிர்த்து வாக்களிக்கத் தயாராகிறது ஜே.வி.பி.

கொழும்பு, செப்.7

ஜே.வி.பி. சார்பு ஊடகவியலாளர்கள் மூவரின் கைது மற்றும் தடுத்து வைப்பு [illegible] அவசரகாலச் சட்டத்தை எதிர்ப்பது குறித்து ஜே.வி.பி. தலைமை ஆராய்ந்து வருகிறது என்று தெரியவருகிறது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசியமட்ட உடற்பயிற்சிப் போட்டியில் மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு வெண்கலப்பதக்கம்

யாழ்ப்பாணம், செப். 7

தேசியமட்டத்தில் பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்ற உடற்பயிற்சிப்போட்டியில் மானிப்பாய் மகளிர் கல்லூரி மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தை தட்டிக்கொண்டது.

நீர்கொழும்பில் நேற்றுக்காலை முதல் இடம்பெற்ற தேசியமட்ட உடற்பயிற்சிப் போட்டிகளில் மாகாணங்களில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்ற பாடசாலைகள் பங்குபற்றின.

இந்தப் போட்டியில் பெண்கள் பிரிவில் பங்குபற்றிய மானிப்பாய் மகளிர் கல்லூரி மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. அந்த அணிக்கு வெண்கலப் பதக்கம் கிடைத்தது.

கடந்த வருடம் உடற்பயிற்சிப் போட்டியில் மானிப்பாய் மகளிர் கல்லூரி முதலாம் இடத்தைப் பெற்றிருந்தது தெரிந்ததே. (1)

## தவறிவிட்டது

மத்தாளோடை புன்னாலைக்கட்டுவன் தெற்கு என்னும் முகவரியைச் சேர்ந்த சின்னவி சண்முகலிங்கம் என்பவரது தேசிய அ.அட்டை (662783986V) வி.அ. அட்டை அடங்கிய பேர்ஸ் சன்னதி கோவில் தீர்த்தத் திருவிழா அன்று (04.09.2009) கோவில் சுற்றாடலில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

# தேசியமட்ட உதைபந்தாட்டப் போட்டியில் சாஹிராவை வீழ்த்தியது நெல்லியடி ம.வி.

கொழும்பு, செப். 7

கொழும்பில் நடைபெற்று வரும் பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட உதைபந்தாட்டப் போட்டிகளில் நேற்று நடைபெற்ற 17 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் நெல்லியடி மகா வித்தியாலயம் வெற்றியீட்டியுள்ளது.

கம்பளை சாஹிராக் கல்லூரியுடன் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றிலேயே நெல்லியடி ம.வி. வெற்றி பெற்றுள்ளது.

மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நெல்லியடி ம.வி. 3:2 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

கட்டுநாயக்க தெய்வேந்திர மெண்டிஸ் மைதானத்தில் இந்த ஆட்டம் இடம்பெற்றது.

மாகாணங்களில் இருந்து தெரிவுசெய்யப்பட்டுள்ள அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டப்போட்டிகள் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றன.

இறுதிப்போட்டியில் வெற்றிபெற்று சம்பியனாகும் அணியின் விவரம் இன்று வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. (1-6)

## நெல்லியடி மெதடிஸ்த தேவாலய அடிக்கல் நடும் நிகழ்வு

வடமராட்சி, செப். 07

நெல்லியடி மெதடிஸ்த திருச்சபைத் தேவாலயத்தின் புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நடும் விழாவும் 59 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் இன்று திங்கட்கிழமை காலை 9 மணியளவில் நடைபெறவுள்ளன.

தேவாலய குரு அருட்திரு எஸ். டபிள்யூ தேவகுமார் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் விசேட பூசை ஆராதனைகளைத் தொடர்ந்து இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் தலைவர் பேரருட்திரு எபநேசர் யோசப் புதிய கட்டடத்திற்கான அடிக்கல்லினை நட்டு வைப்பார்.

இதேதினம் முற்பகல் 11 மணி யளவில் கட்டைவேலி திருச்சபையின் இடைக்குறிச்சி சிற்றாலயத்தினை பிரதிஷ்டைசெய்துபெரு வழிபாடுகளை பேரருட்திரு எப நேசர் யோசப் ஆரம்பித்து வைப்பார்.(9-236)


A/L 2009 பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான...

அங்கீகரிக்கப்பட்ட கணனி டிப்ளோமா சான்றிதழ்கான கற்கைநெறிகள்.

- Diploma in Microsoft Office 2007
- Diploma in PC Application
- Adv. Dip. in Hardware & Networking
- Dip. in Pre-Press Desktop Publishing
- Dip.in Web Designing & Development
- Dip. in Computerized Accounting
- Dip. in Video Production & Multimedia
- Tally | AutoCAD | Java



புதிய பிரிவுகள்
7/9/2009 , 12/9/2009
16/9/2009, 19/9/2009
Time 10 a.m

ஒரு கற்கை நெறிக்கு, முதலில் பதிவு செய்யும் 200 மாணவர்களுக்கு மறைமுகக்கட்டணம், நிபந்தனைகள் எதுவுமின்றி Internet E-mail or Hard ware Technology Course முற்றிலும் இலவசம் !

Internet and E-mail
Hardware Technology

DMI COMPUTER EDUCATION
DMI COMPUTER EDUCATION
NO. 113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்: Tel.: 021-222 4403


## கண்ணீர் அஞ்சலி



எம்முடன் கல்வி பயிலும் நண்பன்
சண்முகதாஸ் அச்சுதன் அவர்களின்
அன்புத் தந்தை

### இராசையா சண்முகதாஸ்

அவர்களின் மறைவால் துயர் அடைந்துள்ள அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மொறட்டுவப் பல்கலைக்கழக
QS/FM மாணவர்கள் மற்றும் நண்பர்கள்.

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னலட்சுமி நவரத்தினம்



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட அன்னலட்சுமி நவரத்தினம் நேற்று (06.09.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி - பாக்கியம் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற நவரத்தினத்தின் அன்பு மனைவியும் சிவகுமார் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், கட்டடத் திணைக்களம், யாழ்ப்பாணம்), பிரணவச்செல்வி (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ரதிதேவி (ஆசிரியை, யா/இணுவில் இந்துக் கல்லூரி), பாஸ்கரன் (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமியும் சர்வக்ஞன், காருண்யா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (07.09.2009) திங்கட்கிழமை மதியம் 12 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கே.கே.எஸ். வீதி,*
*கோண்டாவில்.*

தகவல்:
ந.சிவகுமார் (மகன்).

## மரண அறிவித்தல்



### சங்கர் முத்தையா

**(ஸ்தாபகர், அங்குசபாச பிள்ளையார் மரக்காலை)**

பிரப்பங்குளம் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் இந்தியாவில் கம்பத்தில் வசித்து வந்தவருமாகிய சங்கர் முத்தையா (ஸ்தாபகர், அங்குசபாசபிள்ளையார் மரக்காலை) இந்தியாவில் கம்பத்தில் 15.08.2009 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கர் - பெருமாயி தம்பதியினரின் அன்பு மகனும் ஐயம்மாவின் பெறாமகனும் ஆனந்தம்மாவின் அன்புக் கணவரும் நாகராஜா, கணேசராஜா (அங்குசபாச பிள்ளையார் மரக்காலை, G group Construction), சுமதீஸ்வரி கிருஷ்ணராஜா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் லதா, சுபாசினி, காலஞ்சென்ற கிருபாகரன் ஆகியோரின் ஆசை மாமனாரும் காலஞ்சென்ற காத்தம்மா மற்றும் காசம்மா, பேச்சியம்மா, கார்மேகம், பொன்னுச்சாமி, ஐயம்மா, ஐயாத்துரை ஆகியோரின் அருமைச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி, ஐயத்தேவர் ஆகியோரின் மைத்துனரும் விசாகன், சந்தியா, அட்சயா, மீனாம்பிகை, யாழினி, அங்குசனா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16.08.2009 ஞாயிற்றுக்கிழமை இந்தியாவில் நடைபெற்று பூதவுடல் கம்பத்தில் உள்ள பிரமலை பொது மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*145/5, பிரப்பங்குளம் லேன்,*
*யாழ்ப்பாணம்.*
*0773222678, 222 2095*

தகவல்:
**மு.கணேசராஜா**
**(மகன்).**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## இன்று நடக்கும் முக்கிய சந்திப்புகள்

இலங்கை வாழ் தமிழர்களைப் பொறுத்தவரை இன்று இடம்பெறும் இரண்டு சந்திப்புகள் முக்கியமானவையாகின்றன.

ஒன்று - வடக்கு, கிழக்குத் தமிழர்கள் சம்பந்தமானது. மற்றையது - மலையகத் தமிழர்கள் தொடர்பானது.

முதலாவது சந்திப்பு வட்க்கு, கிழக்குத் தமிழர்களைப் பெருமளவில் பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இலங்கையின் அரசுத் தலைவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் நீண்ட காலத்தின் பின்னர் இடம்பெறுவது. இன்று மாலை இச்சந்திப்பு நடக்கிறது.

அடுத்தது - மலையகத் தமிழர்களின் பிரதான வாழ்வாதாரமாக இருக்கும் தோட்டத் தொழில் சம்பந்தமான வேதனம் குறித்த பேச்சுகள்.

மலையகத்தோட்டத் தொழிலாளர்களின் வேதனம் தொடர்பான விவகாரம் இழுபறிக்குள் சிக்கிய நிலையில் இன்று கூட்டு ஒப்பந்தத் தொழிற்சங்கங்களுக்கும், தோட்ட முதலாளிமார் சம்மேளனத்துக்கும் இடையில் மிக முக்கிய சந்திப்பு நடைபெறுகின்றது.

நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகத் திகழும் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள், அவர்களின் உழைப்பை உறிஞ்சியபின் - உரிய வேதனம் அளிக்கப்படாமல் - தேயிலைச் சக்கை போல பிழியப்பட்ட பின் - நாதியற்றவர்களாக வீசப்படும் நிலைமை நீடிக்கின்றது.

அவர்களின் முக்கிய தொழிற்சங்கங்களுக்கும் தோட்ட முதலாளிமார் சம்மேளணப் பிரதிநிதிகளுக்கும் இடையில் மலையகத் தோட்டத் தொழிலாளரின் சம்பளம் தொடர்பாக ஏற்கனவே செய்யப்பட்டிருந்த ஒப்பந்தம் கடந்த மார்ச் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்துவிட்டது. ஐந்து மாதம் கடந்தும் அது புதுப்பிக்கப்படவில்லை. இரண்டரை வருடத்துக்கு முன்னர் நிர்ணயிக்கப்பட்ட வேதனப்படியே இன்றும் சம்பளம் பெற வேண்டிய அநீதி நிலைக்குள் - அதீத கஷ்டத்துக்குள் - மலையகத் தொழிலாளர்கள் சிக்குண்டிருக்கும் அவலம்.

தோட்டத் தொழிலாளரின் சம்பளத்தை குறைந்தபட்சம் நாளொன்றுக்கு ஐந்நூறு ரூபாவாக உயர்த்த வேண்டும் என்ற கூட்டு ஒப்பந்தத் தொற்சங்கங்களின் கோரிக்கை ஏற்கப்படாத நிலைமையில், கடந்த முதலாம் திகதி முதல் தோட்டத் தொழிலாளர்கள் ஒத்துழையாமைப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர் என்று கூறப்படுகின்றது. ஆனால் அத்தகைய ஒத்துழையாமைப் பணி எத்தகையது என்பதில் கூடத் தொழிலாளர்களிடையே குழப்பம் நீடிக்கின்றது. 'இது வேலை நிறுத்தமும் அல்ல, மெதுவாகப் பணி செய்யும் போராட்டமும் அல்ல' என்று சம்பந்தப்பட்ட தொழிற்சங்கங்கள் சார்பில் விளக்கம் கூறப்படுகின்றது. ஆனால் அவற்றுக்கு அப்பால் ஒத்துழையாமைப் போராட்டம் எத்தகையது, அதை எப்படி முன்னெடுப்பது, அந்தப் போராட்டத்தின் பண்பியல்புகள் எவை என்பன பற்றியெல்லாம் தெளிவான வரையறை இல்லை. இதனால், இவ்வாறு தங்கள் சார்பில் சம்பள உயர்வு கோரி நடத்தப்படும் போராட்டங்களுக்கு முழு ஆதரவும், ஒத்துழைப்பும் வழங்குவதற்குத் தோட்டத் தொழிலாளர்கள் முன்வந்துள்ள போதிலும், அந்தப் போராட்டத்தை எந்த வழி முறையில் முன்னெடுப்பது என்பதில் போதிய விளக்க மில்லாமல் அவர்கள் தடுமாறி நிற்கின்றமையும் கண்கூடு.

இந்நிலையில்தான், இவ்விடயம் குறித்து இறுதி முடிவு ஒன்றை எடுக்கும் இலக்கோடு கூட்டு ஒப்பந்தத்தில் ஈடுபடும் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் தோட்ட முதலாளிமார் சம்மேளனத்தின் பிரதிநிதிகளை இன்று சந்திக்கின்றனர். தோட்டத் தொழிலாளரின் நாள் கூலியை ஐந்நூறு ரூபாவுக்கும் அதிகமாக உயர்த்தும் ஓர் இணக்கப்பாடு இந்தச் சந்திப்பில் எட்டப்படுமாயின், அது அப்பாவித் தோட்டத் தொழிலாளர்களின் வயிற்றில் பால் வார்த்ததாக இருக்கும்.

அடுத்ததாக இலங்கை ஜனாதிபதிக்கும் தமிழ்க் கூட்டமைப்புக்கும் இடையில் இன்று மாலை இடம்பெறும் சந்திப்பு நோக்கற்பாலதாகும்.

அரசுப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்தம் தீவிரமடைந்த நிலையில், அரசுத் தலைவருடன் அரசியல் தீர்வுக்கான விடயங்கள் குறித்து சந்தித்துப் பேசுவதைத் தவிர்த்து வந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, நீண்ட இடைவெளிக்குப் பின்னர் - இப்போது புலிகள் இயக்கம் முற்றாக அழித்தொழிக்கப்பட்டுவிட்டது என அரசுத் தரப்பால் அறிவிக்கப்பட்டு சுமார் மூன்றரை மாதங்களின் பின்னர் - முதல் தடவையாக அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவுடன் இன்று நேரடிப் பேச்சுகளில் ஈடுபடவிருக்கின்றது.

வன்னியில் நலன்புரி மையங்கள் என்ற பெயரில் இயங்கும் முகாம்களுக்குள் முடக்கப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சுமார் மூன்று லட்சம் தமிழர்களின் பேரவல நிலைமை -

வன்னியில் இராணுவ ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியிருக்கும் தமிழர் தாயகப் பிரதேசங்களின் எதிர்காலம் -

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான எதிர்கால வாய்ப்புகள்-

தமிழர்களின் நாடாளுமன்றப் பிரதிநிதிகள் தமது வழமையான பணிகளை முன்னெடுப்பதில் உள்ள இடைஞ்சல்கள் -

வன்னிக்கு அப்பால் வடக்கு, கிழக்கின் ஏனைய இடங்களில் வாழும் தமிழர்கள் எதிர்கொள்ளும் அன்றாட நெருக்கடிகள் -

- இவை போன்ற இன்னோரன்ன பிரச்சினைகள் ஜனாதிபதிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் இன்று இடம்பெறும் பேச்சுக்களின்போது முக்கியமாகக் கவனிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மொத்தத்தில் இன்று நடைபெறும் இந்த இரண்டு சந்திப்புகளுமே இந்த இலங்கைத் தீவில் தமிழர்களின் எதிர்காலம் பற்றிய விடயங்களில் முக்கிய பங்கை - இடத்தை - வகிக்கப் போகின்றன.

# மக்கள் வரிப்பணத்தில் குடித்து கூத்தடிக்கும் முக்கிய புள்ளிகள்

**நேற்றைய (06.09.2009) 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் எழுதப்பட்டிருந்த அரசியல் விமர்சனத்திலிருந்து ஒரு பகுதி**

கொழும்பிலுள்ள சீன உணவு விடுதிகள் பலவற்றில் ஒரேயொரு விடுதியில்தான் தமது நாட்டின் உண்மையான உணவுகள் கிடைப்பதாகவுள்ளன என்று சீன இராஜதந்திரி ஒருவர் ஒருசமயம் கூறியிருந்தார்.

கடந்த ஞாயிறன்று நண்பகல் கடந்துவிட்டவேளை வெண்ணிற ஆடை புனைந்த மிக முக்கிய அரசியல்வாதி ஒருவர் சீன உணவு விடுதிக்கு வந்து சேர்ந்தார். அவரது மெய்க்காப்பாளர் அவருக்குப் பாதுகாப்பு அளித்துக்கொண்டு முன்னால் வந்தார். மெய்ப்பாதுகாவலரின் துப்பாக்கி உறைக்குள் இருந்த கைத்துப்பாக்கி மேல் சட்டைக்கு வெளியில் துருத்திக்கொண்டிருந்தது. நல்ல கட்டுமஸ்தான அந்த மனிதரின் இன்னொரு முக்கிய அம்சம் என்னவென்றால் இடதுகையில் நான்கு விரல்களிலும் தங்க மோதிரங்கள் அணிந்துகொண்டிருந்தார். மிக முக்கிய மனிதருக்கு அருகிலேயே அவரும் அமர்ந்துகொண்டார். முக்கியஸ்தரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக அவர் இப்படிச் செய்திருக்கலாம்.

புகைப்பிடிப்பவர்களுக்காகவே பிரத்தியேகமான அந்த உணவு அறைக்குள் மேலும் வெள்ளை உடை தரித்த நான்குபேர் வந்து சேர்ந்தனர். உயர் ரக உணவுகள் பரிமாறப்பட்ட நிலையில் மெய்ப்பாதுகாவலர் ஒரு லீற்றர் கறுப்பு லேபல் ஸ்கொச் விஸ்கி போத்தலைத் திருகித் திறந்தார். முதல் சுற்று ஊற்றி முடிந்த அளவிலேயே அரைவாசி முடிந்துவிட்டது. இந்தவேளை இன்னொரு விருந்தினர் நீலநிற டெனிம் மற்றும் வெள்ளை ரீ சேட்டுடன் வந்து சேர்ந்தார். தம்முடன் அவரும் ஒரு பிளாக் லேபல் விஸ்கி போத்தலைக் கொண்டுவந்திருந்தார். பெரும் இரைச்சலுடன் சாப்பாடும் 'தண்ணி' பரிமாறலும் தொடர்ந்தது. மெய்க்காவலர் விஸ்கியை ஊற்றிக்கொடுத்ததுடன்தாமும் தாராளமாகப் பகிர்ந்துகொண்டார். உணவு அருந்த அந்தப் பகுதிக்கு வந்த ஒருவரை பரிசாரகர் பவ்வியமாக வேறு ஒரு பகுதியில் ஒரு மேசையில் கொண்டுபோய் அமரச் செய்தார். புகைப்பிடிக்கும் பகுதிக்கு அப்பால் பார்க்கத் தெரியும் தூரத்தில் ஏனைய மெய்க்காவலர்கள் அமர்ந்திருந்தார்கள்.

மேசையின்மீது வோக்கிடோக்கியொன்று வைக்கப்பட்டிருந்தது. ஹோட்டலின் ஏனைய விருந்தினர்களும் வானொலி செய்திப் பரிமாற்றங்களைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். உணவு விடுதிக் கட்டடத்திற்கு வெளியில் வெள்ளை நிற இரண்டு பாதுகாப்பு ஜீப்களும் முக்கியஸ்தரின் உல்லாசக் காரும் நின்றிருந்தன. அவைகளைப் பாதுகாக்க உணவு விடுதியின் காவலர் மட்டுமே நின்றிருந்தார். பகல் உணவு முடிந்தபோது காவலர்களும் காக்கப்பட வேண்டியவரும் நல்ல 'உற்சாகத்தில்' இருந்தார்கள். இந்த முக்கிய மனிதரும் மெய்க்காவலரும் பகிரங்கமாக இவ்வாறு நடந்துகொண்டமை குறித்து ஓய்வுபெற்ற அரச அதிகாரி ஒருவர் குத்தலான கருத்து ஒன்றை வெளியிட்டார். உறவினர் ஒருவருடன் பகல் உணவு அருந்திக் கொண்டிருந்த அவ்வதிகாரி, உறவினரிடம் "அங்கே பாருங்கள் எங்கள் வரிப்பணம் என்னமாதிரி வேலை செய்கின்றதென்று" என்று கூறி நிறுத்திக்கொண்டார். அடுத்த மேசையில் பாதுகாவலர்கள் அமர்ந்திருந்ததைப் பார்த்துவிட்டு அவர் தமக்கு வந்த சிரிப்பை அடக்கிக்கொண்டார்.

எதுவானாலும் மிக முக்கிய மனிதர்கள் அரசியல்வாதிகள் இம்மாதிரி வாழ்க்கை முறையை மேற்கொள்வதைக் கிண்டல் செய்வதற்காக நாம் இதனை எழுதவில்லை. வேறு எந்த குடிமக்களையும்போலவே நல்ல ரக விஸ்கியைக் குடிப்பதும் சிறப்பான சீன உணவைச் சாப்பிடுவதும் அவர்களுக்குரிய உரிமைதான். இது கட்டுப்படுத்தப்படவுமில்லை; தடைசெய்யப்படவுமில்லை. ஆனால் இவ்வாறு அவர்கள் பகிரங்கமாக நடந்துகொள்வது தொடர்பாக ஒரு கேள்வி எழவே செய்கின்றது. அதாவது இம்மாதிரி பகிரங்கமாக ஆடம்பரத்தை வெளிப்படுத்திக்கொள்ள இவ்வளவு பாதுகாப்பு ஏற்பாடுகளும் தேவைதானா? என்பதே அக்கேள்வி.

## பாதுகாப்பு தேவையற்றவர்களுக்கு அதை நிறுத்திவிடலாமே

புலிகள் இயக்கம் வன்முறைகளையும் பயங்கரச் செயல்களையும் கட்டவிழ்த்து விட்டிருந்தமையால் மிக முக்கிய மனிதர்களுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருந்தன. கெரில்லாக்கள் இராணுவ ரீதியில் தோற்கடிக்கப்பட்டு மூன்று மாதங்களுக்கும் அதிகமாகிவிட்டன. எஞ்சியுள்ள கெரில்லாக்களும் ஒழித்துக் கட்டப்படும் வரை பாதுகாப்புக் கட்டுமானங்களைத் தளர்த்துவதற்கு பாதுகாப்புத் தரப்பினர் பின்வாங்கி வருகிறார்கள்.

### பாதுகாப்பு தேவைதானா?

ஆனால் கடந்த ஞாயிறு இடம்பெற்றுள்ள மேற்கூறிய சம்பவம் வேறு ஒரு கதையை வெளிப்படுத்துகின்றது. பாதுகாப்பு வாகனங்கள் சதிசெயல்களுக்குள்ளாகக்கூடிய நிலையில் நிறுத்தப்பட்டிருந்தன. பாதுகாக்கப்படவேண்டியவரும் அபாயத்துக்குள்ளாகும் நிலை காணப்பட்டது.

## வெளிநாடுகளில் தூதுவர் ★ இல்லா தூதரகங்கள் ★

எனவே இவ்வாறு பாதுகாப்பு தேவையற்றவர்களுக்கு தொடர்ந்தும் அது அளிக்கப்படுவது அவசியமா என்று ஆராயவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. அல்லது அவர்களின் மெய்க்காவலர்கள் மற்றும் வாகனங்களின் எண்ணிக்கைகளைக் குறைத்தாக வேண்டும்.

அண்மையில் பிரேமதாஸ விளையாட்டரங்கில் சர்வதேச கிரிக்கெற் போட்டியொன்றைப் பார்க்க வந்திருந்த பார்வையாளர்கள் மீது பொலிசார் தடியடி நிகழ்த்தியதாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதைப் பத்திரிகையாளர் சந்திப்பொன்றில் பொலிஸ் தரப்பு பேச்சாளர் டி.ஐ.ஜி நிமால் மெடிவக்க மறுத்திருந்தார். ஆனால் அரசசார்பு தொலைக்காட்சி நிறுவனச் செய்தியாளர் ஒருவர் தங்களிடம் வீடியோ படம் இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

### பொலிஸ் அதிபர்பதவி

கடந்த வியாழக்கிழமை பொலிஸ் மா அதிபர் ஜயந்த விக்கிரமரட்னா பொலிஸ் திணைக்களத்தின் 143 ஆவது வருடாந்த தினத்தையொட்டிய பல நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்தார். இந்த ஆண்டு நவம்பர் 2ஆம் திகதி அவர் பதவியிலிருந்து ஓய்வுபெறுகின்றார்.

புதிய பொலிஸ் மாஅதிபர் ஒருவர் நியமிக்கப்படப் போகிறார் என்ற செய்தி பகிரங்கமானதையடுத்து அப்பதவிக்கான ஆதரவு தேடும் படலம் உச்சக்கட்டத்தை எட்டியுள்ளது. இப்பதவிக்கு கண்வைத்துள்ள ஒருவர் ........த்தை மையமாக வைத்து புதல் ஒன்றை அமைத்திருந்தார். இது இவருக்கான வாய்ப்பை அதிகரிக்கும் என்று கூறப்பட்டது. இன்னும் சிலர் செல்வாக்குள்ள அரசியல்வாதிகளை அன்பளிப்புகளுடன் சென்று சந்தித்திருக்கிறார்கள்.

இறுதிமுடிவு இன்னமும் செய்யப்படவில்லை. சிலவேளை பொலிஸ் திணைக்களத்துக்கு வெளியிலிருந்தும் எவரும் நியமிக்கப்படலாம் என்று பேச்சடிபடுகின்றது.

அங்குலான மற்றும் மாலபே ஆகிய இடங்களில் ஏற்பட்ட சம்பவங்களையடுத்து பொலிஸ் திணைக்களம் பொதுமக்கள் கவனத்துக்கு வந்துள்ள அதே வேளை, இலங்கையின் வெளிநாட்டு கொள்கை தொடர்பான பரபரப்பூட்டும் விடயங்கள் பல வெளியில் வராமல் இருந்துவிட்டன.

வெளிநாட்டிலுள்ள சில தூதரகங்களில் தூதுவர்கள் இல்லாத நிலையில் சிலசமயம் இரண்டாம் நிலை தூதுவர்கள் இல்லாமலே இயங்கி வருவதாகக் கூறப்படுகின்றது. கனடாவில் உயர்ஸ்தானிகராக இருந்த தயா பெரேரா திடீரென தமது பதவியிலிருந்து விலகியுள்ளார். இலங்கையில் முன்னணி குற்றவியல் வழக்கறிஞராக விளங்கிய இவர் இரண்டு வருட ஒப்பந்தத்தில் இப்பதவியில் இருந்தார். பதவிக்காலத்தில் அரைப் பங்கைக்கூட அவர் இன்னமும் பூர்த்தி செய்யவில்லை. இந்த வருடம் டிசெம்பரில் தாம் பதவியிலிருந்து விலகப் போவதாக ஜனாதிபதிக்கு எழுதியிருந்ததாகவும் ஆனால் அவரது ராஜினா மாவை ஓகஸ்ட் 31ஆம் திகதியிலிருந்து அமுலாகும் விதத்தில் கொழும்பிலிருந்து அவருக்குக் கடிதம் கிடைத்துள்ளதாம். அவர் மேலும் சில நாள்கள் நீடித்து நேற்றுமுன் தினத்திலிருந்து பதவி விலகிக்கொண்டுள்ளார். சில வாரங்களுக்கு முன்னர் கனடாவிலிருந்த பிரதி உயர் ஸ்தானிகர் சி.ஏ. எச்.எம்.விஜேரட்ன இலங்கைக்குத் திருப்பி அழைக்கப்பட்டு விட்டார். கனேடிய லிபரல் நடாளுமன்ற உறுப்பினர் பொப் றே இலங்கை வருவதற்கு விஸா வழங்கிய சர்ச்சையை அடுத்து அவர் இலங்கைக்கு அழைக்கப்பட்டார். பொப்றே இலங்கைக்கு கட்டு நாயக்கா வரை வந்தபின் இலங்கை அரசினால் திருப்பி அனுப்பப்பட்டிருந்தார்.

அடுத்து வியட்னாமில் உள்ள இலங்கைத் தூதரகமும் தூதுவர் பதவியில் ஒருவரும் இல்லாமல் இருந்து வருகின்றது. இதேபோல் தென்னாபிரிக்காவிலும் தூதுவர் இல்லாமலேயே அங்கு தூதரகம் இயங்கிவருகிறது. போலந்திலும் இதேநிலைதான்.

### பான் கீ மூன் - சொல்ஹெய்ம் சந்திப்பு

ஐ. நா செயலாளர் நாயகம் பான் கீ மூன் கடந்தவாரம் நோர்வேயில் இரண்டு தினங்களைக் கழித்துள்ளார். நோர்வே சர்வதேச விவகாரங்களுக்கான அமைச்சர் சொல்ஹெய்ம் அவருடன் பலவிடயங்கள் குறித்து ஆலோசனைகள் நடத்தியுள்ளார். இலங்கையில் ஏற்பட்டுள்ள நிலைமைகள் குறித்தும் இருபிரமுகர்களும் ஆலோசனைகள் நடத்தியிருப்பதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

ஜெனிவாவில் நடைபெற்ற காலநிலை மாற்றம் தொடர்பான மாநாட்டில் கலந்துகொள்வதற்காக இலங்கையின் சுற்றாடல் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மகிந்த சமரசிங்க ஜெனிவாவுக்குச் சென்றுள்ளார்.

ஜெனிவா புறப்படும்முன் அமைச்சர் சமரசிங்க நோர்வேத் தூதுவர் ரோல் ஹெற்றத்துடன் உடன் கொழும்பில் ஆலோசனை நடத்தினார். பின்னர், அமைச்சர் அரசு தலைவர்களுடன் பேசுகையில், நோர்வே அமைச்சர் சொல்ஹெய்ம் இலங்கை தொடர்பாக வெளியிட்டிருந்த கருத்து நோர்வேயிலுள்ள இலங்கையர்களை கவர்வதற்க்காக என்று கொழும்பிலுள்ள தூதுவர் தெரிவித்ததாக கூறியுள்ளார். நோர்வேயில் இலங்கைத்தமிழர்கள் அதிகம் பேர் இல்லாவிட்டாலும் இருக்கும் கொஞ்சப்பேரின் வாக்குகள் தமது கட்சிக்கு கிடைக்கவேண்டும் என்பதால் சொல்ஹெய்ம் அவ்வாறு கருத்துவெளியிட்டிருந்தாராம். அரசியல் என்பது எல்லா நாடுகளிலும் ஒன்றுதான்! (ப)

## நாளை

| | |
|---|---|
| ஆவணி 23 | 08.09.2009 |
| | செவ்வாய்க்கிழமை |
| திதி: | சதுர்த்தி |
| | மு.இ. 10.38 வரை |
| நட்சத்திரம்: | அச்சுவினி |
| | பி.இ.05.06 வரை |
| சுபநேரம்: | 10.34 - 12.04 |
| ராகுகாலம்: | 03.04 - 04.34 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ESOFT

இலங்கை அரசாலும் சர்வதேசத்தாலும்
அங்கீகரிக்கப்பட்ட ISO 9001:2008
தரச்சான்றிதழ் பெற்ற கணனி நிறுவனம்
புதிய பிரிவுகள் ஆரம்பம் Weekday Classes: 07/09/2009 Weekend Classes: 05/09/2009



Just 4 Months
Special Offer for A/L Students
A/L தோற்றிய மாணவர்களே...
உங்கள் பரீட்சை முடிவுகள்
வெளியாகும் வரை எம்முடன்
இணைந்து பயன் பெறுங்கள்

DiTEC
Discount 20%

அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள்
வரையறையற்ற இணையப் பாவனை
அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்கள்
இலவச பாட நூல்கள்
நவீன தொழில் நுட்ப வசதிகள்
நவீன புத்தகங்கள் கொண்ட நூலக வசதிகள்.

DIPCN:- (Diploma in PC Hardware Engineering & Networking)
Diploma in Computerized Accounting
இவை அனைத்தும் ஒரு குடையின் கீழ்..

International Certification Courses
1. Java (Sun Certification Courses) SCJA, SCJP, SCBCD, SCWCD
2. CCNA : Cisco Certified Network Associate
3. MCITP : Microsoft Certified IT Professional
4. MCTS : Microsoft Certified Technology Specialist
5. ICDL : International Computer Driving Licence

Certification Courses
1. FIT- Foundation in Information Technology
2. CIT- Certification in information Technology
3. LINUX Network Administration
4. Video Editing
5. 3D Modeling
6. Auto CAD 2D and 3D
7. Web Designer
8. Graphic Designing

E SOFT Kids
காலை 8.30 முதல் மாலை 5.00 வரை அனைத்து நாட்களிலும் உங்கள் தெரிவு நேரத்தில்.

Head Office: 158F 1/1, Galle Road, Colombo 4. T.P-011-2553883
Jaffna Branch: 114,Navalar Road, Jaffna. T.P-021-2224142
Nelliady Branch: 153,Jaffna Road, Nelliady,Karaveddy. T.P-021-2264940

## தவறிவிட்டது

பழைய பொலிஸ் நிலைய வீதி, சுன்னாகம் தெற்கைச் சேர்ந்த தியாகராசா கலைச்செல்வி என்பவரது 697111603V இலக்க தேசிய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்குறித்த முகவரியில் ஒப்படைக்கவும்.

## தவறிவிட்டது

பிரம்படி ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு என்னும் முகவரியுடைய செ. சுகேந்திரன் என்பவருடைய தே.அ.அட்டை (651010993V) தொழில் அ. அட்டை என்பன கல்வியங்காட்டுச் சந்திக்கும் திருநெல்வேலிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத் துதவவும் சன்மானம் வழங்கப்படும்.

# மரண அறிவித்தல்



## செல்லையா சோதிரத்தினம்

(இளைப்பாறிய தபாலதிபர் - யாழ்ப்பாணம்)

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் நவாலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சோதிரத்தினம் 06.09.2009 ஞாயிற்றுக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா-செல்லமுத்து தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்ற நன்னித்தம்பி - இராசம்மா தம்பதியினரின் மருமகனும், காலஞ்சென்ற இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், தமயந்தி, வசந்தரா (பிரதி அதிபர், மானி. இந்துக் கல்லூரி), வசுமதி, சர்வானந்தன் (Tigo - Colombo), அனுஷியா (மானி. ப. நோ. கூ. ச), நந்தினி (கனடா), கிருபானந்தன் (மானி.ப.நோ.கூ.ச), மஞ்சுளா (Suppcr Accounting Branch, Colombo) ஆகியோரின் பாசமிகு தந்தையும், லயன் சிவராஜீஸ்வரன், சிவபுண்ணியம் (கனடா), ஜெசிந்தா (கொழும்பு), லதா (ஆசிரியை, மயிலிட்டி றோ.க), ஆகியோரின் மாமனாரும், கலா, நிரோஜன் (கொழும்பு), சர்மிளா (கொழும்பு), சர்மிஸ்த்தா (கனடா), சனோஜ் (கனடா), கஜலக்ஷி ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான நவரட்ணம், பஞ்சரட்ணம், யோகரட்ணம், துரைரட்ணம், தியாகரட்ணம், திரவியம், பாலரட்ணம், மற்றும் திலகவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற தனபாக்கியம் மற்றும் நாகரத்தினம், காலஞ்சென்றவர்களான பராசக்தி, யோகேஸ்வரி, மகேந்திரன், இராசேந்திரம் மற்றும் தியாகேஸ்வரி, காலஞ்சென்ற புவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.09.2009) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆரியம்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்

அரசடிச் சந்தி,
நவாலி வடக்கு, மானிப்பாய்.

(88653)

தகவல்:
குடும்பத்தினர்.

## வடிகால் புனரமைப்பு

சுழிபுரம் காளுவன் சந்தியடி மதவு வாய்க்கால் பொன்னாலை குளம் நோக்கி செல்லும் வடிகால் பகுதிகளின் திருத்த கட்டுமானப் பணிகள் ஆரம்பித்து நடைபெற்றுவருகின்றன.(1-28)

# மரண அறிவித்தல்கள்



## பாலசிங்கம் பொன்னம்மா

நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகவும், 2A,மருதடி வீதி (பொஸ்கோ பாட சாலைக்கு அருகில்) யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் பொன்னம்மா 05.09.2009 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - சின்னத்தங்கம் தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பாலசிங்கத்தின் அன்பு மனைவியும், திருஞானசம்பந்தர், காலஞ்சென்ற தருமதேவி மற்றும் பாஸ்கரன் (சண்முகானந்தா புடைவையகம்), ரேணுகாதேவி, காலஞ்சென்ற பிறேமாதேவி ஆகியோரின் பாசமிகு தாயாரும் திருவிளங்கம் (வர்த்தகர்- கொழும்பு), பத்மாவதி, சந்திரா, காலஞ்சென்ற கணேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியும் லண்டனில் வசிப்பவர்களான பாலகிருஸ்ணன் (பாலா), வானதி, திலீப்குமார், சுபோஜினி, சிறிதேவன், றஜிதா, சுரேஷ்குமார், றோகினி மற்றும் பாலசுப்பிரமணியம் (ஜேர்மனி), மலைமகள் (ஜேர்மனி), கொழும்பில் வசிப்பவர்களான சிறிகாந்தன், சிறிப்பிரியா, சொரூபன், சிறிகரன், சிறிதரன், சிறிவிஜிதா, சிறிசுசிதா, வாகீசன், பகீதரன், பிரபாகரன், கவிதா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் திவ்வியா, அகலியா, தர்சயா, சௌமியா, அஜன், அர்ச்சயா, அஸ்விகா, சஜின், விதுஸ், அஸ்வின், தினேஸ் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.09.2009) திங்கட்கிழமை பி.ப 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

2A, மருதடி வீதி,
யாழ்ப்பாணம்.

(88641)

தகவல்:
குடும்பத்தினர்.

## சவுரி ஞானப்பிரகாசம் (மருசலீன்)



மாதகலைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சவுரி ஞானப்பிரகாசம் (மருசலீன்) 03.09.2009 வியாழக்கிழமை இறைபதம டைந்துவிட்டார்.

அன்னார் மடுத்தீன் அன்னம்மாவின் அன்புக் கணவரும், மரிஸ்ரெலா (பேபி), மேரிமற்றில்டா (சாந்தி),ஐடாறோசபெத் (பவுண்), அன்ரன் குணசேகரா (அப்பன்-பிரான்ஸ்), ஆகியோரின் அன்புத் தந்தையும், யேசுதாசன், அன்ரனிஅமலதாஸ், ரதீக்கா ( பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெனிஸ்ரன், ஜெனிபா, பமிலா ஆகியோரின் அன்புப் பேரனும், ஜெஸ்மியா, ஆன்சாரோன் ஆகியோரின் பாட்டனும் யாக்கோபு மரியம்மாவின் பாசமிகு சகோதரரும், மடுத்தீன் நவரத்தினம், காலஞ்சென்ற மடுத்தீன் கந்தசாமி மற்றும் மடுத்தீன் அப்புத்துரை, யோவான் லக்சுமி, மடுத்தீன் செல்லம்மா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (07.09.2009) திங்கட்கிழமை பி.ப. 3 மணிக்கு மாதகல் புனித செபஸ்தியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுத்து புனித செபஸ்தியார் சேமக் காலை யில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புனித செபஸ்தியார் வீதி,
மாதகல்.


(88646)

தகவல்:
ஐடா றோசபேத் (பவுண்)(மகள்).

# 58ஆம் நாள் நினைவஞ்சலியும்
## நன்றி நவிலலும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

கண் மகிழ
நெஞ்சம் நெகிழ

1983 08 12
2009 07 12



தாவடியின் மைந்தன் காந்தியே- நீ
தரணியில் பலகாலம் வாழ விரும்பாததேன்
தாங்கொணாத் துன்பத்தில் துடிக்கின் றோம்- எங்கள்
தாகம் தீர்க்க வருவாயா?

காலை வேளைதனில் யாவரையும் கதிகலங்க
வைத்ததேனோ- நாம்
காலமெல்லாம் மறக்க முடியுமா? அந்நினைவை
கால் வயது முடிவதற்குள் உன் வாழ்க்கையை முடித்ததேனோ?
காற்றாகிப் போனதேனோ - மீண்டும்.
காண்போமா; உனை பார்க்கத் துடிக்கின்றோம்

பற்பல கனவுகளை நனவாக்க நினைத்த- நீ
கனவாகிப் போவாய் என்று நினைத்திருப்பாயா?
பண்புடனும் பாசத்துடனும் எல்லோரிடமும்
பழகியவனே - யாரும்
காண முடியாத தொலை தூரம் போனதேனோ

மகனாய் தம்பியாய் அண்ணனாய் நண்பனாய்
உறவினனாய்- யாவருக்கும் நல்
மனிதனாய் மாண்புடன் வாழ்ந்தாயே
ஊருக்கு உத்தமனாய் உறவுக்கு உறவாக -நீ
ஊனமற்ற மனதுடன் வாழ்ந்தவனே

## துரைசிங்கம் பிரதீபன் (காந்தி)

(உரிமையாளர் - ரோயல் குயின் ஹோட்டல் கே.கே.எஸ்.வீதி, தாவடி)

கடந்த 2009.07.12 அன்று அமரத்துவம் எய்திய எங்கள் அன்புத் தெய்வத்தின் மரணக்கிரியைகளின் போது கலந்து கொண்டு எமக்கு ஆறுதல் கூறியும் எமது துயரில் பங்கு கொண்ட அனைவருக்கும் மேலும் உள்நாட்டில் இருந்தும் வெளிநாட்டில் இருந்தும் தொலைபேசி மூலமாக ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் பல்வேறு வழிகளில் எமக்கு உதவி, ஒத்தாசை புரிந்த அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (07.09.2009) திங்கட்கிழமை மு.ப. 10.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். எமது நினைவிற்கப்பாற்பட்ட நிலையில் யாரையும் அழைக்கத் தவறியிருப்பின் பெருந்தன்மையுடன் மன்னித்து இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

பிள்ளையார் கோயில்,
தாவடி தெற்கு, கொக்குவில்.

(88649)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




‘நோர்த் லங்கா’ ஐ.ஐ.ரி., பயிற்சி நெறிக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் நிறுவனத்தின் பணிப்பாளர் ஏ.பாலசுப்பிரமணியம் உரையாற்றுவதையும் - ‘நொட்டிங்கம்’ கல்லூரிப் பணிப்பாளர் எஸ்.பி.ஹரன் மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

## வடக்கின் வசந்தம் திட்டத்தின்கீழ் யாழ். மாநகர சபைக்குட்பட்ட வீதிகள் புனரமைப்பு

யாழ்ப்பாணம், செப்.7

வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் யாழ். மாநகரசபைக்கு உட்பட்ட பத்து வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன.

அரியாலை சின்னக் கிணற்றடி வீதி, மூத்தவிநாயகர் முதலாம் ஒழுங்கையும் உப ஒழுங்கையும், நாயன்மார்க்கட்டு இணைப்பு வீதி, நல்லூர் பிராமணக் கட்டுக்குளம் வீதி, திருநெல்வேலி, வண்ணான்குளம் வீதி, [illegible]ட்டி பிறவுண்வீதி, யாழ். சப்பல் வீதி, குருநகர் அடம்பன் வீதி, திருநகர் இராஜசிங்கம் வீதி, நாவாந்துறை மண்பிட்டி குடியிருப்பு வீதி ஆகிய வீதிகளே புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இந்த வீதிகளை புனரமைப்பது தொடர்பாக தனியார் ஒப்பந்தகாரரிடம் இருந்து கேள்விகள் கோரப்பட்டுள்ளன.

(201-224)

## ஊர்காவற்றுறை பிரதேசத்தில் இலவச கணனிப் பயிற்சிநெறி

ஊர்காவற்றுறை, செப்.7

ஊர்காவற்றுறைப் பிரதேச சபையினால் பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களுக்கு இலவச கணனிப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இக்கணனிப் பயிற்சிநெறியில் இணைந்து கொள்ள விரும்புபவர்கள் தமது விண்ணப்பப்படிவத்தினைத் தபால் மூலமாகவோ, நேரடியாகவோ செயலாளர், பிரதேசசபை, ஊர்காவற்றுறை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு பிரதேச சபையின் செயலாளர் ஏ.கணேசானந்தராஜா அறிவித்துள்ளார்.

விண்ணப்பப் படிவங்கள் நாளை மறுதினம் புதன்கிழமைக்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும் பயிற்சி நெறியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(203-16)

## மாற்று வலுவுள்ளோருக்கு சாரதி அனுமதிப் பத்திரம்; நேர்முகப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், செப்.7

யாழ்.மாவட்டத்தில் மாற்று வலுவிழந்தோருக்கு மோட்டார் வாகன அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மாற்று வலுவுள்ளோருக்கு பயன்படுத்தும் வாகனங்கள் அவரவர்களின் வலுவிழப்புக்கு ஏற்றதாக வடிவமைக்கப்பட்டுள்ளதா என ஆராய்ந்து அனுமதிபத்திரம் வழங்கப்படவுள்ளதுடன் நேர்முகப் பரீட்சையும் யாழ்ப்பாணத்திலிலேயே நடத்தப்படவுள்ளது.

அனுமதிப்பத்திரம் பெறுபவர்கள் தமது ஆவணங்களை எதிர்வரும் 12, 13 ஆம் திகதிகளில் யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெறும் நடமாடும் சேவையில் கையளிக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் நாளை தொடக்கம் கச்சேரியிலுள்ள மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு தமது வாகனங்களைப் பரிசீலனைக்கு உட்படுத்தித் தகுதிச் சான்றிதழ்களைப் பெறமுடியும் என்றும் மேலதிக தொடர்புகளுக்கு யாழ்.சமூக சேவைகள் உத்தியோகத்தர் 060 221 1256, மாகாண சேவைகள் திணைக்களம் 060 226 5464 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(1-7)




## அராலி மத்தி ஊர்த்தி காணியை மக்களுக்கு வழங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், செப்.7

வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் அராலி மத்தி ஊர்த்தி காணி மக்களுக்குப் பகிர்ந்து வழங்கப்படவுள்ளது.

இதன் முதற்கட்டமாக காணி நில அளவை செய்யப்படவுள்ளது.

யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபிணி வரதலிங்கம் காணி நில அளவை செய்வதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

மேலும் வலி.மேற்கு சுழிபுரம் பிரதேச சபைக்குச் சொந்தமான காணி வலி. மேற்கு பிரதேச செயலாளர் ஊடாக அரசாங்க அதிபரின் ஒப்புதலோடு வழங்கப்படவுள்ளது.

இதனையடுத்து ‘‘நியாப்’’ திட்டத்தின் கீழ் வீடுகள் பெற்றுக் கொடுக்கவும், ஏனைய பொதுநல வசதிகளை விரைந்து மேற்கொள்ளவும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா வடக்கின் வசந்தம் திட்டத்தின்கீழ் துரித நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(203-302)

## யாழ். மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட தபாலகங்களில் இலத்திரனியல் பணப்பரிமாற்ற சேவை

### விரைவில் ஆரம்பிக்க ஏற்பாடுகள்

யாழ்.மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட தபாலகங்களில் இலத்திரனியல் பணப்பரிமாற்றுச்சேவை விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

யாழ். பிரதம தபாலதிபர் ஏ.லோகஞானம் இத்தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் தெரிவித்தவை வருமாறு:

யாழ். மாவட்டத்தில் 30 தபாலகங்கள் உள்ளன. அவற்றில் முதற்கட்டமாக தெரிவு செய்யப்பட்டுள்ள தபாலகங்கள் ஊடாக இலத்திரனியல் பணப்பரிமாற்றுச் சேவையினை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்தச் சேவையினை வழங்குவதற்கு உரிய தபாலகங்களில் தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

கொழும்பிலிருந்து கணனிகள் இங்கு கொண்டு வரப்பட்டவுடன் இலத்திரனியல் பணப்பரிமாற்றச் சேவையானது ஆரம்பிக்கப்படவுள்ளது.

பெரும்பாலும் இம்மாத நடுப்பகுதியில் கணனிகள் தெரிவு செய்யப்பட்ட தபாலகங்களுக்கு எடுத்துவரப்படும்.

கொக்குவில், கரவெட்டி, பருத்தித்துறை, மானிப்பாய், கொடிகாமம் போன்ற தபாலகங்களில் முதற்கட்டமாக இலத்திரனியல் பணப்பரிமாற்றுச்சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

பொதுமக்களின் நன்மை கருதி சில நிலையங்களில் அவர்கள் பணப்பரிமாற்றத்தினைச் செய்வதற்கான நடவடிக்கைகள் இந்தச் சேவை ஊடாக மேற்கொள்ளப்படும் - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(9)

## கல்வியில் சாதனைபடைக்கும் கிராமப்புற மாணவர்களை அந்தச் சமுதாயம் பாராட்ட வேண்டியது அவசியம்

### யாழ்.மாவட்ட நீதிபதி இரா.வசந்தசேனன் உரை



யாழ்ப்பாணம், செப்.7

கிராமப்புறங்களில் இருந்து கல்வியில் உன்னதமான சாதனை படைக்கும் மாணவர்களை அந்த சமுதாயத்தில் உள்ளவர்கள் பாராட்ட வேண்டும்.

யாழ்.மாவட்ட நீதிபதி இரா.வசந்தசேனன் இவ்வாறு தெரிவித்தார்.

சண்டிலிப்பாய், கல்வளை பாரதி சனசமூக நிலையத்தால் கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களுக்கான பாராட்டு விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றும்போது மேலும் தெரிவித்தவை வருமாறு:

நகர்ப்புறத்தில் இருந்து மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெற்றுச் சென்றால் அது பெரிய விடயமல்ல. ஏனெனில் அங்கு மாணவர்கள் சகல வசதிகளுடன் தமது கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்து அந்தத் துறையில் சாதனை படைக்கின்றார்கள்.

ஆனால் நலிந்த, மிகவும் பின் தங்கிய கிராமங்களில் இருந்து மாணவர்கள் பல்வேறு இடர்பாடுகளுக்கு மத்தியில் கல்வி கற்று அதி உச்சமான சாதனை புரிகின்றபோது அங்குள்ளவர்கள் சேர்ந்து அந்த மாணவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வுகளை எடுக்கும் அமைப்பினர் பாராட்டுக்குரியவர்கள்.

இந்தக் கல்வளைக் கிராமத்தில் 3ஏ, 2ஏபி என்ற அதிவிசேட சித்திகளைப் பெற்ற மாணவர்களுக்கு இங்குள்ள சமூகத்தவர்கள் ஒன்று திரண்டு பாராட்டுவிழா எடுத்துள்ளார்கள்.

உண்மையிலே இந்த நிகழ்வு வரவேற்கத்தக்கது.

மாணவர்கள் கல்வியில் உயர்ந்த பெறுபேறு பெற்றவர்கள், பல்கலைக்கழகத்தில் பட்டம்பெற்றால் மட்டும் போதாது. அவர்களின் ஆழ்மனதில் ஆழமான ஆன்மீக சிந்தனைகள் விதைக்கப்பட வேண்டும்.

ஒரு சமுதாயம் கல்வியால் மட்டும் ஆரோக்கியம் பெறும் என்று கூற முடியாது. உண்மையிலே அந்தச் சமூகம் முழுமைபெற வேண்டும் என்றால் அடிப்படை மனிதப்பண்புகள் வளர்க்கப்பட வேண்டும்.

மனிதனை மனிதனாக மதிக்கின்ற மனிதப்பண்புகள் வளர்க்கப்பட வேண்டும்.

மனிதனை மனிதனாக மதிக்கின்ற மனிதப்பண்புகள் சிறுவயதிலிருந்து மாணவர்களுக்கு ஊட்டப்படவேண்டும்.

அவ்வாறு மனித விழுமியங்கள் வளர்க்கப்படுமானால் சமூகத்திலும் சரி, நாட்டிலும் சரி ஒற்றுமை வளர்க்கப்பட்டு சச்சரவுகள் நீங்கி சாந்தியும், சமாதானமும் கிடைக்கும்- என்றார்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் மரியதாசன் ஜெகூ பேசுகையில் [illegible]

இந்தச் சமூகத்தி[illegible] பாராட்டு விழா எடுக்கப்படுவதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

மாணவர்களின் கல்வியை இருநிலைகளாகப் பார்க்கலாம். ஒன்று வித்தைக் கல்வி, மற்றையது ஆழமான கல்வி. இதில் வித்தைக் கல்வி என்பது ஒரு மாணவன் கல்வி கற்கக் கற்க அவன் தலை நிமிர்வதாகும்.

ஆழமான கல்வி என்பது ஆன்மீகம், ஒழுக்கம், தத்துவம் நிறைந்ததாகும். இத்தகைய கல்வியால் ஒரு மனிதனின் தலை சாய்கிறது. அதாவது பணிவு நிறைகிறது. அத்தகைய கல்வியால் சமூகத்தில் பெரும் மாற்றங்களுடன் கூடிய அமைதியானதொரு சமூகம் உருவாகும் என்றார்.

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் வ. ஸ்ரீகாந்தன் பேசுகையில்:

இன்றைய நிகழ்வில் பாராட்டுப் பெறுகின்ற மாணவர்கள் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் மைந்தர்கள். எமது கல்லூரியில் இருந்து பல்கலைக்கழக அனுமதி பெறுகின்ற மாணவர்களின் எண்ணிக்கை வருடாவருடம் அதிகரித்து வருகின்றது.

எமது கல்லூரியில் வசதிவாய்ப்புகள் போதியளவு இல்லாத போதும் மாணவர்கள் விளையாட்டுத் துறையிலும், கல்வித்துறையிலும் மகோன்னதமான சாதனையைப் படைத்து வருகின்றனர். இத்தகைய சாதனைகளை மாணவர்கள் படைப்பதற்கு எமது கல்லூரி[illegible] தம்மாலான முழுமை[illegible]னை வழங்கி வருகின்றனர்- என்றார்.

(9)

## அநுராதபுரத்தில் இருந்து ‘ஐஸ்’ கொண்டுவர நடவடிக்கை

நீர்வேலி, செப்.7

அநுராதபுரத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு ஐஸ்க்கட்டி கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென யாழ். அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல்வள திணைக்களத்துடன் இணைந்து 13 குளிரூட்டி வாகனங்களில் 41 குளிரூட்டிகளில் கடலுணவு வெளிமாவட்டங்களுக்கு ஏ-9 வீதியூடாக அனுப்பப்பட்டுள்ளது என்றும் கூறினார்.

ஏ-9 வீதியூடாகப் பொருள்கள் எடுத்துவரப்பட்ட தினத்திலிருந்து கடந்த சனிக்கிழமை வரை 2 ஆயிரத்து 473 லொறிகளில் யாழ்ப்பாணத்துக்குப் பொருள்கள் எடுத்து வரப்பட்டதுடன் ஆயிரத்து 266 லொறிகளில் உள்ளூர் உற்பத்திப் பொருள்கள் வெளிமாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

(06)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராசி பலன்

07-09-2009 முதல்
13.09-2009 வரை

பொ.சந்திரலிங்கம்

## மேஷம்



அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.

காரியசித்தியுண்டு. பிரயாணவாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர் அயலவர் விலகி இருக்க விரும்புவர். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் போதிய அக்கறை காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லை யுண்டு. திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக எண்ணம் குறையலாம். தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி உண்டு.

## இடபம்



கார்த்திகை 2, 3, 4. ரோகிணி, மிருகசீரிடம் 1, 2

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர் அயலவர் உதவி செய்வர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடு கள் அமையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்பபுகள் நிறை வேறும்.நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மன அமைதி இருக்காது.

## மிதுனம்



மிருகசீரிடம் 3, 4. திருவாதிரை,புனர்பூசம் 1, 2, 3

காரியத்தடை இருக்கும். பிரயாணவாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு காலதாமதமாகலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்காது.

## கடகம்



புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பாற்றாக்குறை நில வும். உறவினர் அயலவர் உதவி செய்யார். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாக னம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங் கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப் புகள் நிறைவேறும். நண்பர்கள் உதவுவர். மன அமைதி இருக்காது.

## சிம்மம்



மகம், பூரம், உத்தரம் 1

காரியசித்தியு ண்டு. பிரயாணவாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக எண்ணம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்கும்.

## கன்னி



உத்தரம் 2, 3, 4. அத்தம், சித்திரை 1, 2

காரியத் தடை இருக்கும். பிரயாணவாய்ப்பு காலதாமதமாகலாம். பணம் இருக்கும். உறவினர் அயலவர் பகை கொள்ளக்கூடும். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.

## துலாம்



சித்திரை 3, 4. சுவாதி, விசாகம் 1, 2, 3.

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விலகி இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லை யுண்டு. திருமண வாய்ப்பு காலதாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.

## விருட்ஷிகம்



விசாகம் 4, அனுசம், கேட்டை

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு காலதாமதமாகலாம். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் பகை கொள்ளளக்கூடும். தாய்நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாண வர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமணவாய்ப்பு காலதாமதாகலாம். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக எண்ணம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.

## தனுசு



மூலம், பூராடம், உத்தராடம் 1.

காரிய சித்தியுண்டு. பிரயாணவாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர் அயலவர் விலகி இருப்பர். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலம் உண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகள் அமையலாம். அதிர்ஷம் இருக்காது. தெய்வீக எண்ணம் குறையலாம். தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்கும்.

## மகரம்



உத்தராடம் 2 ,3, 4. திருவோணம், அவிட்டம் 1, 2

காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு காலதாமதமாகலாம். பணப் பற்றாக்குறைநிலவும். உறவினர்அயலவர் பகை கொள்ளக்கூடும். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு காலதாமத மாகலாம். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மோலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப் புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.

## கும்மம்



அவிட்டம் 3, 4. சதயம், பூரட்டாதி 1, 2, 3

காரியத்தடை இருக்கும். பிரயாணவாய்ப்பு பாதிக்கலாம். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர் அயலவர் விலகி இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகை விலகும், திருமண வாய்ப்பு காலதாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக எண்ணம் குறையலாம். தொழில் துறையில் முன்னேற்றம் இருக்காது. எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்காது.

## மீனம்



பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர் அயலவர் உதவதி செய்வர். தாய் நலம் தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் இருக்காது. தொழில்துறையில் முன்னேற்றம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்கும்.


வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

# திருமண வாழ்த்து

நிகழும் மங்களகரமான விரோதி வருடம் ஆவணித்
திங்கள் 22ஆம் நாள் (07.09.2009)
திங்கட்கிழமை மு.ப. 9.14 மணி முதல் 10.34 மணி
வரையுள்ள துலா லக்கினமும் ரேவதி நட்சத்திரமும்
சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்
வெள்ளவத்தை மியாமி
வரவேற்பு மண்டபத்தில்
திருமண பந்தத்தில் இணைந்து கொள்ளும்
எமது நிறுவனங்களின் உரிமையாளரும் பிரபல
தொழிலதிபருமான தேசமான்ய, அருள்நிதி
திரு தம்பிராசா குழந்தைவேல்
அவர்களது புத்திரி திருநிறைச்செல்வி
**நிலோஜினி** அவர்களையும்
திருநிறைச் செல்வன் **சிவாஸ்கந்தா**
அவர்களையும்மனதார வளமுடன் வாழ
வாழ்த்துகின்றோம்.

**அனைத்து ஊழியர்களும்.**

அன்னை நாகா பூட்சிற்றி
175, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
021- 2225515

ரி.கே.றேடர்ஸ்;
179, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
021- 2225223


## கேணியைப் புனரமைக்க நடவடிக்கை

தொல்புரம் பாணாவெட்டி வீதியில் அமைந்துள்ள கேணியில் நிறைந்துள்ள கழிவுப்பொருள்களை அப்புறப்படுத்திக் கேணியைச் சுத்தம் செய்யும்நடவடிக்கை மேற்கொள்ளப்பட வுள்ளது.

இவ்விடயம் தொடர்பான கலந்துரையாடல் அண்மையில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் தொல்புரம் மூளாய் பிரதேச சுகாதாரப் பரிசோதகர், மானிப்பாய் பிரதேச சுகாதாரப்பிரிவு அதிகாரிகள் பிரதேச சபை உத்தியோகத்தர் கள், வழக்கம்பரை முத்துமாரி அம்மன் பரிபாலன சபையினர் ஆகியோர்கலந்துகொண்டு மேற்கண்ட தீர்வை எடுத்துள்ளனர்.

(201-28)

## மானிய உரம்பெற பதிவு செய்யுமாறு அறிவுறுத்து

மானியஉரம்பெறுவதற்கான விண்ணப்பப்படிவம் பெறாத நெற்பயிர்ச்செய்கையாளர்கள் உடன் அதற்கான படிவங்களை பெற்றுப் பூர்த்தி செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட காலத்திற்கு பின்னர் இப்பதிவுகள் மேற்கொள்ளப்படமாட்டாதுஎன்று கூறப்பட்டுள்ளது.

எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனத் தலைவர் க. [illegible] தெரிவித்துள்ளார். (203-302)


**IDM Affiliated University College - Chavakachcheri**
**Walk - in Interview**

The following vacancies are available at our location in Chavakachcheri
1. Lecturers - Faculaty of ICT and Management (Full Time/ Part Time) Should be Degree Holders in relevant stream or Higher Diploma with Experience)
2. Instructors (Full Time) Higher Diploma. Diploma with experience or other professional Qualifications
Just walk in with your certificates;
**on 08.09.2009 (Tuesday)**
@ Uthayan Auditorium
New uthayan publications- Kasturiar Road, jaffna
between
9.00am- 11.00am
IDM AUC
For details : 021 7200 600
(சி/56078)

**SKY COMPUTER (Pvt) Ltd.**
sky
(யா/புனிதசாள்ஸ்மகா வித்தியாலயம அருகாமையில்)
No, 05 Devos Avenue, Colombo - 04, Tel:- 0115 - 335261 Fax:- 0115 - 371229
No, 162, Main Street, Jaffna. Tel:- 021-4590325 0779053545

Course Details
- Diploma In Ms Office - 2 Months
- Diploma In DTP - 2 Months
- Diploma In Hardware - 2 Months
- Diploma In Web Design - 3 Months
- Kids Program - 2 Months
- Internet & Email - 2 Weeks

மாணவர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்
Today You Learn Tomorrow You Lead.

**Management & Informatics Studies**
**MIS புதிய பிரிவுகள் ஆரம்பம் MIS**
#74, சபாபதி வீதி தலையாழி யாழ்ப்பாணம். TPNO: 060 221 6083

AFTER A/L & O/L ?

- Diploma in Ms-Office & Open Office
- Diploma in Desktop publishing & Digital Printing
- Diploma in Hardware Technology
- Diploma in VB Programming (with sample project)
- Diploma in VB.Net Programming (with SQL server)
- Diploma in Java Programming (NetBeans Environment / Swing)
- Diploma in ASP.Net Programming (with SQL server)
- Diploma in Linux Fundamentals (Ubuntu / Fedora/ SUSE)
- Diploma in Multimedia Technology (FlashMX / PhotoShop)
- Diploma in Web Development (PHP/ MySQL / Apache)
- Diploma in Computer Networking (Windows 2003/Linux)
- Diploma in DBMS (Oracle / MySQL / SQL Server)
- Certificate in Internet Technology
- Certificate in Web Designing (HTML/Front Page/Dream Weaver)
- Certificate in Digital Audio & Video Production

ஆரம்பம்
07 / 09/ 2009 - 3 pm
முற்றுமுழுதான செய்முறைப் பயிற்சி
அச்சமுந்த பாடக் குறிப்புக்கள்
இராமநாதன வீதியிலிருந்து 150m தூரம் அல்லது
K.K.S வீதியிலிருந்து 200m தூரம்

மாணவர்கள் வேலைசெய்வோர் ஆகியோருக்கு தனித்தனியான வசதியான நேரங்கள்
By R.Kumaran - B.Sc.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் மரக்கறிகளைப் பதனிட்டு உடனடி 'சூப்'; கையிலே வெண்ணெயை வைத்துக் கொண்டு அலைவது ஏன்?

**'மரக்கறி சூப்' என்றதும் எல்லோருக்கும் வர்ணப் பைக்கெற்றுகளில் அடைக்கப்பட்ட சிறு பொதிகளே ஞாபகத்துக்கு வரும். அந்தளவு தூரம் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் 'சூப்'பையே அதிகளவு விலைகொடுத்து பயன்படுத்தி வருகிறோம். ஆனால் மிகவும் மலிவான விலையில் இலகுவான முறை யில் வீட்டிலிருந்தபடியே உடனடி 'சூப்'பை தயாரிக்க முடியுமென்று நிரூபித்திருக்கிறார் கோண்டாவி லில் வசித்துவரும் 65 வயதான திரு மதி ஜெயலக்சுமி சிவசுப்பிரமணி யம். உள்ளூர் மரக்கறி வகைகளைப் பயன்படுத்தி நீண்ட காலத்திற்கு பேணி வைக்கக்கூடிய உடனடி 'சூப்' பவுடரைத் தயாரிப்பது பற்றியும் அதனால் விளையும் நன்மைகள் பற்றியும் அவர் உதயன் வாசகர்களுடன் இங்கே தனது கருத்துக்களைப் பகிர்ந்து கொள்கிறார்.**



## மரக்கறி வகைகளைப் பதனிடுவதில் நிபுணத்துவம் பெற்ற திருமதி ஜெயலக்சுமி சிவசுப்பிரமணியத்துடன் ஒரு நேர்காணல்

**கேள்வி:** உள்ளூர் மரக்கறிகளைப் பயன்படுத்தி உடனடி 'சூப்' பவுடரைத் தயாரிக்கும் எண்ணம் உங்களுக்கு எப்படி ஏற்பட்டது?

**பதில்:** இதற்கு என்னுடைய தொழில்தான் காரணம் என்று நினைக்கிறேன். விவசாயத் திணைக்களத்தில் மகளிர் விவசாயப் பாடசாலையில் விரிவுரையாளராகவும் அதன் பின்னர் விவசாயத் திணைக்களப் போதனாசிரியராகவும் பணிபுரிந்துள்ளேன். இப்போது யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கப் பணிப்பாளர் சபையில் பணியாற்றுகின்றேன். எனவே விவசாயம் தொடர்பாகவும் எமது பிரதேசத்தின் அபிவிருத்தி தொடர்பாகவும் எனக்குக் கிடைத்த அனுபவங்களின் வெளிப்பாடாகவே இந்த முயற்சியில் நான் ஈடுபட்டேன்.

**கேள்வி:** மரக்கறி வகைகளை எவ்விதம் பதனிட்டு உடனடி 'சூப்'பவுடரை ஆக்கிக் கொள்வீர்கள்?

**பதில்:** பொதுவாகவே யாழ்ப்பாணத்தில் குறித்த பருவகாலத்தில் மரக்கறிகளின் விலை மிகவும் குறைவாகக் காணப்படும். அக்காலங்களில் அவற்றினை வாங்கி சிறிதாகச் சீவி நீராவியைப் பயன்படுத்தி வேகவைக்க வேண்டும். நான் நீர்த்துப் பெட்டியில் மரக்கறிச் சீவல்களை இவ்விதம் நீராவியில் அவிப்பேன். அதன் பின்னர் அதனை வெயிலில் நன்கு காய விட்டுப் பின்னர் அவற்றினைச் சேர்த்துப் பவுடராக்கலாம். இதற்கு மா அரைக்கும் இயந் திரத்தையோ உரலையோ அவரவர் வசதிக்கேற்ப பயன்படுத்தலாம். அதன்பின்னர் எமக்குத் தேவைப்படும் நேரங்களில் வெந்நீரில் இந்த 'சூப்' பவுடரைப் போட்டால் சிலநிமிடங்களிலேயே சத்தான 'சூப்' தயாராகி விடும்.

**கேள்வி:** இதற்கு என்னென்ன மரக்கறி வகைகளை உள்ளடக்கமாகக் கொள்ளலாம்?

**பதில்:** இதற்கென நான் வரையறைகள் எதனையும் கொள்ள வில்லை. மலிவாகக் கிடைக்கின்ற மரக்கறி வகைகள் எல்லாவற்றையுமே பயன்படுத்துகிறேன். அநேகமாக எல்லா மரக்கறிகளும் விற்றமின்களும் கனியுப்புகளையும் செறிவாகக் கொண்டவை. உடலுக்கு ஆரோக்கியத்தை உண்டுபண்ணக் கூடியவை. எனவே முள்ளங்கி, கரட், போஞ்சி, வெங்காயம், உள்ளி, கோவா, பயிற்றங்காய், வெண்டி, கறிவாழை, பாகற்காய் உள்ளிட்ட மரக்கறிகளை இணைத்து உடனடி 'சூப்'பைத் தயாரிக்கிறேன். இத்துடன் சத்து நிறைந்த சிறுகுறிஞ்சா, வல்லாரை முதலிய இலை வகைகளையும் சேர்த்துக் கொள்ளலாம்.

**கேள்வி:** மரக்கறிகளில் எல்லாவிதமான சத்துகளும் இருக்கும்போது அவற்றைப் பச்சையாக உண்ணலாமே? அவ்வாறாயின் மரக்கறி 'சூப்'பின் அவசியமென்ன?

**பதில்:** எல்லாக் காலங்களிலும் எல்லா மரக்கறி வகைகளும் கிடைப்பதில்லை. அத்துடன் அவற்றின் விலைகளும் காலத்துக்குக் காலம் ஏறியிறங்கும். எனவே மரக்கறிகள் மலிவாகக் கிடைக்கும் காலங்களில் அவற்றைப் பதனிட்டு வைத்தால் தேவையானபோது 'சூப்'பாகப் பயன்படுத்தலாம். அத்துடன் மரக்கறி வகைகளைப் பச்சை யாக உண்பதைவிட 'சூப்'பாக உட்கொள்ளும் போது அது இலகுவாகச் சமிபாடடைந்து உடலுக்குத் தேவையான சத்தை உடனேயே வழங்கிவிடும். எனவே நோயாளர்களுக்கும், சிறுவர்களுக்கும் இது பயனுள்ள திரவ உணவாக அமையும்.

**கேள்வி:** மரக்கறி வகைகளைப் பச்சையாக உண்ணும்போது கிடைக்கும் சத்துகள் அத்தனையும் 'சூப்'பிலும் கிடைக்குமா?

**பதில்:** பச்சை மரக்கறி வகைகளை நீரில் அவிக்கும்போது அதிகப்படியான சத்துக்கள் அழிந்துவிடுகின்றன. எனவேதான் நீராவி மூலம் மரக்கறிகளை அவிக்கிறேன். இதனால் மிகக் குறைவான சத்து இழப்பே ஏற்படுகிறது. ஆகவே பச்சை மரக்கறி வகைகளை உண்பதற்கு ஒப்பான சத்து இதிலும் கிடைக்குமென நம்பலாம்.

**கேள்வி:** உடனடி மரக்கறி 'சூப்'பால் விளையும் நன்மைகள் எவையெவை என நம்புகிறீர்கள்?

**பதில்:** இதன் உற்பத்திச் செலவு மிகக் குறைவானது. அத்துடன் வீட்டில் இருந்தபடியே எவருமே தயாரித்துவிடலாம். மேலும் உடல் உபாதைகளைப் போக்கக்கூடிய மிகச் சிறந்த இயற்கை உண வாகவும் விளங்குகிறது. நீரிழிவு நோய், சிறுநீரகக் கோளாறு, வயிற்றுக்கோளாறு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளைத் தொடர்ச்சியாக மரக் கறி 'சூப்' அருந்துவ தன் மூலம் தவிர்த்துக் கொள்ளலாம். இங்கே இன்னொன்றையும் கூற விரும்புகிறேன். இந்த மரக்கறி 'சூப்' மக்களின் நன்மைக்காக மட்டுமே நான் ஆக்கியுள்ளேன். ஒரு போதும் இதனை ஒரு வணிக ரீதியான முறையில் பயன்படுத்தும் எண்ணமில்லை. எனினும் யாராவது ஆர்வ முள்ளவர்கள் மரக்கறி 'சூப்'பை மக்களிடம் பரவலாக்க நடவடிக்கை எடுப்பார்களாயின் அதற்கு நான் துணை நிற்பேன்.

**கேள்வி:** நீங்கள் தயாரித்துள்ள உடனடி மரக்கறி 'சூப்' பற்றிய தேவைப்பாடுகள் என்னவென்று கருதுகிறீர்கள்?

**பதில்:** இதனை என்னுடைய விவசாய அறிவையும் சமய அறிவையும் பயன்படுத்தியே தயாரித்துள்ளேன். எனவே இது பற்றிய மிக நுணுக்கமான ஆய்வுகள் செய் யப்படும்போது இன்னமும் இதனைச் சீராக்கி மிகச் சிறந்த திரவ உணவினை மக்களுக்கு அளிக்க முடியும். எனவே பல்கலைக்கழக மருத்துவபீடத்தினர் மற்றும் இது தொடர்பாக ஆய்வுகளை நிகழ்த்துவதில் நிபுணத் துவம் பெற்றவர்கள் எனது தயாரிப்பினை ஆய்வுக்குட்படுத்தி அதன் முடிவின்படி ஒரு தீர்க்கமான தயாரிப்பு முறையை உருவாக்கினால் அது மக்களுக்குப் பேருதவியாக அமையும். அண்மையில் வெளிநாட்டிலிருந்து வந்த ஒருவர் சுகவீன முற்றுள்ள தனது தாயாருக்காக பெருந்தொகைப் பணத்தைச் செலவிட்டு மரக்கறி 'சூப்'பைக் கெற்றுகளை அங்கிருந்து சுமந்து வந்தார். அதைப் பார்த்தபோது இதனை விடவும் சிறப்பாக எங்களால் மரக்கறி 'சூப்' பினை செய்யமுடியும்போது எதற்காக இந்த வீண் அலைச்சல் என்று எனக்குத் தோன்றியது. எங்களிடம் இல்லாத மரக்கறி வகைகளா? கையிலே வெண்ணெயை வைத்துக் கொண்டு ஏன் வீணாக அலைய வேண்டும். எம்மிடமுள்ள மரக்கறி வகைகளை வீணடிக்காது அவற்றை பிரயோசனப்படுத்த உடனடி மரக்கறி 'சூப்' முறை உதவும். அத்துடன் தேநீருக்குப் பதிலாக இதனை அருந்தி வந்தால் எமது சமூகத்தில் ஆரோக்கியமும் அதிகரிக்கும்.



சந்திப்பு: ஔவையன்





கரவெட்டி தேவமாதா ஆலய திருவிழா அண்மையில் இடம்பெற்றது. திருவிழாவின் போது திருச்சொரூபப் பவனி வருவதையும் [illegible] கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

## வாசகர் திருமுகம்

### திரையரங்குகளில் புகைப்பதை இவர்கள் நிறுத்துவார்களா?

புகைப்பிடித்தல் உடல்நலத்திற்குக் கேடு என்பது யாவரும் அறிந்த ஒன்று. ஆனால் அண்மையில் நகருக்கு வெளியே இயங்கும் ஒரு திரையரங்கில் பிரபலமாகப் பேசப்படும் கந்தன் பெயர் கொண்ட திரைப்படத்திற்குச் சென்றிருந்தபோது அங்கு பெண்கள், சிறுவர்கள் உட்படப் பலர் ஆவலுடன் வந்திருந்தனர். அங்கு வந்திருந்த ஆண்களில் இளைஞர்கள் உட்பட சிலர் எந்தவித கூச்சமோ சங்கடங்களோ இன்றி யாரையும் பொருட்படுத்தாமல் புகைத்தபடி இருந்தனர். படம் முடியும் வரை இது தொடர்ந்துகொண்டிருந்தது. மூடிய அந்தத் திரையரங்கில் தம்மையும் பாதிப்புக்குள்ளாக்கி ஏனையோரையும் பாதிப்புக்குள்ளாக்கும் இச்செயலை திரையரங்கு நிர்வாகமும் கவனித்ததாகத் தெரியவில்லை. அது குறித்த வாசகங்களும் தெளிவாகவோ அல்லது கண்டிப்பாகவோ வைக்கப்பட்டிருக்கவில்லை. இளைஞர்களோ இன்றைய உலகில் நாகரிக உடையணிந்து புதிய வகை கைத்தொலைபேசிகளுடன் மோட்டார்வண்டியில் வலம் வந்தால் தாம் நாகரிகமானவர்கள் என்று எண்ணுகிறார்கள். பொது இடங்களில் நடக்கும்விதம், பண்பாடு, செயல்கள் போன்றனதான் எமது நாகரிகம். இதன்மூலம்தான் நாமும் முன்னேறி எமது சமுதாயத்தையும் முன்னேற்ற முடியும் என்பதை உணராமல் உள்ளனர். இத்தவறை இளைஞர்கள் உணர வேண்டும். திரையரங்கு உரிமையாளர்களும் பொறுப்புடன் நடப்பார்கள் என எண்ணுகின்றேன்.

யாழ்ப்பாணம். நலன் விரும்புவோன்.

### மாற்று வலுவுள்ளோருக்கான விளையாட்டுப்போட்டி கட்டுரைக்கு ஒரு விளக்கம்

உதயன் நாளிதழ் 08.08.2009இல் மாற்று வலுவுள்ளோருக்கான விளையாட்டுப் போட்டிகள் பற்றி 'விண்ணன்' என்பவரால் எழுதப்பட்ட கட்டுரை தொடர்பாகச் சில உண்மைத் தகவல்களை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அவரது கட்டுரையில் காணப்பட்ட சில தகவல்கள் வாசகர் மத்தியிலும், கல்விச்சமூகத்திலும் தவறான அபிப்பிராயங்களை ஏற்படுத்தி இருக்கக்கூடும்.

யாழ். கல்வி வலயத்தினைப் பொறுத்த வரையில், விசேட கல்விப்பிரிவு மாற்று வலுவுள்ளோர் நலன் குறித்து பல்வேறு செயற்பாடுகளை வினைத்திறனுடன் ஆற்றி வருகின்றமை கல்விச் சமூகம் அறிந்ததே. அந்த வகையில் மாற்று வலுவுள்ளோருக்கான விளையாட்டுப் போட்டிகளை வருடாவருடம் பாடசாலை மட்டத்தில் நடத்தி வருகின்றது. முதன் முதலில் இத்தகைய பிள்ளைகளுக்கான விளையாட் டுப் போட்டி 2007.11.10 அன்று யா/ யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் சிறப்பாக நடத்தப்பட்டது. கடந்த ஆண்டு மாற்றுவலுவுள்ளோருக்கான விளையாட்டுப் போட்டி 2008.11.12இல் யா/ யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் சிறப்பாக நடைபெற்றது. இப்போட்டியின்போது களப்பயணம் மேற்கொண்டு போட்டிகளைப் பார்வையிட வந்த வடமராட்சி வலய மாற்றுவலுவுள்ள பிள்ளைகளுக்கும் போட்டிகளில் கலந்துகொள்ளச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன், இவ்வாண்டுக்கான விளையாட்டுப் போட்டி வலயமட்டத்தில் 2009.08.05இல் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆயினும் தவிர்க்க முடியாத காரணங்களால் அதனை 2009.09.12ஆந் திகதி நடாத்துவதற்கு ஒழுங்குகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்கான, கோட்ட ரீதியாக அணியப்பாடசாலைகளில் மேற்படி போட்டிக்கான பயிற்சிகள் நடைபெற்று வருகின்றன என்பதனையும் அறியத்தருகின்றேன்.

அடுத்து, விண்ணன் தனது கட்டுரையில் மாற்று வலுவுள்ளோர் தொடர்பில், அரசசார்பற்ற நிறுவனங்கள் அசமந்தப் போக்கினைக் கடைப்பிடிப்பதாகவும் எழுதியுள்ளார். ஆனால், யாழ்.வலய விசேட கல்விப்பிரிவுக்கு மனிதநேய அமைப்பின் ஒன்றியம் (CHA) என்ற நிறுவனம் கடந்த ஆண்டுகளில் பல பயனுள்ள உதவிகளை வழங்கியுள்ளது என்பதனை நன்றியுடன் நினைவு கூருகின்றேன்.

செல்வி. சந்திரிகா நவரட்ணம்.
ஆசிரிய ஆலோசகர், விசேட கல்வி, யாழ். கல்வி வலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்

# றோயல் குளுக்கோஸ்

100% சுத்தமானது

உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்

றோயல் குளுக்கோஸ் தருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்.

PACKED BY: ROYAL Industries Colombo 12 T.P. 0777277670

அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:

ஸ்ரீ சிவா நறுமணப் பூங்கா

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


# சைக்கிள் திருட முற்பட்டவர் இளைஞர்களிடம் பிடிபட்டார்

யாழ்ப்பாணம், செப். 7

வீட்டு முற்றத்தில் நிறுத்திவைக்கப் பட்டிருந்த சைக்கிளைத் திருடிச் செல்ல முயன்றவர் அயலவரின் உதவியால் பிடிபட்டார்.

இச்சம்பவம் நல்லூர், செட்டித்தெருவில் அமைந்துள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளது.

முற்றத்தில் நிறுத்தப்பட்டுள்ள சைக்கிளைத் திருடிச் சென்று தப்பிக்க முற்பட்ட திருடனைக் கண்ணுற்ற வீட்டுக்காரர் கூக்குரலிட்டு சத்தமிட்டு அயலவரை உதவிக்கு அழைத்த போது வீதியில் நின்ற இளைஞர்கள் சிலர் மோட்டார் சைக்கிளில் துரத்திச் சென்று திருடனை மடக்கிப் பிடித்தனர். (201-45)

# தேங்காய் விலை வீழ்ச்சி

யாழ்ப்பாணம், செப். 7

தென்பகுதியில் இருந்து தரைப்பாதையூடாக தேங்காய்கள் கனரக வாகனங்களில் குடாநாட்டுக்கு எடுத்து வரப்படுகின்றன.

பெருமளவு தேங்காய்கள் எடுத்து வரப்பட்டதால் அதன் விலைகளும் திடீரென வீழ்ச்சியடைந்து காணப்படுகின்றன.

இதற்கு முன்னர் 25 ரூபாவாக விற்கப்பட்ட தேங்காய் ஒன்று தற்போது 15 ரூபாவாக வீழ்ச்சியடைந்து காணப்படுகின்றது.

இதனைவிட தென்மராட்சிப் பகுதி மற்றும் தீவுப் பகுதியில் இருந்தும் தினமும் பெருமளவு தேங்காய்கள் யாழ். நகருக்குவிற்பனைக்காகக் கொண்டு வ்ரப்படுகின்றன. (201-224)


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

1119 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

இடபம் 19 25 32 36

04-09-2009

ஜக்பொட் பரிசு ரூபா. 3,946,450/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 155,4-5 | 20/- | 3,108,900/- |
| 2 இலக்கங்கள் | 14,327 | 40/- | 573,080/- |
| 1 இல. + லக்கினம் | 14,096 | 60/- | 845,760/- |
| 2 இல. + லக்கினம் | 1,304 | 200/- | 260,800/- |
| 3 இலக்கங்கள் | 387 | 1000/- | 387,000/- |
| 3 இல. + லக்கினம் | 38 | 10,000/- | 380,000/- |
| 4 இலக்கங்கள் | 1 | 200,000/- | 200,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 3,946,450/- | - |
| மொத்தம் | | | 5,755,540/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 185,603 | | 6,255,540/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 4,640,700/-

ஆலிந்தயே வாசனாவ

தங்கக்காசு வெற்றியாளர் : சந்திக கெலும் ராஜபக்ஷ மீரிகம

கைத்தொலைபேசி வெற்றியாளர்: ரி.ஜீ.என்.மல்காந்தி கொழுபிலேகெதர

2009 செப்டம்பர் 08 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நில நிற டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| குருநாகல் | 500484036-4-04 |
| இரத்தினபுரி | 500482226-5-33 |
| கேகாலை | 500481668-9-47 |
| புத்தளம் | 500477052-4-40 |
| அம்பாறை | 500480714-2-03 |


# இளவாலை- முள்ளானை

## கூத்துமாலை ஒடை ஸ்ரீபாலவிநாயகர் ஆலயம்

கும்பாபிஷேக தின சங்காபிஷேக விஞ்ஞாபனம் 1008

விநாயகப் பெருமான் அடியார்களே!

நிகழும் மங்களகரமான விரோதிவருடம் ஆவணி மாதம் 23ஆம் நாள் நாளை (08.09.2009) செவ்வாய்க்கிழமை அச்சுவினி நட்சத்திரமும் சங்கடஹர சதுர்த்தியும் கூடிய நேரமாகிய காலை 7 மணி முதல் சங்காபிஷேகம் ஆரம்பமாகி அதனைத் தொடர்ந்து விநாய வழிபாடு, யாகபூஜை, தீபாராதனை இடம்பெற்று விநாயகப் பெருமானுக்கும் வைரவப் பெருமானுக்கும் சங்காபிஷேகம் இடம்பெறத் திருவருள் கைகூடியுள்ளது. தொடர்ந்து விசேடபூஜையும் மகேஸ்வரபூஜையும் (அன்னதானம்) இடம்பெறும். அன்றைய தினம் விநாயகப் பெருமான் அடியார்கள் அனைவரும் வருகை தந்து எம்பெருமானின் திருவருளைப் பெற்று உய்யும் வண்ணம் வேண்டுகின்றோம். அன்றையதினம் மாலை 5 மணிக்கு சாயரட்சை பூஜை ஆரம்பமாகி தொடர்ந்து வசந்தமண்டபப் பூஜை, திருவூஞ்சல் இடம்பெற்று எம்பெருமான் அழகிய பூந்தண்டிகையில் வீதியுலா வருவார்.


(88627)

சங்காபிஷேக உபயம்
5ஆம் திருவிழா உபயகாரர்கள்.

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 05.01.1910

உதிர்வு 31.05.2008





மண்ணில் 05.06.1920

விண்ணில் 19.08.2008

அமரர் சின்னையா செல்லத்துரை
திதி: துவாதசி

திருமதி செல்லத்துரை திரவியம்
திதி: திருதியை

ஆண்டொன்று ஆனாலும் ஆறவில்லை எம் மனம்
காலங்கள் கடந்தாலும் காலம் எல்லாம் வாழ்ந்திடும்
எழுதி வைத்த ஓவியமாய் எம்முடன் வாழ்ந்திடுவீர்.

சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி. (88509) குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டுநினைவஞ்சலி

மலர்வு 11 ★ 01 ★ 1959

உதிர்வு 07 ★ 09 ★ 2008




அமரர் மார்க்கண்டு செல்வராஜா

பாசத்தின் பிறப்பிடமாய்
தருமத்தின் உறைவிடமாய்
வாசமலராய் வாடாத மாமலராய்
வாழ்ந்து வழி காட்டிய எமது
குடும்பத்தலைவரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

டச் றோட்,
உடுவில்,
சுன்னாகம்.

பிரிவால் துயருறும்:
மனைவி: ஜெயந்தி,
பிள்ளைகள்: கிசோந், சர்மி

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



நடராசலிங்கம்

கேமளன் (மயூரன்)

(புடைவைக்கடை உரிமையாளர்)

திதி: திருதியை

அன்னையின் மடியில் 14.08.1981

முருகனின் பாதத்தில் 31.08.2007

பூவுலகில் என்னை படைத்த கடவுளே!
இப் புவி மீது நான் உந்தனுக்குப் பாரமா?
உன் பணி என்றவுடன் சிரம் தாழ்த்திச் செய்வேனே
என் பணி தன்னில் குற்றமா! ஏது கண்டீர்?
என் குடும்பம் சிறந்திட நல்ல தாய், தந்தை, மாமா, மாமி
கூடிக் குலாவிட மூன்று சகோதரம் தந்தாய்
பாசமாய் வாழ்ந்திட ஐந்து மைத்துனர்கள் தந்தாய்
என் மனம் போல மனையாளை தந்தாய்
கொஞ்சிக் குலாவிட பிஞ்சுகள் இரண்டு தந்தாய்
மழலையின் மொழி கேட்டு இன்புற இரு மருமக்கள் தந்தாய்
தொலைபேசியில் பாசம் பொழிய நான்கு பெறாமக்கள் தந்தாய்
மனம்தான் பொறுக்காத என்னை ஏன் நீ பிரித்தாய்?

(88622)

நிரந்தர முகவரி:- எழுதுமட்டுவாழ் தெற்கு, எழுதுமட்டுவாழ்.
தற்காலிக முகவரி: கண்டுவில் லேன், சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்றிக் காய்ச்சலும் பயண அச்சமும்

கேள்வி : எனது மகனுக்கு 5 வயது. அடுத்தடுத்து இரண்டு தடவைகள் அவருக்கு சிறுநீர் தொற்று ஏற்பட்டுவிட்டது. மருந்துகள் கொடுத்து நோய் குணமாக்கப்பட்டாலும் - ஸ்கேன் பரிசோதனை செய்து பார்க்கப்பட்டபோது, இடது சிறுநீரகம் அதன் வெளியேறும், பகுதியில் (Calyces) வீக்கம் அடைந்து காணப்பட்டது. டாக்டர் - மேலும் விசேட ஸ்கேன் பரிசோதனை, இரசாயனப் பரிசோதனைகளுக்கு பரிந்துரைத்துள்ளார். ஆனால் எனது குடும்ப டாக்டர் இந்தப் பரிசோதனை ஒன்றும் தேவையில்லை. ஆண் உறுப்பின் முன்தோல் நீக்கும் Circumcission சிகிச்சை செய்தால் போதும் என்கின்றார். உங்கள் கருத்து என்ன?

பதில் : பொதுவாகவே சிறுவர்களுக்கு சிறுநீர் தொற்று அடிக்கடி ஏற்படுவது அபூர்வமானது. அப்படி ஏற்பட்டால் சிறுநீர் பாதையில் ஏதாவது அமைப்பு கோளாறு - (Anatomical Abnormalities) இருக்கலாம் என்று மருத்துவர்கள் சந்தேகப்படுவார்கள். சிறுநீர்ப் பாதையில் அடைப்பு, அல்லது சிறுநீர் இலகுவாக செல்லமுடியாத தடை ஏதும் இருப்பின் - சிறுநீர் போகமுயலும்போது Back Pressure எனப்படும் பின் அழுத்தம் காரணமாக - சிறுநீர், சிறுநீர் சிறுகுழாயை துளைத்து (Ureter) சிறுநீரகத்தை வீங்கச் செய்யும். இதனை Hydronephros என்று அழைப்பர். இதனைச் சரியான படி கவனித்து சிகிச்சையளிக்காவிடில் அந்தச் சிறுநீரகம் - கெட்டுப்போக இடமுண்டு.

எனவேதான் சிறுவர்களுக்கு அடிக்கடி சிறுநீர் தொற்று ஏற்படும்பொழுது மருத்துவர்கள் மிகக் கவனம் எடுத்து - இரத்தப் பரிசோதனைகள், ஸ்கேன் பரிசோதனைகள் செய்வது வழக்கம். உங்கள் வைத்தியரும் சரியான பாதையில் தான் சிகிச்சை அளித்திருக்கிறார். 'பாதி ஆற்றைக் கடந்த' நீங்கள், மீதி பாதி ஆற்றையும் கடந்துவிடுவதுதான் புத்திசாலித்தனம். அல்லாவிடில் இன்னொரு வைத்தியர் இத்தனை பரிசோதனைகளையும் திரும்பவும் ஆரம்பத்திலிருந்து செய்வார். அது பரவாயில்லையே. உங்கள் மகனுக்கு நான் முன்னர் கூறிய அமைப்புக் கோளாறு இருக்குமானால் காலம் கடத்துவது பெரிய பிரச்சினையை உருவாக்கும்.

உங்கள் குடும்ப வைத்தியரும் ஒரு வகையில் இதை சரி என்று கூறலாம். சில சிறுவர்களுக்கு ஆண் உறுப்பின் முன்தோல் இறுக்கமாக இருப்பதால் சிறுநீர் கழிப்பது. கஷ்டமாக இருக்கும். இதனாலும் சிறுநீர் தொற்று ஏற்படலாம். இதனை Phimosis என்பார்கள். இதற்குச் சிகிச்சை Circumcission என்கின்ற சிறு சத்திரசிகிச்சைதான்.

ஆ... முன்னர் உங்கள் மகனைப் பரிசோதித்த டாக்டர் - நிச்சயம், இந்த விஷயத்தையும் கவனித்திருப்பார் என்பதில் சந்தேகமில்லை. எனவே நீங்கள் ஸ்கேன் மற்றும் பரிசோதனைகளை செய்வது அவசியம் என்றே எனக்குத் தோன்றுகிறது.

கேள்வி : ஆண் வயது 50. சுகதேகி. எனக்கு மது, புகைத்தல் எதுவித கெட்ட பழக்கமும் இல்லை. நான் அசைவ உணவுகளை உண்பதும் இல்லை. Vegetarian. எனது உணவில் எடுக்கும் புரதச்சத்து போதாது என்று எனது வைத்தியர் கூறுகின்றார். பொதுவாக எந்தப் புரதவகை உணவு வகைகளை நான் சேர்க்கவேண்டும்?

பதில் : சாதாரண மனிதர்கள் உண்ணும் உணவில் 50 வீதம் காபோவைதரேற்று என்ற மாச்சத்தும், 20 வீதம் கொழுப்புச் சத்தும், 30 வீதம் புரதச் சத்தும் கொண்டதாக இருக்கவேண்டும்.

உடலுக்குத் தேவையான சக்தி - அதிகளவில் மாச்சத்திலிருந்தும், கொழுப்பிலிருந்தும் பெறப்படுகிறது. தசைகளின் வளர்ச்சி, நிறை என்பவற்றுக்கும், உடலியக்கத்திற்குத் தேவையான நொதியங்களின் உற்பத்திக்கும் தேவையான இரும்புச்சத்து, ஒட்சிசன் என்பவற்றை காவிச்செல்லுவதும் புரதம் தான்.


இது தவிர தசைகளின் நார்கள், Cartrage எனப்படும் மென் எலும்பு, தசைகளின் இழுவைத்தன்மைக்குரிய எலாஸ்ரின் (Elastin), தலைமயிர் நகம் என்பவற்றின் Keratin ஆகியவற்றுக்கு புரதச்சத்து அவசியம். இதுதவிர நோய் எதிர்ப்புக்குரிய Anti Bodies மற்றும் Immunoglobin சக்திக்கு - புரதம் மிகவும் அவசியமாவது உடலின் ஹோர்மோன்கள் உற்பத்தியும் புரதச் சத்தில் தங்கியுள்ளது.

இவ்வளவு முக்கியமான புரதச்சத்தை காய்கறி, கீரை, பால் போன்ற சைவ உணவுகள் மூலமும் - விலங்கு புரதம் முட்டை போன்ற அசைவ உணவுகள் மூலமும் பெற முடியும்.

இலவச மருத்துவ ஆலோசனை பெறுங்கள்
நீங்களும் கேள்விகளை அனுப்பி மருத்துவ ஆலோசனைகளைப் பெறலாம்.
நீண்ட கால அனுபவம் உள்ள பிரபல டாக்டரும் சிந்தனையாளருமான
டாக்டர் எஸ்.அருள்ராமலிங்கம்
பதில் தருகிறார்.
இலவச மருத்துவ ஆலோசனை
உதயன்
381, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நீங்கள் அசைவ உணவு சாப்பிடாதவராக இருப்பதனால் - பயறு, கடலை, குரக்கன் போன்ற தானியங்கள், சோயா அவரை, பருப்பு வகைகள் மற்றும் பால், பால் சம்பந்தப்பட்ட உணவு வகைகள் ஆகியவற்றில் இருந்தே புரதச்சத்தைப் பெறவேண்டியவராக இருக்கின்றீர்கள். உங்கள் உணவில் தயிர் மற்றும் பன்னீர் என்கின்ற பால் சம்பந்தப்பட்ட உணவு, Tofu என்கின்ற சோயா தயிர் சேர்க்கவும். வறுத்த கடலைப் பருப்பிலும் புரதம் உண்டு. எனவே இந்த வகையில் உணவு முறையை மேற்கொள்ளவும்.

கேள்வி : வயது 60 ஆண். அடுத்த மாதம் - அவுஸ்திரேலியாவுக்கு எனது மகளைப் பார்க்கச் செல்லவுள்ளேன். அங்கு எனது உறவினர்களும் இருப்பதால் அவர்களையும் இந்தப் பயணத்தின் போது சந்திக்க விருப்பம் கொண்டு அவர்களுக்குத் தெரிவித்தேன். அவர்கள் - இந்தக் காலங்களில் 'பன்றிக்காய்ச்சல்' பரவிக்கொண்டிருப்பதால் நான் அவுஸ்திரேலியாவை அடைந்து - இரண்டு வாரங்களுக்கு மகள் வீட்டில் நின்ற பின்னர்தான் தங்களைப்பார்க்க வரும்படி அறிவுறுத்துகின்றார்கள். எனக்கு இருப்பதோ ஒருமாத விடுமுறை. இந்தளவுக்கு இவர்கள் பயப்படும் அளவுக்கு என் மூலம் பன்றிக்காய்ச்சல் தொற்றுமா?



பதில் : 'பன்றிக்காய்ச்சல்' இன்று உலக மக்களிடையே - தேவையற்ற பீதியை ஏற்படுத்திக்கொண்டிருப்பதாக அனேகமான மருத்துவர்கள் நம்புகின்றார்கள். முதலில் இதற்கு பன்றிக்காய்ச்சல் (Swine Flu) என்ற பெயரே பொருத்தமில்லை என்று சொல்லி Novel Flu (புதுமையான சளிக்காய்ச்சல்) என்று பெயர் மாற்றியுள்ளார்கள்.

உண்மையில் பன்றிகளுக்குவரும் இன்புளுவன்சா காய்ச்சல் வைரஸ் கிருமி, பறவைக்காய்ச்சல் வைரஸ் கிருமி, மனித இன்புளுவன்சா காய்ச்சல் வைரஸ் கிருமி ஆகிய மூன்றினதும் கலப்பின் அவதாரம்தான் இந்த Novel Flu. சாதாரண இன்புளுவன்சா காய்ச்சல் போன்றதொரு சளிக்காய்ச்சல் தான் Novel Flu. ஆனால் சாதாரண சளிக்காய்ச்சல் இந்த 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் - காட்டுத் தீ போல் பரவி - பல கோடி மக்களைப் பலியெடுத்தது என்னவோ உண்மைதான்.

அதற்குக் காரணம் - அந்த சளிக் காய்ச்சல் பரவும் காலத்தில் வாழ்ந்த மக்களுக்கு இந்த வைரஸ் கிருமிக்கு எதிர்ப்பு சக்தி இருக்கவில்லை. அதனால் நோய்க்குத் தாக்குப் பிடிக்காமல் கோடிக்கணக்கில் மாய்ந்துபோனார்கள். அதன்பின்னர் இந்த இன்புளுவன்சா எத்தனையோதரம் 'விசிட்' அடித்தும் - பெரிய பாதிப்பு ஏற்படவில்லை. இந்த இன்புளுவன்சாவுக்கு தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப்பட்டதும் இதற்கு ஒரு காரணம்.

இன்றும் - குளிர்காலம் வருகின்றதென்றால் மேற்கு நாடுகளில் வாழும் மக்கள் மறந்திடாமல் 'Flu Shot' என்ற பெயரில் தடுப்பூசி போட்டுக்கொள்ளும் பழக்கத்தைக் கைவிடுவதில்லை.


எமது Novel Fluவும் பழைய இன்புளுவன்சா காய்ச்சலைப் போல் தடுப்பு சக்தி இல்லாத சூழ்நிலையில் பரவிக் கொண்டிருப்பதால்தான் - பல்லாயிரக்கணக்கான மக்கள் பீடிக்கப்படுவதும், நூற்றுக்கணக்கான மனிதர் மரணித்துக்கொண்டிருப்பதும் நடந்து கொண்டிருக்கின்றது. இந்த இன்புளுவன்சா காய்ச்சலும், காற்றினால் பரவும் முறையும் வேகமானது. என்றாலும் தொற்றுநோய்போல் முன்னர் பரவிய இன்புளுவன்சா காய்ச்சலைப்போன்ற பாதிப்பு இன்றும் ஏற்படவில்லை. சுகாதார முறைகள், தனிமனித சுகாதாரம், தடுப்பு மருந்துகள் என்பவற்றால் இதன் அகோரம் ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.


இந்த Novel Flu பரவுவதற்கு துணைபோகும் விடயம் - விமானப்பயணம் - எனவேதான் - நாடுகள் விமான நிலையங்களில் நோய்க்குறி கண்ட நபர்களை இரண்டுவார காலம் தனியே தடுத்து வைத்து (இதனை குவாரண்டைன் Quarantine என்பார்கள்) சுகம் பெற்றதும் வெளியில் வருகின்றார்கள்.

Novel Flu - தொற்றினால் சூழலிலிருந்து 10 நாள்கள் வெளியில் வரும். அதனால்தான் உங்கள் உறவினர்கள் உங்களுக்கு தாங்களாகவே குவாரண்டைன் கொடுத்திருக்கிறார்கள். அவர்களின் பயத்துக்கு இன்னொரு காரணமும் உள்ளது. எமது பக்கத்து நாடான இந்தியாவில் இன்று இந்த Novel Flu கடைவிரித்திருக்கிறது. எனவே - பின்புற வழியாக - இலங்கைக்கு வந்து - உங்கள் மூலம் அவுஸ்திரேலியாவுக்கு - முக்கியமாக தங்கள் குடும்பத்துக்குள் - புகுந்துவிடுமோ என்ற பயம்தான் இந்தத் தற்பாதுகாப்பு ஏற்பாடு. தற்செயலாக நீங்கள் அவர்களைப் பார்த்து வந்த பின்னர் - எங்கிருந்தோ Novel Flu அந்த குடும்பத்தில் வந்துவிட்டால் - உங்களுக்கும் மனக்கஷ்டமாக இருக்கும். வீண் ப்ழியும் வந்துசேரும். எனவே அவர்கள் எதிர்பார்ப்பு போல நடந்துகொள்ளுங்கள்.

ஒரு விடயத்தை அவர்கள் மறைத்துவிட்டார்கள். வேண்டும் என்றால் நீங்கள் குத்திக்காட்டாமல் நினைவுபடுத்தலாம். இதுவரை - இலங்கையிலிருந்து பன்றிக்காய்ச்சல் எனப்படும் Novel Flu எந்த நாட்டுக்கும் பரவவில்லை. ஆனால் இலங்கைக்கு வந்த Novel Flu நோயாளர்கள் - முதல் நோயாளியிலிருந்து அத்தனை பேரும் அவுஸ்திரேலியாவில் வாழ்ந்த எமது இனத்தினரே என்பது மறுக்க முடியாத உண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நவாலி அந்திரனை முருகமூர்த்தி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா அன்று முருகப்பெருமான் தேருக்கு எழுந்தருளி வருவதையும் தேரில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள் பாலிப்பதையும் படங் களில் காணலாம். (100)

# உலக உணவுத் தாபனத்தினூடாக இந்தியா உணவுப் பொருள்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், செப்.07

இலங்கையின் வடக்கு, கிழக்கில் இடம் பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள மக் களுக்காக வாசனைத் திரவியங்கள் அடங்கிய உணவுப் பொருள்களை இந்தியா, உலக உணவு தாபனத்தினூடாக அன்பளிப்பு செய்துள்ளது.

உலக உணவுத்தாபனம் தனது உள்ளூர் முகவர் நிலையத்துடன் இணைந்து இவற்றை ஐ.நா. மனித உரிமை அமைப்பிடம் கையளித்துள்ளது. இதில் மிளகாய்த்தூள், மிளகு, வெந்தயம் உள்ளிட்ட வாசனைத்திர வியங்களும் அடங்குகின்றன.

வாரம் ஒன்றுக்கு 900 மெட்ரிக் தொன் உண வுப்பொருள்களை, உலக உணவுத் தாபனம், இடம்பெயர் முகாம்களிலுள்ள 270,000 மக்களுக்குத் தற்போது வழங்கி வருகின்றது.

இது தவிர, மேற்படி முகவர் நிலையம் நாட்டின் பல்வேறு பகுதிகளில் பல திட்டங் களை முன்னெடுத்து ஏராளமான உதவி களை வழங்கி வருகின்றது. பாடசாலை சிறுவருக்கு உணவு, தாய்-சேய் நலன் மற் றும் போஷாக்குணவு வழங்கல் போன் றவை அவற்றில் சிலவாகும். (203)

## யாழ்.பிரதேச செயலக மோட்டார் சைக்கிள் பாவனையாளர் கவனத்துக்கு

யாழ்.மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்துக்கு யாழ்.பிரதேச செயல கமூடாகக் கடந்த 2008ஆம் ஆண்டிலோ அல்லது அதற்கு முன்னரோ மோட்டார் வாகன ஆவணங்கள் பெறுவது தொடர் பான விண்ணப்பங்கள் அனுப்பி ஆவணங் களை இதுவரை பெற்றுக்கொள்ளாத உரி மையாளர்களைத் தமது முழுமையான தக வல்களுடன் பிரதேச செயலக மோட்டார் போக்குவரத்துப் பிரிவுக்கு இன்று உரிய ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு யாழ்.பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

மோட்டார் வாகன பதிவுப் புத்தகம் கிடைக் கப் பெறாதோர், சாரதி அனுமதிப்பத்திரப் பிரதி கிடைக்கப் பெறாதோர், வாகன இலக் கத்தகடு கிடைக்கப் பெறாதோர் போன்ற வர்கள் உரிய ஆவணங்களுடன் சமுகமளிக் குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (201)

## திருமண வாழ்த்து



நிகழும் விரோதி வருஷம் ஆவணித் திங்கள் 22ஆம் நாள் இன்று (07.09.2009) திங்கட்கிழமை திருமண பந்தத்தில் இணையவிருக்கும்

திரு.திருமதி விநாயகமூர்த்தி - மனோன்மணி தம்பதியரின் புதல்வன் திருவளர் செல்வன் உதய சங்கர் அவர்களும்

திரு.திருமதி கணேசன் - புவனேஸ்வரி தம்பதியரின் புதல்வி திருவளர் செல்வி விஜிதா அவர்களும்

தம்பதிகளாக பல்லாண்டு காலங்கள் பதினாறும் பெற்று எல்லாம்வல்ல நுணாவில் குளம் அம்மன் அருளுடன் பெரு வாழ்வு வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: அம்மப்பா, அம்மம்மா,
சுந்தரலிங்கம் குடும்பத்தினர் (சின்னமாமா),
கனகலிங்கம் குடும்பத்தினர் (பெரியசித்தப்பா)

நுணாவில் சந்தி,
சாவகச்சேரி.

(88631)

# அணுதொழில்நுட்பத்தை இலங்கையுடன் பகிர இந்தியா முன்வந்துள்ளதாக திசவிதாரண தெரிவிப்பு

கொழும்பு, செப்.07

இலங்கையுடன் தனது அணுதொழில் நுட்பத் தைப்பகிர்ந்து கொள்வதற்கு இந் தியா முன்வந்திருப்பதாக சிறிலங்காவின் விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் திச விதாரன தெரிவித்திருக்கின்றார்.

தோரியத்தைப் பிரதான மூலப் பொருளாகப் பயன்படுத்தி மின்சக்தியை உற்பத்தி செய்வதற்கே இந்தத் தொழில் நுட்பம் பயன்படுத்தப்படும் எனவும் அமைச்சர் அறிவித்திருக்கின்றார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ள தாவது:

இது தொடர்பான சாத்திய ஆய்வு ஒன்றை மேற்கொள்வதற்கு வருமாறு இந் திய அணுசக்தி விஞ்ஞானிகளுக்குத் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. தென் கரையோரப் பகுதிகளில் தாராளமாகக் காணப்படும் தோரியத்தைப் பயன்படுத்தி மின்சக்தியை உற்பத்தி செய்வது தொடர்பாகவே இந்தியத் தரப்பினருடன் ஆராயப்படவுள்ளது.

இது தொடர்பாக மேற்கொள்ளப்படவிருக் கும் சாத்திய ஆய்வில், இதற்கான செலவீனம், அணு பொருள்களைப் பயன்படுத்துவதில் உள்ள பாதுகாப்புப் பிரச்சினை, கழிவுகளைப் பாதுகாப்பாக அகற்றுதல் என்பன தொடர் பாகவும் ஆராயப்படும்.



இது தொடர்பாக இந்தியத் தரப்பின ருடன் தான் பயனுள்ள பேச்சுக்களை ஜெனீ வாவில் மேற்கொண்டதாகவும் தெரிவித்தார்.

தோரியத்தை மின்சக்திக்கான பிரதான மூலப்பொருளாகப் பயன்படுத்துவதில் சிறிலங்காவுக்கு உதவுவதற்கு இந்தியா தயாராக இருப்பதாகத் தெரிவித்த அமைச்சர், அணுசக்தியை உற்பத்தி செய்வதில் இந்தியா தூரியத்தை வெற்றிகரமாகப் பயன்படுத்தி இருப்பதால் அது தொடர்பான தொழில்நுட்பத்தை இலங்கையுடன் பகிர்ந்து கொள்வதற்கும் அந்நாடு முன்வந்திருப்பதாகவும் தெரிவித்தார்.(203)

## தார்பரல்கள் எடுத்து வரப்பட்டன

யாழ்ப்பாணம், செப். 07

வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு ஒரு தொகுதி தார் பரல் கள் எடுத்து வரப்பட்டுள்ளன.

இந்தத் தார் பரல்கள் ஏ-9 தரைப்பாதையூடாக கனரக வாகனங் களில் கொண்டு வரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (203-224)

## பொன்னாலை சப்பரத் திருவிழாவில் பெருமளவானோர் கலந்துகொண்டனர்

யாழ்ப்பாணம், செப்.07

பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் சப்பரத்திருவிழாவின்போது பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

மின்வெளிச்சம் பொருத்தப்பட்ட கட் டுச் சப்பரத்தில் நாராயண சுவாமி பவனி வந்து அடியவர்களுக்கு அருள்காட்சி கொடுத்தார். கடந்த காலங்களில் நடை பெற்ற திருவிழாவை விட இவ்வருடம் இடம்பெற்ற இரவுத் திருவிழா காலங்களில் பெருந்திரளான அடியவர்கள் கலந்து கொண்டு வழிபாட்டில் ஈடுபட்டனர்.

இதேவேளை ஆலய வழிபாட்டில் முன்பு இருந்த நேரக்கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட் டு ஆலயத்துக்கு மக்கள் வருவதற்கு இலகு வாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக் கது. (201-28)

## ஆதார சொரூபி



அமரர்: சோபிகா முகுந்தன்

மலர்வு 09.03.1997 உதிர்வு 08.08.2009

அவர்களின்: 31ம் நாள் நினைவஞ்சலி

எங்கள் இதய சோபியே
சோதியாய் இருந்திங்கே
சுடர்விட்டு ஒளிர்ந்தாயே
சோபியே! சுகியே! சுகிமணியே!
போனீரையோ பொன்னுலகம் காண.

இல.129,
கண்டிவீதி, வவுனியா.
07.09.2009

ஜெயதாசன் குடும்பம்
முகுந்தன் (பலாலி)
வசந்தி (கொல்லங்கலட்டி)

## முதலாம் ஆண்டு நினைவு நாள்



மகிழ்வுடன் 12 ★ 12 ★ 1944

மண்ணுடன் 19 ★ 08 ★ 2008

திருமதி லீலரோஜினி (புவனம்) இராஜகோபாலு

திதி: திருதியை (07.09.2009)

சங்கத்தானை எனும் ஊரில்
வந்துதித்த உத்தமியே
பாசத்துடன் பரிவு காட்டிய
பண்பின் சிகரமே
ஆண்டொன்று ஆனாலும்
ஆறாது எம் துயரம்
உங்கள் ஆத்ம சாந்திக்காக
இறைவனை வேண்டுகிறோம்.

மீனாட்சி அம்மன் கோயிலடி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

## ஈராண்டு நினைவலைகள்



தாயின் மடியில் 04 ★ 03 ★ 1941

இறைவனடியில் 07 ★ 09 ★ 2007

அமரர் பதஞ்சலி ஆனந்த மகேஸ்வரன்

(ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர் - ஆங்கிலம்)

மென்மையான அன்பும் மேன்மையான அரவணைப்பும்
உண்மையான உறவும் தந்த எமதருமை அப்பாவே!
இன்முகத்துடன் எல்லோர் உள்ளத்திலும் இடம் பிடித்தீர்கள்
இன்று எம் கைகளில் தவழ்கிறீர்கள்
உங்களின் பிள்ளையின் பிள்ளையாய்.

என்றும்நினைவுடன்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
அக்ஷயன், அபிசன் (பேரன்மார்).

மயூர பவனம், உடுவில்,
சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







யாழ்ப்பாணம் நவீன சந்தையில் ஆயுர்வேத மருந்துகள் விற்பனை நிலையத் திறப்புவிழா நேற்று இடம்பெற்றது.

அமைச்சர் திஸ்ஸ ஹரலியத்த மங்கள விளக்கேற்றுவதையும் அமைச்சர் ஹரலியத்த ஆயுர்வேத கூட்டுத்தாபனத்தின் தலைவர் சோமவீர சந்திரசிறி, சுகாதார வைத்திய அமைச்சின் செயலாளர் அசோகா பீரிஸ் ஆகியோர் விற்பனை நிலையத்தைத் திறந்து வைப்பதையும் முதல் இரண்டு படங்களிலும் காணலாம்.

யாழ். மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ, அரச அதிபர் கே.கணேஷ் மற்றும் அதிகாரிகள் அமைச்சர்களுடன் நிற்பதையும் ஆயுர்வேத கூட்டுத்தாபனதத்தின் தலைவர் சோமவீர சந்திரசிறி, சுகாதார வைத்திய அமைச்சின் செயலாளர் அசோகா பீரிஸ், அமைச்சர் திஸ்ஸ ஹரலியத்த, வைத்திய கலாநிதி சிவராஜா ஆகியோர் உரையாற்றுவதையும் ஏனைய படங்களில் காணலாம்.

*(படங்கள்: லக்ஸ்மன்)*

## நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண விநியோகத்தில் தாமதம்

யாழ்ப்பாணம். செப்.07

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்கள், வவுனியா நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவிகள் சீராகக் கிடைக்கவில்லையென இடம்பெயர்ந்த மக்களினால் தெரிவிக்கப்படுகின்றது.

இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் இருந்து அழைத்துவரப்பட்டு உடனடியாகப் பங்கீட்டு அட்டைகள் வழங்கப்பட்ட போதிலும் உலர் உணவு நிவாரண பொருள்களைப் பெறும்விடயத்தில் கால தாமதம் ஏற்படுத்தப்பட்டு வருவதாக கவலை தெரிவிக்கின்றார்கள்.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையில் ஒருவர், இருவர் என மிகவும் மட்டுப்படுத்திய குடும்பங்களுக்கு பல கிளைகளிலும் வைத்து பொருள்களை வழங்குவதும் இதற்கென லொறிகளை சேவையில் ஈடுபடுத்துவதும் சிரமத்துக்குரிய விடயம் என்றும் சுட்டிக்காட்டப் படுகின்றது.

இந்த நிலைமையில் பிரதேச செயலாளர்கள், உதவி அரசாங்க அதிபர் அலுவலங்களில் பொதுமக்கள் கொண்டு வந்து இறக்கப்பட்டு பங்கீட்டு அட்டைகள் வழங்கப்படுவதைப் போன்று ஒரு வாரத்துக்கு வேண்டிய உணவுப் பொருள்களையும் பொதிசெய்து உரியவர்களிடம் கையளித்தால் இடம் பெயர்ந்து உறவினர்களின் வீடுகளை நம்பிவரும் மக்களுக்கு சற்று ஆறுதலாகவும் இருக்கும் என்று குறிப்பிட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

(203-68-207)

## கட்டாக்காலி கால்நடை பிடிகாரருக்கான கூலிகள் தேசவள சம்மேளனம் அறிவிப்பு

யாழ்ப்பாணம். செப்.7

கட்டாக்காலி கால்நடைகள் பிடிக்கும் பிடிகாரருக்கான கூலியை யாழ்.மாவட்ட தேசவள விவசாயிகள் சம்மேளனம் அறிவித்துள்ளது.

கட்டாக்காலி மாடு ஒன்றினை பிடிப்பதற்கு 100 ரூபாவும், ஆடு ஒன்றியைப் பிடிக்க 50 ரூபாவும் அறவிடப்பட்டு பிடி கூலியாக உடன் சம்பந்தப்பட்டவருக்கு வழங்கப்படவுள்ளது.

இதே வேளை மாடு ஒன்று கட்டாக்காலியாகப் பிடிக்கப்பட்டு பராமரிப்பு செலவாக நாள் ஒன்றுக்கு 50 ரூபாவும், ஆடு ஒன்றுக்கு 25 ரூபாவும் அறவிடப்படும்.

பெரும்போக விதைப்புக்கான இந்நேரத்தில் விவசாய சம்மேளனத் தலைவர் - செயலாளர்களால் கட்டாக்காலி பிடிகாரர்கள் நியமிக்கப்பட்டு அவர்களுக்கான சட்ட ரீதியான நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன. எதிர்வரும் 16 ஆம் திகதி பொது விதைப்பு நாளாகவும் 15.10.2009 விதைப்பு முடிவடையும் திகதியாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (203-302)

## வவுனியா நலன்புரி நிலையப் பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ள ஆசிரியர்கள் அனைவரும் குறித்த காலப்பகுதிக்குள் கடமையைப் பொறுப்பேற்க வேண்டும்

அச்சுவேலி, செப். 7

வவுனியா நலன்புரி நிலையப் பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ள ஆசிரியர்கள் குறித்த காலப்பகுதியில் தமது கடமைப் பொறுப்புக்களை ஏற்று மனநிறைவோடும் அர்ப்பணிப்போடும் தமது சேவையைத் தொடரவேண்டும்.

இதுவரைகாலமும் பெற்றுக்கொண்ட யாழ்.மாவட்ட தற்காலிக இணைப்பை மேலும் தொடரவேண்டும் எனக் கோரிக்கை விடுவது மனச்சாட்சிக்கு விரோதமானதும் நடைமுறைக்கு அப்பாற்பட்டதுமாகும். அத்தகைய கோரிக்கையை முன்வைத்து தாமதிப்பதில் அர்த்தமில்லை.

இவ்வாறு கூறினார் வடக்கு மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்:

தற்காலிகமாக இணைப்புச் செய்யப்பட்டவர்களை முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களின் தேவை கருதி தற்காலிக இணைப்பை இரத்துச் செய்து நியமனம் பெற்ற வகையில் சேவை ஆற்ற அழைப்பது என்பது வடக்கு மாகாண நிர்மாண உயர்மட்டத்தால் மேற்கொள்ளப்பட்ட உறுதியான முடிவாகும்.

தற்காலிக இணைப்புச் செய்யப்பட்டவர்கள் தொடர்ந்து அந்த வகையில் கடமை புரிய அனுமதிப்பதனால் யுத்த அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் எந்தவிதமான அபிவிருத்திப் பணிகளையும் மேற்கொள்ள முடியாத நிலையை ஏற்படுத்தி விடும்.

தற்காலிக இணைப்புச் செய்யப்பட்ட ஆசிரியர்களின் இணைப்பு மட்டும் இரத்துச் செய்யப்படவில்லை.

சகல திணைக்களங்களினதும் ஊழியர்களின் தற்காலிக இணைப்புக்களும் தேவைக்கு ஏற்ப இரத்துச் செய்யப்பட்டுள்ளன என்பதை ஆசிரியர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

முதற்கட்டமாகக் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடத்துறைகளைச் சேர்ந்த ஆசிரியர்களின் தற்காலிக இணைப்புக்கள் இரத்துச் செய்ப்பட்டுள்ளன.

தேவையைக் கருத்தில்கொண்டு ஏனைய பாடத்துறையினரின் இணைப்புக்களும் இரத்துச் செய்யப்படவுள்ளன.

இழக்கக்கூடிய அனைத்தையும் இழந்த நிலையில் எதிர்பாராத நெருக்கடிகளுக்கு மத்தியில் கல்விக்காக ஏங்கிக்கொண்டிருக்கும் நலன்புரி நிலைய மாணவர்களுக்கு எம்மால் இயன்ற அனைத்தையும் செய்ய முன்வர வேண்டும். இவர்களுக்கு கற்பிப்பதற்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைக் கடமையாகக் கருதாமல் உயர்ந்த சேவையாக மேற்கொள்ள வேண்டும். - என்றார். (203-11)

## விருப்பு வாக்குகளுக்காக இரு வேட்பாளர் மோதல்

கொழும்பு,செப்.7

தென்மாகாண சபைத் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிடும் இரு வேட்பாளர்கள் சனிக்கிழமை இரவு மோதிக் கொண்டார்கள் எனத் தகவல்கள் தெரிவித்தன.

காலி, உடகமவில் நடந்த இந்தச் சம்பவத்தில் சிலர் காயமடைந்தனர்.

விருப்பு வாக்குப் பெறுவது தொடர்பாக இந்த மோதல் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது.

விருப்பு வாக்குக்காக மோதிக் கொள்ள வேண்டாம் என இரு பகுதியினரையும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கேட்டுள்ளார். (1)

## நயினாதீவில் உயர் அழுத்த மின்மாற்றி

வேலணை, செப். 7

நயினாதீவுப் பிரதேசத்திற்கு மின்னை வழங்கிவரும் மின் நிலையத்தின் மின் விநியோகத்தை சீர் செய்வதற்காக உயர் அழுத்த மின் மாற்றி திறந்து வைக்கப்பட்டுள்ளது.



அண்மையில் நடைபெற்ற நிகழ்வில் மின்சார சபையின் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டு உயர்அழுத்த மின்மாற்றியை திறந்து வைத்துள்ளனர்.

இதன் மூலம் நயினாதீவு தெற்குப் பகுதிக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த குறைந்த அழுத்த மின் விநியோகம் சீர் செய்யப்பட்டு எல்லாப் பிரதேசங்களும் உரிய அழுத்தத்துடன் மின் விநியோகம் கிடைப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நயினாதீவு மின்மாற்றி திறப்பு நிகழ்வில் மின்சாரசபையின் மேலதிக பொது முகாமையாளர், செயலாளர், பிரதிப் பொது முகாமையாளர் ஆர்.முத்துரட்ணம், சிரேஸ்ட பொறியியளார் வி. சண்முகானந்தம், பிரதேச செயலர் ஞானகணேசன், பொறியியளாலர் லிங்கரூபன், நயினாதீவு நாகபூசணி அம்பாள் அறங்காவலர் சபை தலைவர் ஆ. தியாகராஜா மற்றும் மதகுருமார்கள் பிரமுகர்கள் கலந்து கொண்டனர். (203-267)

## 36 சிறுவர்களுக்கு போசாக்கு உணவு

யாழ்ப்பாணம், செப். 7

கிராம அதிகாரிகளால் தெரிவு செய்யப்பட்ட வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட 36 சிறுவர்களுக்கு போசாக்கு உணவு வழங்கப்பட்டுள்ளது.

நவாலி வடக்கு -நவாலி கிழக்கு- நவாலி தெற்கு ஆகிய பகுதிகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 36 சிறுவர்களுக்கு நவாலி ஹேமலதா செல்வராஜா சிறுவர் நல நிதியத்தால் அதன் தலைமை அலுவலக நிறுவனத்தில் வைத்து வழங்கப்பட்டது.

நவாலி வடக்கு -தெற்கு கிராம அதிகாரி கு. எழிற்செல்வன், நவாலி கிழக்கு கிராம அதிகாரி ரி. நித்தியானந்தம் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டு போசாக்கு உணவை வழங்கினர்.

(203-302)

## ஜெனரல் சரத் பொன்சேகா முல்லைத்தீவுக்கு விஜயம்

கொழும்பு, செப்.7

பாதுகாப்பு பிரதம அதிகாரி ஜெனரல் சரத்பொன்சேகா முல்லைத்தீவுக்கு வெள்ளிக்கிழமை விஜயம் மேற்கொண்டு அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்தார்.

முல்லைத்தீவு படைத்தலைமையகத்தில் இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் ஜெகத் ஜெயசூரியா, முல்லைத்தீவு தளபதி மேஜர் ஜெனரல் நந்தன உடவத்த ஆகியோர் பொன்சேகாவை வரவேற்றனர். அங்கு அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்ட அவர் களநிலைமைகுறித்து படை அதிகாரிகளுடன் ஆராய்ந்தார். (1)

## அதிபர்களுக்கான கலந்துரையாடல்

வடக்கின் வசந்தம் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் நடைபெறவுள்ள நடமாடும் சேவையின் ஒரு நிகழ்ச்சியாக யாழ்.வலய பாடசாலைகளில் கட மையாற்றும் அதிபர்களுக்கான கலந்துரையாடல் நாளைமறுதினம் புதன்கிழமை காலை 08.30 மணிக்கு யாழ்.வலய கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. யாழ்.வலய அதிபர்கள் அனைவரையும் இக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளும்படி யாழ்.வலய கல்விப் பணிப்பாளர் கேட் டுள்ளார் (203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கரவெட்டி துன்னாலை கோவிற்கடவை சித்தி விநாயகர் முன்பள்ளி பாலர் பாடசாலை விளையாட்டு நிகழ்வில் முன்பள்ளி மாணவர்களின் இசையும் அசைவும் நிகழ்வையும் விநோத உடையையும் படங்களில் காணலாம். (படங்கள்: சுந்தா)

# துடுப்பாட்டம், பந்துவீச்சு இரண்டிலும் ஜொலித்து அரியாலை ஐக்கிய வி.க வை வீழ்த்தியது ஜொலிஸ்ரார்!

வலி.வடக்கு, செப்.7

அரியாலை ஸ்ரான்லி விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட கிரிக்கெட் விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே நடத்தி வரும் இருபதுக்கு இருபது கிரிக்கெட் போட்டி ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் 119 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

அரியாலை கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற சுற்றுப்போட்டி ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகமும் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் 20 ஓவர்கள் நிறைவில் 09 விக்கெட்டுக்களை இழந்து 162 ஓட்டங்களைப் பெற்றது. சிவராசா 38 ஓட்டங்களையும், பார்த்தீபன் ஆட்டமிழக்காது 31 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டார்கள்.

அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த கவிந்தன் 04 ஓவர்கள் பந்து வீசி 21 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுக்களையும் நிரோஜன் 04 ஓவர்கள் பந்து வீசி 25 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

163 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஐக்கிய விளையாட்டுக்கழகம் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 43 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டது. உதிரிகளாக 10 ஓட்டங்கள் பெறப்பட்டன.

ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த நிரூஜன் 04 ஓவர்கள் பந்து வீசி 07 ஓட்டங்களுக்கு 05 விக்கெட்டுக்களையும் ஜெனார்த்தனன் 04 ஓவர்கள் பந்து வீசி 04 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள். (04-86)

# தடகளப் போட்டிகள்

வலி.வடக்கு,செப்.7

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உடற்கல்வி விஞ்ஞான அலகு மாணவர்களுக்கு இடையேயான தடகள விளையாட்டுப் போட்டிகள் இன்று திங்கட்கிழமை காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகி ஒருவார காலத்திற்குத் தொடர்ந்து நடைபெறவுள்ளன.

காலையில் தடகளப் போட்டிகளும் பிற்பகல் குழு நிலைப் போட்டிகளும் நடைபெறவுள்ளன. (203-86)

# இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு, செப்.7

ஏழாலை கண்ணகி விளையாட்டுக் கழகம் வலிகாமம் யாழ்ப்பாணம், பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்குகளின் அனுசரணையுடன் நடத்தும் 7 பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஏழாலை மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ள போட்டிகளில் மோதவுள்ள அணிகள் வருமாறு:

*வடமராட்சி மணல்காடு சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம் எதிர் ஊரெழு றோயல் ' ஏ' அணி.

*வடமராட்சி அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் எதிர் ஏழாலை ஞான முருகன் விளையாட்டுக் கழகம். (203-86)

## மானிப்பாய் இந்துவின் மாணவனுக்கு ஐக்கிய அரபு இராச்சியத்தில் பயிற்சி

யாழ்ப்பாணம்,செப்.7

தேசிய உதைபந்தாட்ட அணிக்குத் தெரிவு செய்யப்பட்ட மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவரொருவர் அடுத்த மாத இறு தியில் ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடை பெறும் இறுதிப் பயிற்சி முகாமிலும் பங்கு பற்றவுள்ளார்.

2011 கலைப்பிரிவில் கற்கும் செல்லத்துரை கனிஸ்ரன் என்ற மாணவரே இவ்வாறு தெரிவு செய்யப்பட்டவராவார்.

இவருக்கான பயிற்சிகளை இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் கொழும்பில் நடத்துகின்றது. இதற்கான முயற்சிகளை யாழ்.உதைபந்தாட்ட லீக் மேற்கொண்டதாக அதன் செயலர் தெரிவித்துள்ளார். (7)

15 வயது கிரிக்கெட்

# மாகாணமட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனா அசத்தல்; 6 விக்கெட்டுக்களால் வவுனியா தமிழ் ம.வியை வென்றது

வலி.வடக்கு, செப்.7

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் இலங்கைப் பாடசாலை அணிகளுக்குஇடையே நடைபெற்று வரும் 'மாவட்ட அணிகளுக்கு இடையேயான 15 வயதுப் பிரிவினருக்கான 50 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டி ஆட்டமொன்றில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஆறு விக்கெட்டுக்களினால் வெற்றிபெற்றுள்ளது.

வவுனியா தமிழ் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற போட்டி ஆட்டத்தில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த தெல்லிப் பழை மகாஜனக் கல்லூரியும் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த வவுனியா தமிழ் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய வவுனியா தமிழ் மகாவித்தியாலயம் 37 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 122 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

ஸ்ரீராம் 25 ஓட்டங்களையும் வாகீசன், ஜெயேந்திரன் ஆகியோர் தலா 20 ஓட்டங்களையும் கஜீவன், நிருசன்ஆகியோர் தலா 10 ஓட்டங்களைப் பெற்றனர். உதிரிகளாக 41 ஓட்டங்கள் பெறப்பட்டன.

மகாஜனக் கல்லூரி சார்பில் பந்து வீசிய மோசிகீரன், பிரசாந், தனஞ்செயன் ஆகியோர் தலா 02 விக்கெட்டுக்களையும் ஜனந்தன், டிலக்சன், டிலோஜன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

123 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய மகாஜனக் கல்லூரி 23 ஓவர்கள் நிறைவில் 04 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை இலகுவாக அடைந்தது.

இதில் திலக்சன் 27 ஓட்டங்களையும், பொன்டிங் 23 ஓட்டங்களையும், மயூரன் 13 ஓட்டங்களையும் ஜனந்தன் ஆட்டமிழக்காது 11 ஓட்டங்களையும், டிலோசன் 10 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 31 ஓட்டங்களும் பெறப்பட்டன.

வவுனியா மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த நிருசன் 03 விக்கெட்டுக்களையும் ஜெயேந்திரா 01 விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (04-86)

# மத்திய வரிசை வீரர்களின் பொறுப்பான ஆட்டத்தால் 'சுப்பர் சிக்ஸ்' போட்டியில் யாழ். இந்து வெற்றி!

வலி.வடக்கு,செப்.7

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்ப்பாணப் பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே நடைபெற்ற 'சுப்பர் சிக்ஸ்' போட்டி ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 05 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டி ஆட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரியும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியும் மோதிக்கொண்டன. முதலில் துடுப்பெடுத்தாடிய மகாஜனக்கல்லூரி 32 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கட்டுகளையும் இழந்து 119 ஓட்டங்களை பெற்றது. பிரசாந் 44, ஓட்டங்களையும், திலக்சன் 25 ஓட்டங்களையும் தீனஞ்செயன் 11 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டதுடன் உதிரிகளாக 18 ஓட்டங்களும் பெறப்பட்டன.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியைச் சேர்ந்த மதுசன் 08 ஓவர்கள் பந்த வீசி 03 ஓட்டமற்ற ஓவர்களுடன் 15 ஓட்டங்களுக்கு 05 விக்கட்டுகளையும், சங்கீர்த்தனன் 09 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 23 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும், கௌசீலன் 06 ஓவர்கள் பந்து வீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 25 ஓட்டங்களுக்கு 2 விக்கட்டுகளையும், சஜீவன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

120 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலளித்தாடிய யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி 28.4 ஓவர்களில் 05விக்கெட்டுகளை இழந்து 121 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது. சஜீவன் 45 ஓட்டங்களையும் சிவஜெனன் 18 ஓட்டங்களையும் சங்கீர்த்தனன் 16 ஓட்டங்களையும் பெற்றனர். உதிரிகளாக 35 ஓட்டங்களும் பெறப்பட்டன.

மகாஜனக்கல்லூரியைச் சேர்ந்த மேசிகீரன் 07 ஓவர்கள் பந்து வீசி 05 ஓட்டமற்ற ஓவர்களுடன் 07 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும், பிரசாந், திலக்சன், ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

மகாஜனக்கல்லூரி தனது முதலாவது விக்கெட்டை 91 ஓட்டங்களில் இழந்த போதிலும் ஏனைய 09 விக்கட்டுகளையும் 28 ஒட்டங்களுக்குள் பறிகொடுத்தது, இந்த ஆட்டத்தில் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இதேவேளை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி தனது முதல் 03 விக்கெட்டுகளையும் 03 ஓவர்களுக்குள் இழந்த போதிலும் அடுத்து மத்திய வரிசை வீரர்களின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் வெற்றி இலக்கை அடைந்தது. (04-86)


## அறிவித்தல்
### கமநல அபிவிருத்தித் திணைக்களம் யாழ்.மாவட்டம்

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 2000ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்ட ஏற்பாடுகளின்படி நெற்காணிகள் அனைத்தும் நெற்பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்படுதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதன்படி யாழ்.மாவட்டத்திலுள்ள நெற்காணிகள் அனைத்தையும் நெற்செய்கைக்கு உட்படுத்துமாறு சகல நெற்காணி உரிமையாளர்களையும் இத்தால் கேட்டுக் கொள்கின்றேன். 2009/2010 காலபோகத்தின் போது நெற்செய்கைக்கு உட்படுத்தப்படாத நெற்காணிகள் தொடர்பாக மேற்படி சட்ட ஏற்பாடுகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

ம.பற்றிக் டிறஞ்சன்,
உதவி ஆணையாளர்,
கமநல அபிவிருத்தி திணைக்களம், யாழ்.மாவட்டம். (சி/560776)



## கோண்டாவில் இந்துவின் வாழ்த்துக்கள்




யாழ்.கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தில் கடந்த 18 வருடங்களாக மிகச் சிறப்பாக ஆசிரியப் பணியாற்றிய வித்தியா விஜயஸ்ரீ

திருமதி கடம்பமலர் விமலராசா

(பயிற்றப்பட்ட (கணித/விஞ்), B.A., Dip. in Edu., M.Ed.)

அவர்கள் அண்மையில் நடைபெற்ற அதிபர் தரம் 2 II பரீட்சையில் சித்தியெய்தி யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாசாலைக்கு அதிபராகப் பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ளார். பொறுமை, சகிப்புத்தன்மை, செயல்திறனுடன் பாடசாலையின் சகல துறை வளர்ச்சியிலும் பங்குகொண்டு எல்லோரது அன்பையும் பெற்ற இவர் செல்லும் பாடசாலையிலும் சகலகலாவல்லவராகச் சிறந்தோங்க எமது உளப் பூர்வமான வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

பாடசாலைச் சமூகம்.
யா/கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்,
கோண்டாவில்.

(சி/560777)



## விற்பனைக்குண்டு

கட்டடம் கட்டுவதற்குரிய தரமான நாலு இஞ்சி (4'') கொங்கிறீட் கற்கள், கொங்கிறீற் தூண்கள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0602268222/0774163146

## தவறிவிட்டது

கலைவாணி வீதி, கோண்டாவில் வடக்கு என்னும் முகவரியுடைய நல்லையா றஞ்சன் என்பவரின் தேசிய அ. அட்டை [8212447[illegible]V] பொன்னாலைக்கும் முத்திரைச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் [illegible]ம்பதி வீதி, கோண்டாவில் வடக்கு, கோண்டாவில் என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

## தவறிவிட்டது

அகிலேஸ்வரன் கஜேந்திரன் என்பவருடைய தேசிய அ.அட்டை (812273647 V) மற்றும் சாரதி அனுமதிப் பத்திரம் என்பன யாழ்ப்பாணத்திற்கும், சந்நிதி முருகன் ஆலயத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 44, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (சி/560779)

## காணவில்லை

S.T.குறியுடைய சிவப்பு நிற பசுமாட்டை 01.09.2009 இல் இருந்து காணவில்லை.
தொடர்பு: 30, யாழ்வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே.இல: 060 221 7987 (88640)

## வாடகை வீடு தேவை

புனிதபொஸ்கோ பாடசாலைச்சுற்றாடலில் (ஒரு கிலோ மீற்றருக்குள்) டாக்டர் (M.B.B.S) குடும்பம் (4பேர்) வசிப்பதற்கு வசதியான வீடு வாடகைக்குத் தேவை.
(சி/560778) தொடர்பு: 0777684392


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிலிப்பைன்ஸ் கடலில் மூழ்கிக்கொண்டிருந்த கப்பலிலிருந்து648 பேர் மயிரிழையில் மீட்பு!

மணிலா, செப். 07

பிலிப்பைன்ஸ் கடற் பிராந்தியத்தில் மூழ்கிக்கொண்டிருந்த கப்பலிலிருந்து, தக்க தருணத்தில் 648 பேர் மீட்கப்பட்டனர். இருவர் உயிரிழந்தனர். மீட்புப்பணி நீடிக்கின்றது என கரைப் பிராந்திய காவற் படைத் தலைமையகம் தெரிவித்தது.

''847 பயணிகளுடனும், 117 சிப்பந்திகளுடனும் இக்கப்பல் சனிக்கிழமை ஜெனரல் சன்டோஸ் துறைமுகத்திலிருந்து, இலிஒயிலோ என்னுமிடத்தை நோக்கிப் புறப்பட்டது. எனினும், ஜாம்போங்கா வளைகுடாவுக்கு அப்பால் மூழ்கத் தொடங்கியது'' என அதிகாரியொருவர் தெவித்தார்.



''கப்பல் மூழ்கத் தொடங்கியதும் அதிலிருந்து அபாய சமிஞ்ஞை விடுக்கப்பட்டது. இதையடுத்து, உடனடியாக கடற்படையும், விமானப்படையும் மீட்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டன. தனியார் படகுகளும் இப்பணியில் துரிதமாக ஈடுபட்டன. மூழ்கிக் கொண்டிருந்த கப்பலிலிருந்து, 648 பேர் மீட்கப்பட்டு விட்டனர்'' என்றும் அவர் பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்.

''இவர்கள் மூழ்கிக்கொண்டிருந்த கப்பலி லிருந்து வெளியேறக் கூடியவர்களாக இருந்தார்கள். மீட்கப்பட்டவர்கள் உடனடியாக வர்த்தகக் கப்பல்களில் ஏற்றப்பட்டார்கள். மீட்புப் பணிகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன'' என்றும் அவர் விவரித்தார்.

''சனிக்கிழமை புறப்பட்ட இந்தக் கப்பல் மறுதினமான ஞாயிற்றுக்கிழமை(நேற்று) இலிஒயிலோவை சென்றடைந்திருக்க வேண்டும். எனினும், ஞாயிற்றுக்கிழமை அதிகாலை, அதிலிருந்து அபாய சமிஞ்ஞைகள் தொடர்ந்தும் விடப்பட்டமையால், துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதனால் பெருந் தொகையான உயிரிழப்புகள் தடுக்கப்பட்டு விட்டன'' என்றும் அவர் கூறினார்.

''பிலிப்பைனின் தலைநகரான மணிலாவிலிருந்து தெற்கே, ஏறத்தாழ 530 மைல்( 860 கிலோ மீற்றர்) தொலைவில் இவ்விபத்து நிகழ்ந்துள்ளது. அச்சமயம் காலநிலை சீராக இருந்துள்ளது. இவ்விபத்துக்கான காரணம் உடனடியாக வெளியாகவில்லை'' என்றும் அந்த அதிகாரி குறிப்பிட்டார்.

''நள்ளிரவில் கப்பல் தள்ளாடியது. நாங்கள் பீதியடைந்தோம். நிலைமை கட்டுப்பாட்டுக்குள் உள்ளது என மாலுமிகள் அறிவிப்பு விடுத்தார்கள். எனினும், சொற்ப நேரத்துக்குள் நிலைமை மோசமடைந்தது'' என பயணி ஒருவர் தெரிவித்தார்.

''கப்பல் தள்ளாடியவாறு மூழ்கத் தொடங்கியது. மக்கள் பீதியடைந்தார்கள். சிலர் அபாயக்குரல் எழுப்பினார்கள். அச்சமயம் கடற்படையினரால் நாம் காப்பாற்றப்பட்டோம்'' என ரோஹுர் சின்சிரோன் என்பவர், தொலைபேசி மூலமாக உள்ளூர் வானொலி நிலையத்துக்குத் தெரிவித்தார்.

# மஸிடோனியா உல்லாச ஏரியில் படகு விபத்து; 15 பேர் உயிரிழப்பு

மெஸிடோனியா, செப். 07

தென்-மேற்கு மஸிடோனியாவி லுள்ள ஒஹ்ரிட் ஏரியில் உல்லாசப்பயணி கள் படகொன்று மூழ்கி விபத்துக்குள்ளா னது. இதில் 15 பேர் பலியாகினர். 49 பேர் மீட்கப்பட்டனர். நால்வர் படுகாயமடைந்தனர் என அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

''இலின்டன் என்னும் இந்த சொகுசு பயணப்படகு கரையிலிருந்து புறப்பட்ட நான்கு நிமிடங்களுக்குள் 200 மீற்றர் தொலையில் மூழ்கி விபத்துக்குள்ளானது. அளவுக்கதிகமான பயணிகளால் ஏற்பட்ட பளுவாலும், இயந்திரக் கோளாறாலும் இவ்விபத்து சம்பவித்துள்ளது'' என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

''இவ்விபத்தில் பலியானோர் அனைவரும் பல்கேரியாவைச் சேர்ந்தவர்களாவர். இவர்களில் குழந்தை ஒன்றும் அடங்கும்'' என அயல்நாடான பல்கேரியாவின் அரச தகவல் அலுவலகம் குறிப்பிட்டது.

''நாங்கள் விரைவு படகொன்றில் பயணித்துக்கொண்டிருந்தோம். அப்போது எதிரே ஒரு படகு மூழ்கிக்கொண்டிருப்பதைக் கண்டோம். அதிலிருந்தவர்கள் அபயக் குரல் எழுப்பினார்கள். அவ்விடத்துக்கு விரைந்து சென்று ஏழு பேரைக் காப்பாற்றினோம். நாங்கள் செல்வதற்கு முன்னரே, 10 பேர் மரணித்துவிட்டனர்'' என நேரில் கண்டவர் ஒருவர் மஸிடோனியா பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்.

''சனிக்கிழமை உள்ளூர் நேரப்படி காலை 11 மணியளவில் கரைப் பிராந்தியத்துக்குச் சென்றேன். அப்போது, ''எங்களைக் காப்பாற்றுங்கள்; காப்பாற்றுங்கள்'' எனக் குரல்கள் ஒலித்தன. படகொன்று அமிழ்ந்துகொண்டிருப்பதைக் கண்டேன். உடனடியாக மற்றொருவருடன் சிறு படகு ஒன்றில் அவ்விடத்துக்கு விரைந்தேன்'' என நேரில் கண்ட மற்றுமொருவர் பி.பி.ஸிக்குக் குறிப்பிட்டார்.

''இதேவேளை, சிறுபடகுகளும் அவ்விடத்துக்கு வந்துசேர்ந்தன. மூழ்கிக் கொண்டிருந்த படகிலிருந்தவர்கள் மீட்கப்பட்டார்கள்'' என்றும் அவர் மேலும் விவரித்தார். ''இந்த உல்லாச ஏரியில் நிகழ்ந்த மிக மோசமான விபத்து இதுவாகும்'' என பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்தில் 15 பேர் மரணித்துள்ளமையையொட்டி, மஸிடோனியாவும், பல்கேரியாவும் ஒருநாள் துக்க தின அனுஷ்டானத்துக்கு உத்தரவிட்டன. இவ்விபத்தை அடுத்து, மஸிடோனிய போக்குவரத்து அமைச்சர் மிலி ஜனகிவ்ஸ்கி தமது பதவியை இராஜிநாமா செய்துள்ளார்.

## உலக அரங்கில்

# தென்சூடானில் இன வன்முறை: 20 பேர் சுட்டுப் படுகொலை!

கார்ட்ரூம், செப். 07

தெற்கு சூடானிலுள்ள மட்டுப்படுத்தப்பட்ட தன்னாட்சி அதிகாரமிக்கப் பிராந்தியத்தில் இடம்பெற்ற இன வன்முறைகளில் 25 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என தென் சூடான் இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

தலைநகர் மலக்காலுக்கு வடக்கே, டிங்கா இன மக்கள் வாழும் கிராமம் ஒன்றுக்குள் ஆயுததாரிகள் நுழைந்து 20 பேரை சுட்டுக் கொன்றுள்ளனர். அத்துடன், குடியிருப்புகளை எரித்துவிட்டு கால்நடைகளையும்பிடித்துச் சென்றுள்ளனர் என்றும் குறிப்பிட் டுள்ளனர்.

இதனால் ஆத்திரமடைந்த டிங்கா இன மக்கள் குழுக்கள், அருகிலுள்ள ஷில்லுக் இன மக்களின் கிராமத்தில் ஐந்து பேரைக் கொன்று பதில் தாக்குதல் நடத்தியுள்ளனர் என இராணுவப் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் தற்போது தனியாகப் பிரிந்துச் சென்றுள்ள அரசியல் கட்சியின் தலைவருமான லாம் அக்கோல் என்பவரே ஷில்லுக் ஆயுததாரிகளுக்கு ஆயுத உதவிகளை வழங்கியுள்ளார் என்றும் அவர் குற்றஞ்சாட்டினார். எனினும், இந்த குற்றச்சாட்டை முன்னாள் அமைச்சர் நிராகரித்துள்ளார்.

# மேற்கு ஆபிரிக்காவில் கடும் வெள்ளம்; 3 லட்சத்துக்கும் அதிகமானோர் பாதிப்பு

நியூயோர்க், செப். 07

மேற்கு ஆபிரிக்காவில்இடைவிடாத அடைமழையால் ஏற்பட்டுள்ள கடுமையான வெள்ளப்பெருக்கால் மூன்று லட்சத்து ஐம்பதாயிரம் பேர் பாதிக் கப்பட்டுள்ளனர் என ஐ.நா. அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



வெள்ள அனர்த்தங்களுக்குக் கானாவிலும், புர்கினோ பாஸோவிலும் முப்பதுக்கும் அதிகமானோர் பலியாகியுள் ளனர் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

பலியானோரின் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புள்ளது. புர்கினோ பாஸோவின் தலைநகரான உகடுகுவில் ஒன்றரை லட்சம் பேர் வீடுகளை விட்டு வெளியேற நேர்ந்துள்ளது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டி யுள்ளார்கள்.

பெனின், கினி, நிஜெர், செனெகல் ஆகிய அண்டை நாடுகளும் வெள்ளத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. ஆயிரக் கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளார்கள். பெருவாரியான விளைச்சல் நிலங்கள் பாழாகியுள்ளன என்றும் ஐ.நா. அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளார்கள்.

# உலகில் 2,840 பேர் பன்றிக்காய்ச்சலுக்குப் பலி

நியூயோர்க்,செப். 07

''உலகில் அதி தீவிரமாகப் பரவி வரும் பன்றிக்காய்ச்சலுக்கு இதுவரை 2 ஆயிரத்து 840 பேர் பலியாகியுள்ளனர்'' என ஜெனிவாவில் இயங்கிவரும் உலக சுகாதார நிறுவன அதிகாரி கிரிகோரி ஹார்ட்டில் தெரிவித்துள்ளார்.

''உலகம் முழுவதும் 100 இற்கும் மேற்பட்ட நாடுகளில் பன்றிக்காய்ச்சல் அச்சுறுத்தி வருகிறது. அத்துடன், உயிர்ப் பலியையும் ஏற்படுத்தியுள்ளது. உலகம் முழுவதும் பன்றிக்காய்ச்சலால் இரண்டரை இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இது ஆய்வக சோதனை மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் காய்ச்சலின் தாக்கத்துக்கு 2 ஆயிரத்து 840 பேர் பலியாகி விட்டார்கள். இந்த நோய்க்கிருமி வேகமாக பரவி வருகிறது. அதனால் உயிர்ப்பலி இன்னும் அதிகரிக்கக்கூடும்'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

''தென் அமெரிக்கா, அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து, தென் ஆபிரிக்கா, தென் கிழக்கு ஆசிய நாடுகளான இந்தியா, பங்களாதேஷ், மியான்மர், தாய்லாந்து, கம்போடியா, இலங்கை, இந்தோனேஷியா ஆகியவற்றில் அதிக அளவில் மக்கள் பன்றிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர்'' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# வெனிசுலா ஜனாதிபதி சாவோஸுக்கு ஆதரவாகவும் எதிராகவும் பேரணிகள்

காரகாஸ், செப். 07

வெனிசுலா ஜனாதிபதி ஹுகோ சாவேஸுக்கு எதிராகவும், ஆதரவாகவும் தலைநகரான காரகாஸில் எதிரும் புதிருமாக பாரிய பேரணிகள் நடத்தப்பட்டன. இவற்றில் ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டனர். ஜனாதிபதிக்கு எதிராக தமது பேரணியில் அதிருப்தியாளர்கள் கோஷங்கள் எழுப்பினார்கள்.




ஜனாதிபதி தமது அதிகாரத்தை மென்மேலும் அதிகரிக்க ஆரம்பித்துள்ளார். இதை அனுமதிக்க முடியாது. அதேவேளை, புதிய கல்வித் திட்டத்தையும் ஏற்க முடியாது என கோஷமிட்டு அதிருப்தி யாளர்கள் ஆர்ப்பரித்தார் கள்.

ஜனாதிபதியின் ஆதரவாளர்கள், அவருக்கு ஆதரவான கோஷங்களை எழுப்பினார்கள். இவர்களில் பெருந்தொகையானோர் ஜனாதிபதியின் கட்சிக் குரிய சிவப்பு வர்ணத்தில் உடையணிந்திருந்தார்கள்.

''புதிய கல்வித் திட்டம் பாடசாலைகளையும், பல்கலைக்கழகங்களையும் வெகுவாகக் கட்டுப்படுத்துகிறது. இக்கல்வித் திட்டம், பொலிவேரியன் சித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்ட கற்கை நெறியை அறிமுகப்படுத்துகிறது. இதனை அனுமதிக்க முடியாது'' என அதிருப்தி யாளர்கள் தெரிவித்துள்ளார்கள்.




பொலிவேரியன் சித்தாந்தம், 19 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சுதந்திர வீரர் சிமோன் பொலிவரின் கருத்துகளைக் கொண்டது. இது லத்தீன் அமெரிக்காவின் ஐக்கியப்பாட்டையும், தேசிய சுயாதிபத்திய நிர்ண யத்தையும் வலியுறுத்துகிறது. 2002 ஆம் ஆண்டும் வெனிசுலாவின் கல்வி மறுசீரமைப்புத் திட்டம் பெரும் கண் டனங்களுக்குள்ளாகியுள்ளது. ஆட்சேப ஆர்ப்பாட்டங்களும் நடத்தப்பட்டுள்ளன. அச்சமயத்தில் சாவோஸுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட புரட்சி சதி முயற்சியும் பிசுபிசுத்துவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆந்திர அரசியலில் குழப்பம்; காங். தலைமை மௌனம்!

## பலத்த போட்டிக்கிடையே முதல்வராவாரா ரெட்டியின் மகன்?



ஐதராபாத்,செப். 07

ராஜசேகர ரெட்டியின் மகன் ஜெகன் மோகனை முதல்வராக்க வேண்டும் என்று அவருடைய ஆதரவாளர்கள் உண்ணாவிரதம், கொடும்பாவி எரிப்பு, கையெழுத்து வேட்டை என நடத்தி வரும் நடவடிக்கைகளால் ஆந்திராவில் அரசியல் குழப்பமும் பரபரப்பும் ஏற்பட்டுள்ளன.

இதற்கிடையே ரோசய்யாவின் ஆதரவாளர்களும் மாற்று முகாம்களில் உள்ளவர்களும் முதல்வர் பதவிக்கு தீவிர முயற்சிகளை செய்து வருவதால் இங்கு பெரும் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

ராஜசேகர ரெட்டியின் மறைவிற்காக நடைபெற்ற இரங்கல் கூட்டமே முதல்வர் பதவிக்கான பிரசாரக் கூட்டமாக மாறியமை காங்கிரஸார் மத்தியில் வேதனையை ஏற் படுத்தி உள்ளது.

ஆந்திர மாநில முதலமைச்சர் ராஜசேகர ரெட்டி கடந்த புதன்கிழமை அன்று ஹெலி விபத்தில் பலியானார். இதனைத் தொடர்ந்து தற்காலிக முதல்வராக மூத்த அமைச்சர்களில் ஒருவரான ரோசய்யா பதவியேற்றார்.

ராஜசேகர ரெட்டிக்குப் பின்னர் புதிய முதல்வராக அவரது மகன் ஜெகன் மோகன் ரெட்டியை நியமிக்க வேண்டும் என்று அவரது ஆதரவாளர்கள் கடந்த 3 நாள்களாக வலியுறுத்தி வருகிறார்கள். தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தும் வகையில் உண்ணாவிரதம், கொடும்பாவி எரிப்பு, கையெழுத்து வேட்டை, பாதயாத்திரை போன்ற பல்வேறு போராட்டங்களை அவர்கள் நடத்தி வருகிறார்கள்.

இந்த நிலையில் நேற்று ஐதராபாத்தில் ஆந்திர மாநில காங்கிரஸ் கமிட்டியின் சார்பில் ராஜசேகர ரெட்டியின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் கூட்டம் நடைபெற்றது. சர்வமத பிரார்த்தனைகள் நடைபெற்றன. உறுப்பினர்கள் அனைவரும் 2 நிமிட நேரம் அஞ்சலி செலுத்தினர்.

இந்த அஞ்சலிக் கூட்டமே ஜெகன் மோகனுக்கு பிரசாரம் செய்யும் கூட்டமாக மாறியது. இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட பெரும்பாலோர் குறிப்பாக இளைஞர்கள், 'ஜெகன் மோகனை முதல்வராக்க வேண்டும்' என்ற கோஷங்களை காங்கிரஸ் அலுவலகம் முன்பு முழங்கினர்.

ஜெகன் மோகனின் உருவம் தாங்கிய அட்டைப்படங்களை அவர்கள் ஏந்தி இருந்தார்கள். சிலர் ராஜசேகர ரெட்டியின் உருவப்படம் தாங்கிய அட்டைகளைப் பிடித்திருந்தார்கள். ஜெகன் மோகனை முதல்வராக்க திர்ப்புத் தெரிவித்த தலைவர்களுக்கு எதிராக அவர்கள் கோஷங்களை எழுப்பினர்.

குறிப்பாக மாநிலங்களவை உறுப்பினர் வி.அனுமந்தராவுக்கு எதிராக அவர்கள் 'திரும்பிப் போ' என்ற கோஷங்களை எழுப்பினர். இந்திரா காந்தி மறைந்த பிறகு அவரது மகன் ராஜீவ் காந்தி பதவியேற்றது போல ராஜசேகர ரெட்டி மறைவுக்கு பின்னர் அவரது மகன் பதவியேற்க வேண்டும் என்று சில தலைவர்கள் கூறியதை அனுமந்தராவ் குறை கூறியிருந்தார்.

ஜெகன் மோகனுக்கு ஆதரவாக அவருடைய ஆதரவாளர்கள் பிரசாரம் செய்து வருவதை காங்கிரஸ் மேலிடம் உணர்ந்திருந்த போதிலும், அது மௌனம் காத்து வருகிறது.

ஆனால் ஜெகன் மோகனுடைய ஆதரவாளர்கள் காங்கிரஸ் மேலிடத்திற்கு மறைமுக எச்சரிக்கையை கொடுத்து வருகிறார்கள். ஜெகன் மோகனை முதல்வராக்கா விட்டால் மீண்டும் தெலுங்கானா இயக்கம் வலுவடையும் என்று அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ஆனால் காங்கிரஸ் கட்சி பொறுத்திருந்து முடிவெடுக்க இருக்கிறது. ஒரு வார காலத்திற்குள் பதற்றம் குறைந்து தெளிவு ஏற்படும் என்று காங்கிரஸ் மேலிடம் கருதுகிறது.

# இலங்கைப் படைக்கு எதிரான தமிழக மீனவரின் வேலைநிறுத்தம் 16 ஆவது நாளாகவும் நீடிப்பு!

சேதுபாவாசத்திரம், செப். 07

இலங்கைக் கடற்படையின் தாக்குதல்களைக் கண்டித்தும், கச்சதீவில் மீன்பிடிக்கும் உரிமையைப் பெற்றுத் தரவேண்டும் என வலியுறுத்தியும் தமிழக மீனவர்கள் நடத்திவரும் வேலைநிறுத்தம் 16 ஆவது நாளாகவும் தொடர்ந்து நீடித்தது.

கச்சதீவில் மீன்பிடிக்கும் உரிமையைப் பெற்றுத்தர வேண்டும். இலங்கைக் கடற்படையின் தாக்குதலிருந்து மீனவரைப் பாதுகாக்க வேண்டும். வரி நீக்கம் செய்யப்பட்ட டீசலை ஆண்டுக்கு 15 ஆயிரம் லீற்றரிலிருந்து 30 ஆயிரம் லீற்றராக உயர்த்தித் தரவேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த 21ஆம் திகதி முதல் தஞ்சை, புதுக் கோட்டை, வேதாரண்யம் மற்றும் இராமேஸ்வரம் பகுதி விசைப்படகு மீனவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் மீன்களின் விலை உயர்ந்துள்ளது.

போராட்டம் பற்றி தமிழ் மாநில விசைப் படகு மீனவர் பேரவைச் செயலாளர் தாஜூதீன் கூறியவை வருமாறு -

கடந்த 16 தினங்களாக 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விசைப்படகுகள் துறைமுகங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இதனால் நேரடியாகவும், மறைமுகமாகவும் 3 லட்சம் பேர் வேலை இழந்துள்ளனர். புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப்பட்டினத்தில் விசைப்படகு மீனவர் சங்க நிர்வாகிகளின் ஆலோசனைக் கூட்டம் நடந்தது. இதில், மீன்வளத் துறை அமைச்சர் முதல்வரை சந்திக்க ஏற்பாடு செய்து தருகிறேன் எனக் கூறியமை குறித்து ஆலோசிக்கப்பட்டது.

இதைதொடர்ந்து முதல்வரைச் சந்திப்பது என கூட்டத்தில் முடிவெடுக் கப்பட்டது - என்றார்.



ஆசிரியர் தின விழா நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டது. இதையொட்டி, பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸில் உள்ள டி.ஏ.வி. பாடசாலையில் ஆசிரியர்களுக்கு மாணவர்கள் பூஜை செய்து ஆரத்தி எடுக்கின்றனர்.

# ராஜசேகர ரெட்டியின் மரணத்தில் சதியா? உளவுப் பிரிவுப் பொலிஸார் விசாரணை!

சித்தூர், செப். 07

ஆந்திர முதல்வர் வை.எஸ்.ராஜசேகர ரெட்டி மரணத்திற்கு சதிச் செயல் காரணமாக இருக்கலாம் என்று சந்தேகம் எழுந்துள்ளதால் அதுகுறித்து மாநில உளவுப்பிரிவு உயர் பொலிஸ் அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதற்கிடையில், விபத்து நடந்த இடத்தில் இருந்து ஹெலிகொப்டரின் கறுப்புப் பெட்டியை இராணுவத்தினர் கைப்பற்றியுள்ளனர்.

ஆந்திர முதல்வர் ராஜசேகர ரெட்டி சென்ற ஹெலி, கர்னூல் மாவட்டம் நல்லமலை வனப்பகுதியில் மோதி வெடித்து சிதறியது. இதில் முதல்வர் உட்பட அவருடன் பயணம் செய்த 5 பேர் உடல் கருகி பலியானார்கள்.

தீவிர தேடுதல் வேட்டைக்கு பின்னர் அவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டன. ஆந்திர முதல்வரை பலி கொண்ட இந்த அதிர்ச்சியான விபத்து குறித்து பல்வேறு கோணங்களில் விசாரணை நடந்து வருகின்றது.

மலையில் மோதி ஹெலிகொப்டர் வெடித்து சிதறுவதற்கு ஒரு சில நிமிடங்களுக்கு முன்பு விமானி, விமானத்திலிருந்தோர் ஐதராபாத் ஷம்ஷாத் விமான நிலையத்திற்கு தொடர்பு கொண்டுள்ளனர். அந்தத் தொடர்பும் துண்டிக்கப்பட்டிருக்கிறது.

இதையடுத்து, சென்னை விமான நிலையத்துடன் முதல்வரின் பாதுகாப்பு அதிகாரி வெஸ்லி தொடர்பு கொண்டிருக்கிறார். மோசமான வானிலை காரணமாக சென்னையுடன் அவர்களால் முழுமையாக தொடர்பு கொள்ள முடியாமல் போனதும் தெரியவந்துள்ளது.

இதற்கிடையில் தேடுதல் வேட்டையின் போது ஹெலியின் கறுப்புப் பெட்டியை இராணுவ மீட்புக்குழு கண்டுபிடித்தது. இந்த கருவி உள்நாட்டு விமான போக்குவரத்து பொது இயக்குநரகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தற்போது அது ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

முதல்வர் ராஜசேகர ரெட்டி ஹெலிகாப்டர் விபத்தில் இறந்தாரா? அல்லது சதி வேலைகாரணமாக கொல்லப்பட்டாரா என்பது குறித்து பல்வேறு கோணங்களில் விசாரணை நடத்தப்படுகிறது.

இந்தக் கறுப்பு பெட்டி உடனடியாக டில்லிக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. இதில் பதிவாகியிருக்கும் கடைசி நிமிட பேச்சு, பரபரப்பு என்ன என்பது பற்றி டில்லி விமான போக்குவரத்து இயக்குநரக அதிகாரிகள் ஆய்வு செய்து வருகின்றனர்.

# கால்வாயில் 5 மணிநேரம் மிதந்த அதிசயக் குழந்தை உயிரோடு மீட்பு

புனே, செப். 07

கால்வாயில் 5 மணி நேரமாக மிதந்து கொண்டிருந்த பச்சிளம் பெண் குழந்தை ஒன்று உயிருடன் மீட்கப்பட்ட அதிசயச் சம்பவம் ஒன்று புனேயில் நடைபெற்றுள்ளது.

புனேயில் இருந்து 6 கிலோ மீற்றர் தொலைவில் வாத்கான் புத்ருக் என்ற கால்வாய் உள்ளது. 30 அடி ஆழம் உள்ள இந்தக் கால்வாயில் கடந்த 3ஆம் திகதி விநாயகர் சதுர்த்தியையொட்டி சிலைகள் கரைப்பு நிகழ்ச்சி நடந்தது.

அப்போது, ஒரு பச்சிளம் பெண் குழந்தை உயிருடன் கால்வாயில் மிதந்து வந்தது. அதைப் பார்த்து ஆச்சரியமடைந்த பக்தர்கள் குழந்தையை பத்திரமாக மீட்டனர். அந்தக் குழந்தை கால்வாயில் 5 மணி நேரம் மிதந்திருப்பது தெரியவந்தது.

பிறந்து ஒரு நாளே ஆகியிருக்கும் என கருதப்படுகின்ற அந்த குழந்தை வெகு நேரம் கால்வாயில் மிதந்து வந்த தகவல் ஊரெங்கும் பரவியது. இதனால், அந்த அதிசய குழந்தையை பார்க்க மக்கள் கூட்டம் அலை மோதியது. அவர்களைக் கட்டுப்படுத்த முடியாமல் பொலிஸார் திணறினர்.

தற்போது அந்த குழந்தை, புனேயில் உள்ள அனாதை குழந்தைக்ள் இல்லம் ஒன் றில் சேர்க்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.




மும்பையில் சம்பவம்

## ஒரே பிரசவத்தில் 5 ஆண்குழந்தைகள்

மும்பை, செப். 07

மும்பையைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு ஒரே பிரசவத்தில் 5 ஆண் குழந்தைகள் பிறந்தன. 5 குழந்தைகளும் நலமுடன் உள்ளன.

மும்பையைச் சேர்ந்தவர் உபேத். இவரது மனைவி சபீரா கான். இவர்களுக்கு கடந்த ஆண்டு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. இந்த நிலையில், சபீரா மீண்டும் கர்ப்பம் அடைந்தார். மும்பை அந்தேரி பகுதியில் உள்ள கோகிலாபென் துருபாய் அம்பானி வைத்திய சாலையில் தொடர்ந்து பரிசோதித்து வந்தார். சபீராவின் வயிற்றில் ஸ்கேன் செய்து பார்த்ததில் 5 குழந்தைகள் வளர்வது கண்டு வைத்தியர்கள் அதிர்ச்சி அடைந்தனர். அதற்குத் தேவையான சிகிச்சைகளை வைத்தியர்கள் அளித்து வந்தனர்.

இந்நிலையில், 7 மாதம் முடிந்த நிலையில், சபீராவுக்கு திடீரென்று பிரசவ வலி ஏற் பட்டது. இதையடுத்து, சபீராவை பரிசோதித்த வைத்தியர், உடனடியாக அறுவை சிகிச்சை செய்துகுழந்தைகளை வெளியே எடுக்க முடிவு செய்தார்.

இதையடுத்து, சபீராவுக்கு வைத்தியர் சுசித்ரா பண்டிட் தலைமையில் வைத்தியர்கள் குழு அறுவைச் சிகிச்சை செய்து 5 குழந்தைகளை வெளியே எடுத்தது. 2 குழந்தைகளுக்கு செயற்கை சுவாசம் பொருத்தப்பட்டுள்ளது. மற்ற குழந்தைகள், தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளன.

# ஈழத் தமிழர் வாழ்வுரிமையைப் பாதுகாக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

## மார்க்சிஸ்ட் கட்சி வலியுறுத்து

திருவாரூர், செப். 07

இலங்கைத் தமிழர் வாழ்வுரிமையைப் பாதுகாக்க மத்திய அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் - என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் என். வரதராஜன் வலியுறுத்தினார்.

திருவாரூரில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற அரசியல் விளக்கப் பொதுக் கூட்டத்திலேயே அவர் இதனைக் கூறினார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு -

இலங்கையில் உள்நாட்டு போர் முடிவுக்கு வந்து பல மாதங்களாகியும், இன்னும் தமிழ் மக்கள் தங்களது இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப அனுமதிக்கப்பட வில்லை. இந்த மக்களின் வாழ்வுரிமையைப் பாதுகாக்கவும், மீட்டெடுக்கவும், இலங்கை அரசை மத்திய அரசு வலியுறுத்த வேண்டும்.

இலங்கையில் ஆளும் அதிகாரவர்க்கம் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தும் மனித உரிமை மீறல்களை தடுத்து நிறுத்தி, அவர்கள் சுதந்திரமாக வாழ மத்திய அரசு வழியை ஏற்படுத்த வேண்டும்.

தமிழக சட்டப்பேரவையில் தெரிவிக்காமலேயே பல நிறுவனங்களுடன் தமிழக அரசு புரிந்துணர்வு ஒப்பந்தங்களைச் செய்து கொண்டுள்ளது. இதுகுறித்து வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என சட்டப்பேரவையில் மார்க்சிஸ்ட் உறுப்பினர்கள் கோரியும் இதுவரை அரசிடமிருந்து எவ்வித பதிலும் இல்லை.


நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் பங்குகளை விற்பனை செய்ய மத்திய அரசு முடிவு செய்து அறிவித்துள்ளது. இந்த பிரச்சினையில் தி.மு.கவின் தற்போதைய நிலை என்ன என்பது குறித்து தமிழக முதல்வர் மௌனம் சாதிக்கிறார்.

தமிழகத்தில் தி.மு.க. ஆட்சியில் ஊழல் நிறைந்துவிட்டது. சட்டம் - ஒழுங்கு நிலையும் மிகவும் மோசமடைந்து விட்டது.

கல்வி பணக்காரர்களுக்கு மட்டுமே கிடைக்கும் என்ற நிலையையும் உருவாக்கி விட்டனர். மருத்துவம், பொறியியல் படிப்புக்கு லட்சக் கணக்கில் பணத்தை லஞ்சமாகக் கொடுக்க வேண்டியுள்ளது. இதைத் தடுக்க சட்டம் இயற்றிய தமிழக அரசு அதை நடைமுறைப்படுத்தவில்லை.

தமிழக அரசின் சட்டங்கள் சமூக விரோதிகளுக்கு எதிராகச் செயல்படுவதை விட சாதாரண மக்களுக்கு எதிராகத்தான் செயற்படுகிறது. இதை மக்கள் நீண்ட காலத்துக்கு அனுமதிக்கமாட்டார்கள் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தால் அராலியில் அமைக்கப்பட்ட மூலிகைத் தோட்டத்தின் திறப்பு விழா நேற்று நடைபெற்றது. படங்களில்.......

வலி.மேற்கு பிரதேச செயலர் திருமதி தே. பாபு தேசியக் கொடியை ஏற்றுகிறார்.

ஆயுள் வேதக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சோமவீர சந்திரசிறி பெயர்ப் பலகையைத் திரைநீக்கம் செய்கிறார்.

சுதேச மருத்துவ அமைச்சர் திஸ்ஸ கரலியத்த மூலிகைத்தோட்ட அலுவலகத்தைத் திறந்து வைக்கிறார்.

நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்கள், பொது மக்கள் அமர்ந்திருக்கின்றனர்.

பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் ஆ. கேதீஸ்வரன், சித்த மருத்துவத் துறைப் பேராசிரியர் எஸ். பவானி, சுதேச மருத்துவ அமைச்சர் திஸ்ஸ கரலியத்த ஆகியோர் உரையாற்றுகின்றனர். *(படங்கள் : சரவணன்)*

# இலங்கையை ஒன்றுபடுத்தும் மருந்துதான் இன்று தேவையாகவுள்ளது என்கிறார் அமைச்சர்

யாழ்ப்பாணம், செப். 07

இலங்கையை ஒன்றுபடுத்தும் மருந்துதான் இன்று தேவை. இங்கு வந்து பார்த்ததில் இருந்து இந்தச் செய்தியை தெற்கே எடுத்துச் செல்கிறேன்.

சுதேச மருத்துவத்துறை அமைச்சர் திஸ்ஸ கரலியத்த மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். நவீன சந்தையில் ஆயுள்வேத மருந்துகள் விற்பனை நிலையத்தைத் திறந்து வைத்துப் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வைத்திய அதிகாரி எஸ். சிவராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அமைச்சர் மேலும் கூறியதாவது:-

1957 ஆம் ஆண்டு ஆயுள்வேத கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கையில் சிறப்பாக இயங்கிவரும் கூட்டுத்தாபனங்களில் இதுவும் ஒன்றாகும். இங்கு தயாரிக்கப்படும் மருந்துகள் யாவும் மக்களைச் சென்றடைய வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படும் மருந்துகள் தென்பகுதிக்கும் சென்றடைய வேண்டும். 2010 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனம் மருந்து உற்பத்தியை நிறைவு செய்யும் மூலிகைகளின் உற்பத்திகள் குறித்து விவசாயிகளுக்குப் பயிற்சிகள் வழங்குகிறோம். வடக்கில் இருந்து தெற்கிற்கு மூலிகைகளைக் கொண்டு செல்லும் நாள் தூரத்தில் இல்லை. நான் இந்த ஆண்டில் இரண்டாவது தடவையாக இங்கு வந்துள்ளேன். எனது மனைவியின் சகோதரரான சபாநாயகர் மைத்திரிபால சேனநாயக்காவும் யாழ்ப்பாணத்தில் கல்வி பயின்றவர்கள். மைத்திரிபாலவின் மனைவி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். நான் அனுராதபுரத்தில் ஒரு தமிழரின் வீட்டில்தான் இருந்தேன். நாங்கள் எந்த இடத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் ஏதோ ஒரு வகையில் தொடர்புடையவர்களே.

ஜனாதிபதி இந்த நாட்டுமக்கள் அனைவரும் ஒற்றுமையுடன் வாழ்ந்து நாட்டை அபிவிருத்திப் பாதையில் கொண்டு செல்ல வேண்டும் என விரும்புகிறார். இப்போது நாட்டில் சமாதானம் தோன்றியுள்ளது. இது நீடித்திருக்க எல்லோரும் ஒன்று படவேண்டும். - என்றார் சுகாதார வைத்திய அமைச்சின் செயலாளர் அசோகா பீரிசும் உரையாற்றினார்.

நிகழ்வில் யாழ்.அரச அதிபர் கே. கணேஸ், யாழ்.மாநகர ஆணையாளர் மு.செ. சரவணபவ, ஆயுள் வேத திணைக் கள ஆணையாளர் திருமதி ராணி குணவர்த்தன உட்பட வைத்திய அதிகாரிகள், மதகுருமார், பொது மக்கள் கலந்து கொண்டனர். (1-111)

(படங்கள் 11 ஆம் பக்கத்தில்)

## உலக விலங்கு நோய் தடுப்பு தினம் நாளை

வலி.வடக்கு, செப். 07

உலக விலங்கு விச நோய் தடுப்புத் தினத்தை ஒட்டி வலி.வடக்கு பிரதேச சபையுடன் இணைந்து தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் ஏற்பாடு செய்துள்ள நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அளவெட்டி பொதுச் சனசமூக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (1-86)

## மூன்றாம் தவணைக்கான கல்விச் செயற்பாடுகள் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 07

குடாநாட்டுப் பாடசாலைகள் மூன்றாம் தவணை கற்றல் செயற்பாடுகளுக்காக இன்று திறக்கப்படவுள்ளன.

இதேவேளை -

ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சை விடைத்தாள் மதிப்பிடும் பணிகள் இடம்பெறுவதால் யாழ். மத்திய கல்லூரியின் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இடம் பெறவுள்ளன.

கலை, வர்த்தகப்பிரிவு மாணவர்களுக்கான கல்விச் செயற்பாடுகள் தவிர்ந்த ஏனைய பிரிவு மாணவர்களுக்கான செயற்பாடுகள் வழமையாக இடம்பெறும் என்று கல்லூரி அதிபர் எல்.ஓங்காரமூர்த்தி அறிவித்துள்ளார். (1-11)

# கைதான ஊடகவியலாளர்கள் மூவரும் சிங்களப் புலிகள் என்கிறது பொலிஸ்!

## மஹிந்தவையும் கோத்தபாயவையும் கொல்லத் திட்டமிட்டனராம்

கொழும்பு, செப்.7

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரைப் படுகொலை செய்யும் முயற்சியில் ஈடுபட்டிருந்த சிங்களப் புலிகள் என்ற சந்தேகத்தின் பேரிலேயே 'லங்கா' ஊடகவியலாளர்கள் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளார்கள் என்று இலங்கைப் பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

'லங்கா' ஊடகவியலாளர்களான தயா நெத்திசிங்க, ரவிந்திர புஷ்பகுமார, சாலிக்க விமலசேன அகிய மூவரும் கடந்த புதன் கிழமை தெனியாய பொலிஸ் நிலையப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களின் கைது மற்றும் தடுத்துவைப்புக் குறித்து காரணம் வெளியிட்ட பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிமால் மெதிவக்க, இம்மூவரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரைப் படுகொலை செய்யும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் சிங்களப் புலிகள் என்ற சந்தேகத்தின் பேரிலேயே அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக் கப்பட்டுள்ளார்கள் என்று தெரிவித்துள்ளார்.

இந்த ஊடகவியலாளர்களின் கைது மற்றும் தடுத்து வைப்புக் குறித்து அவர் தெரிவித்துள்ளவை வருமாறு:-

ஊடகவியலாளர்கள் மூவரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பாதுகாப்பமைச்சுச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரைப் படுகொலை செய்யும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் சிங்களப் புலிகள் என்ற சந்தேகத்தின் பேரிலேயே கைது செய்யப்பட்டார்கள்.

சம்பவதினம் இம் மூவரும் தெனியாயவிலுள்ள பங்களா ஒன்றுக்குள் சென்று சந்தேகத்துக்கு இடமான முறையில் நடந்து கொண்டார்கள். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பாதுகாப்பமைச்சு செயலாளர் கோத்தபாய ஆகியோர் இந்த பங்களாவுக்கு விஜயம் செய்வது வழக்கம். இந்த பங்களாவுக்கு ஜனாதிபதி மற்றும் பாது காப்பமைச்சு செயலாளர் ஆகியோர் வருகை தருவது சம்பந்தப்பட்ட விவரங்களை இம் மூவரும் பங்களாவில் வசிப்பவர்களிடம் வினவியுள்ளார்கள்.

இம்மூவரினதும் நடவடிக் கைகளில் சந்தேகம் கொண்ட மக்கள் தெனியாய பொலிஸாருக்குத் தகவல் வழங்கியிருக்கிறார்கள். இதையடுத்தே ஊடகவியலாளர்கள் மூவரும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இக் கைதும் தடுத்து வைப்பும் முக்கியமானவையாகும். ஏனெனில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும், பாதுகாப்பு அமைச்சு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவையும் படுகொலை செய்வதற் குப் புலிகள் பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்டு வருகின்றனர். இப்படுகொலைகளுக்கான முயற்சியில் சிங்களப் புலிகளும் ஈடுபட்டுள்ளார்கள் என்று எமக்குத் தெரிய வந்துள்ளது. எனவே நாம் ஊடகவியலாளர்கள் மூவரையும் விசாரித்து வருகிறோம் - என்றார்.

## சுன்னாகத்தில் இரவு வேளை கடைகள் உடைக்கப்பட்டு திருட்டு

சுன்னாகம், செப். 07

சுன்னாகத்தில் இரவு வேளை கடையொன்று உடைக்கப்பட்டு பெறுமதி மிக்க பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினமிரவு இச்சம்பவம் இடம் பெற்றது.

கே.கே.எஸ். வீதியில் அமைந்துள்ள பலசரக்குக் கடையே இவ்வாறு உடைத்துத் திருடப்பட்டுள்ளது.

இதற்கு நான்கு தினங்களுக்கு முன்னர் சந்தையின் தெற்கு வீதியிலும் பலசரக்குக் கடையொன்று இரவு வேளை உடைக் கப்பட்டு பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டிருந்தன.

இச்சம்பவங்கள் தொடர்பில் சுன்னாகம் பொலிஸில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது. (203-38)

# அகதிகளை வெளியே எடுத்துவிட்டு பணம் கறக்கும் ஆயுதக்குழுக்கள்!

கொழும்பு, செப்.7

வவுனியா அகதி முகாம்களில் உள்ள இடம்பெயர்ந்தவர்களை அங்கிருந்து வெளியே கொண்டு செல்லும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள ஆயுதக்குழுக்கள் அதன்மூலம் பெருமளவு பணத்தை சம்பாதிக்கின்றனர் என்று கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

வவுனியா முகாமிலிருந்து அகதி நபர் ஒருவரை வெளியே எடுப்பதற்கு ஒரு லட்சம் ரூபா பெறப்படும் அதேவேளை, அவ்வாறு எடுக் கப்படுபவரை கொழும்பிலோ அல்லது பண்டாரநாயக்கா விமான நிலையத்திலோ கொண்டுவந்து விடுவதற்கு அக் குழுக்கள் 5 லட்சம் ரூபா வரை அறவிடுகின்றன என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

முன்னர் இதற்காக இதைவிட அதிகமான பணத்தை இந்த ஆயுதக்குழுக்கள் அறவிட்டன.

இவ்வாறு இடம்பெயர்ந்த மக்களை முகாமிலிருந்து வெளியே எடுப்பதற்கான தரகர்களாக செயற்படும் நபர்கள் வவுனியாவில் உள்ள விடுதிகள் மற்றும் வீடுகளிலிருந்து செயற்படுகின்றனர்.

முகாம்களில் உள்ளவர்களை விடுவிப்பதற்காக வவுனியாவுக்கு வந்து சேர்ந்த உறவினர்கள் இந்த விடுதிகளில் தங்கி வழிகின்றனர். பொலிஸில் தம்மைப் பதிவு செய்த பின்னர் தமது உறவினர்களை வெளியில் எடுப்பதற்கான பேச்சுகளில் இவர்கள் ஈடுபடுகின்றனர்.

"இடம்பெயர்ந்த மக்கள் முகாம்களிலிருந்து சட்டவிரோதமாக வெளியேறுகின்றமை எமக்குத் தெரியும். எனினும் இது எவ்வாறு நடைபெறுகின்றது என்பது எமக்குத் தெரியவில்லை" என மீள்குடியேற்ற அமைச்சர் ரிஷாட் பதியுதீன் குறிப்பிட்டார்.

இலங்கையிலிருந்து அநேகமானவர்கள் படகுகள் மூலமாகவே சட்டவிரோதமாகச் செல்கின்றனர் எனத் தாம் கருதுகின்றார் என குடிவரவு கட்டுப்பாட்டாளர் பி.பி.அபயக்கோன் தெரிவித்தார்.

"நாங்கள் மேற்கொண்டுள்ள கடும் [illegible] நடவடிக்கைகள் காரணமாக விமானநிலையத்தின் ஊடாக ஆட்கள் சட்டவிரோதமாக வெளியேறுவது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது" எனவும் அவர் குறிப்பிட்டார்.

என்றாலும் பிரச்சினைகள் உள்ளன. போலி அடையாளஅட்டைகளைப் பயன்படுத்துபவர்கள் இன்னமும் உள்ளனர். போலி ஆவணங்களைப் பயன்படுத்தும் பலர் தினமும் பிடிபடுகின்றனர்.

இடம்பெயர்ந்த மக்களில் பெருமளவானவர்கள் தம்மிடமுள்ள பெறுமதியான தங்கம் போன்றவற்றை விற்றும் அல்லது வெளிநாட்டிலிருந்து உறவினர்கள் குடும்பத்தவர்கள் அனுப்பிய பணத்தைக் கொடுத்துமே முகாம்களிலிருந்து வெளியேறுகின்றனர்.

அவுஸ்திரேலியா ,நியூஸிலாந்துக்கு பல நாள் படகுப் பிரயாணத்தை மேற்கொள்வதற்கு இவர்கள் 12 லட்சம் ரூபா வரை செலுத்துகின்றனர்.

இப்படி அந்த ஆங்கிலவார இதழ் மேலும் தெரிவித்திருக்கின்றது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தோட்டத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லாளர் சங்கம் மற்றும் பெருந்தோட்டத் தொழிற் சங்கக்கூட்டமைப்பு ஆகியன கலந்துகொள் ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தமக்கு நாளாந்தம் 500 ரூபா சம்பளம் வழங் கப்படவேண்டும் என்று வலியுறுத்தி தோட்டத் தொழிலாளர்கள் கடந்த சில நாள்களாக ஒத்து ழையாமைப் போராட்டம் நடத்திவருகின்றமை தெரிந்ததே. இந்தக் கோரிக்கை தொடர்பாக இன்று முதலாளிமார் சம்மேளனத்துடன் முக்கிய பேச்சு இடம்பெறவிருக்கின்றது. (சி)

## ஜப்பானிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்படும் மதிப்பு பிரதமருக்கு ஜப்பானின் நரிட்டா விமான நிலையத்தில் வழங்கப் படவில்லை என்றும் சாதாரண பயணிகள் பின்பற்றும் நடை முறையைப் பின்பற்றுமாறு அவர் நிர்ப்பந்திக் கப் பட்டார் எனவும் அவருடன் பயணம் செய்த பயணி ஒருவர் தெரிவித்தார்.

ஜப்பானுக்கு சுற்றுப்பயணம் ஒன்றை மேற் கொண்டு பிரதமர் சென்றுள்ளார். கோபேயில் இருந்த ஜப்பானிய ஆலயம் ஒன்றில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வு ஒன்றில் பிரதமர் கலந்துகொள்ள வேண்டி இருந்தபோதும் அவர் விரைவாக விமான நிலையத்தைவிட்டு வெளி யேற அனுமதிக்கப்படவில்லை.

இந்தச் சம்பவம் குறித்து ஜப்பானில் உள்ள இலங்கைதத் தூதரகத்திடம் இருந்து அறிக்கை ஒன்றை அமைச்சர் ரோகித போகொல்லாகம கேட் டுள்ளார் எனவும் வெளிவிவகார அமைச்சு தெரி வித்தது.

## தமிழ்க் கூட்டமைப்பினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுறுத்தப்படும் என்றும் தமிழ்த்தேசியக் கூட் டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் நிலக்கண்ணிவெடிகள் புதைக்கப்படாத இடங் களில் மக்களை பகுதி பகுதியாக மீள்குடியேற்றம் செய்யவேண்டும். அங்கு அவர்களுக்கு தற் காலிகமான இருப்பிடங்களை அமைத்துக் கொடுப் பதன் மூலமாக அம் மக்களுக்கு ஓரளவு நிம்மதி ஏற்படுத்தப்படும் என்றும் ஜனாதிபதியிடம் தமிழ்க் கூட்டமைப்பு வலியுறுத்தவுள்ளது.

வன்னி மக்களின் மீளக்குடியமர்வைத் துரி தப்படுத்துதல், 1990 இல் யாழ்ப்பாணத் தில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ் லிம் மக்களின் மீள் குடியேற்றம், சிறைச் சாலைகளில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விவகாரம், வடக்குக் கிழக்கில் நடைபெற்றுவரும் அத்துமீறிய குடி யேற்றம் என்பன குறித்தும்-

வடக்குக் கிழக்கில் அதி உயர் பாதுகாப்பு வலயம் காரணமாகஇடம்பெயர்ந்த மக் களை சொந்த இடங்களில் குடியமர்த்துவது குறித்தும்-ஜனாதிபதியுடனான சந்திப் பில் பிரதானமாக கலந்துரையாடுவதென நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட் டது தெரிந்ததே.

இதேவேளை, முகாம்களில் தடுத்து வைக் கப்பட்டிருக்கும் மக்களுக்கு ஒரு நபருக்கு ஒரு தடவையில் 20 லீற்றர் தண்ணீர் மட்டுமே வழங் கப்படுகிறது. அடுத்த 20 லீற்றர் தண்ணீரும் மூன்று நாள்களுக்குப்பின்னர், அதுவும் வரிசை யில் நின்றே பெறவேண்டும். முகாம்க ளிலுள்ள பல்கலைக்கழக மாணவர்களுக்கு இதுவரை பல்கலை அனுமதி கிடைக்கவில்லை. முகாம் களிலிருந்து வேறுபடுத்தப்பட்டிருக்கும் முன் னாள் போராளிகளுக்கு எந்தவித கல்விச் செயற் பாடுகளும் நிவர்த்தி செய்யப்படவில்லை போன்ற விடயங்கள் ஜனாதிபதியிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் சுட்டிக்காட்டப் படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (அ-சி)

## ஐ.நா.பணியாளரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐ.நா. ஊழியர்களான சார்ள்ஸ் ரவீந்திரன், கந்த சாமி சுரேந்திரன் ஆகியோர் சட்டவிரோ தமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள மையை ஆட் சேபித்து இந்த அடிப்படை உரிமை மீறல் மனுக் கள் அடுத்த வாரம் தாக்கல் செய்யப்படும் என்றும் -

இம்மனுக்களைத் தாக்கல் செய்வதற் கான பூர்வாங்க ஏற்பாடுகள் பூர்த்தியாகும் நிலையில் உள்ளன என்றும் மனித உரிமை கள் சட்டத்தரணி களில் ஒருவரான எஸ்.செலஸ்ரின் ''உதயனு''க்குத் தெரிவித்தார்.

ஐ.நா. ஊழியர்கள் இருவரும் ஜூன் மாத நடுப்பகுதியில் வவுனியாவில் வைத்து இலங்கை இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவு உத்தி யோகத்தர்களால் கடத்தப்பட்டார்கள் என்றும், தற்போது பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவுப் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள் என்றும் ஐ.நா. வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்திகள் வெளிவருகின்றன.

இரு ஐ.நா. ஊழியர்கள் வவுனியா முகாம் களில் மனிதாபிமான சேவைகளில் ஈடுபட்டு வந்துள்ளனர் என்றும், வவுனியா முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருப்பவர்களில் சுமார் 13 ஆயிரத்து 310 பேர் காணாமல் போயுள்ளனர் என்றும், கடந்த மே மாதமளவில் தகவல் வெளி யிட்டதை அடுத்தே இவர்கள் இருவரும் சித் திரவதை செய்யப்பட்டு தொடர்ச்சியாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள் என்றும் ஐ.நா. வட்டாரம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

## அவசரகால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜே.வி.பி. சார்பு பத்திரிகையான 'லங்கா' வை சேர்ந்த ஊடகவியலாளர்கள் மூவர் அவசரகாலச் சட்டத்தின் கீழ் பொலிஸா ரால் கைது செய்யப் பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த மூன்று ஊடகவியலாளர்களின் கைது மற்றும் தடுத்து வைப்பு ஆகியவற்றை எதிர்த்து ஜே.வி.பி. நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடத் தத் தீர்மானித்துள்ளது.

இதேவேளை, நாடாளுமன்றத்தில் எதிர் வரும் வியாழக்கிழமை அவசர காலச்சட்ட நீடிப்புப் பிரே ரணை மீதான விவாதம் இடம்பெறவுள்ளது. இந்த நிலையில் தமது ஊடகவியலாளர்கள் மூவரும் அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருப்பதன் பின்னணியில் ஜே.வி.பி. தலைமை இவ்விவா தத்தின் போது அவசரகாலச் சட்டம் நீடிக்கப்படு வதை எதிர்க்க விரும்புகின்றது என்று தெரியவருகிறது.

இதுகுறித்து கருத்து வெளியிட்ட ஜே.வி.பி. நாடாளுமன்றக் குழுக்களின் தலைவர் அநுரகு மார திஸநாயக்க தமது கட்சியின் அரசியல் உயர் மட்டக்குழு அவசரகாலச் சட்டத்தை நாடாளு மன்றத்தில் எதிர்ப்பது தொடர்பாக ஆராய்ந்து வரு கிறது என்று தெரிவித்துள்ளார். (அ-சி)

## யுனிசெவ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜேம்ஸ் எல்டெரின் விஸாவை இரத்துச் செய்து நாட்டை விட்டு இன்று வெளியேறுமாறு உத்தரவிட்டோம். ஆனால் இம் மாதம் 21 ஆம் திகதி வரை அவர் தங்குவதற்கு விஸாவை நீடிக்கு மாறு ஐ.நா. கேட்டுள்ளது என்று குடிவரவு மற்றும் குடி யகல்வுப் பிரிவுப் பணிப்பாளர் பி.வி. அபயக் கோன் தெரிவித்தார்.

அவரை நாடுகடத்துவது தொடர்பாக அரசு சில மாதங்களுக்கு முன்பே முடிவு செய்திருந்தது என்று அவர் மேலும் கூறினார்.

ஜேம்ஸ் எல்டெர் அவுஸ்திரேலிய கடவுச் சீட்டை வைத்திருக்கிறார். கடந்த வருடம் ஜூலை மாதம் முதல் வதிவிட விஸா வில் அவர் தங்கியுள் ளார். அவரது விஸா அடுத்தவருடம் வரை செல்லுபடியானது.

வன்னியில் நடைபெற்ற போரின் இறுதிக் கட்டத்தின் போது அகப்பட்ட சிறுவர்கள், கற்ப னையும் செய்து பார்க்க முடியாத நரகத்தில் சிக் குண்ட நிலைக்கு ஆளா கினர் என்று வெளி நாட்டுச் செய்தி சேவை ஒன்றுக்கு எல்டர் கருத் துக் கூறியிருந்தார்.

அரசாங்கத்தினால் நடத்தப்படும் அகதி முகாம்களில் லட்சக் க்ணக்கில் உள்ள மக் களுக்கு உதவு வதற்கு முன்வந்த தொண்டு நிறுவனங்கள் மீதான தடைகள் நீக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தி யிருந்தார். (அ-1)

## புலம்பெயர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பில் இருந்து செய்மதி மூலமாக இணைந்தி ருந்தார். இச்சந்திப்பு அரசுக்கு அதிருப்தியை ஏற் படுத்தியதாலேயே ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கேற்க வில்லை என்றும் ' தநேஷன்' தெரிவித்துள்ளது.

இதேவேளை -

விடுதலைப் புலிகளுடன் நடைபெற்ற இறுதிப் போரின் போது யுத்த நிறுத்தத்தை செய்யுமாறு அரசுக்கு அழுத்தம் கொடுத்த பல நாடுகளும், அரசு மனித உரிமைகளை மீறியுள்ளது என்றும் தற்போது குற்றம் சாட்டுகின்றன. இதனாலேயே அவர் கூட்டத்தொடரில் பங்கேற்கவில்லை என்று இராஜதந்திர வட்டாரங்கள் கூறுவதாகவும் அப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (அ-6)

## எந்த நாட்டுக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாறு தெரிவித்துள்ளார்.

தங்கலவில் சுதந்திரக் கட்சியின் அமைப் பாளர்களின் மத்தியில் நேற்று உரையாற்றுகை யில் அவர் இப்படிக் கூறினார்.

தென்மாகாண சபைத் தேர்தலில் ஹம்பாந் தோட்டை மக்கள் அரசுக்கு முழு ஆதரவும் வழங்க வேண்டும். ஜனாதிபதி தேர்தலில் வழங்கிய முழு ஆதரவை இத் தேர் தலில் மக்கள் வெளிப்படுத்த வேண்டும்.

பயங்கரவாதத்தில் இருந்து நாடு விடு பட்டு விட்டது. இப்போது அபிவிருத்தி நோக்கி நாடு செல்ல வேண்டும். அபி விருத் திப் பணிகளில் சகலரும் தமது பங்களிப்பை வழங்கவேண்டும் - என்றார். (அ-1)

## நியூஸிலாந்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வன்னி முகாம்களில் அடைக்கப்பட்டிருக் கும் தமிழர்கள் உணவு, தண்ணீர் போன்ற வசதிகளும் இல்லாமல் அத்தியாவசிய, அடிப் படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையில் அவஸ் தைப் படுகின்றார்கள் என்று ஆர்ப்பாட்டக் காரர் கள் தெரிவித்தார்கள்.

வன்னி முகாம்களுக்குள்ளும் தமிழர்கள் மீது இலங்கை அரசால் போர்க் குற்றங்கள் கட்ட விழ்த்து விடப்பட்டுள்ளன. நியூஸிலாந்து அரசு இலங்கையில் வன்னி முகாம்களில் தடுத்து வைக் கப்பட்டிருக்கும் தமிழ் அகதிகள் விடயத்தில் பாரா முகமாக இருக்கின்றது என்றும் ஆர்ப்பாட்டப் பேர ணியின் ஏற்பாட்டாளர்கள் கவலை தெரிவித்தார்கள்.

## நாட்டையும் மக்களையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டி ஈ.எல்.சேனநாயக்க சிறுவர் நூலக மண்ட பத்தில் நேற்று இடம்பெற்ற கட்சியின் 63 ஆவது வருடாந்த மாநாட்டிற்கு தலைமை வகித் துப் பேசும்பொழுதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மண்டபம் நிறையக் கட்சியின் ஆதர வாளர்கள் அங்கு கூடியிருந்தனர். இதற்கு முன்ப தாக அவர் கட்சியின் ஸ்தாபகரான டி.எஸ்.சேனா நாயக்காவின் உருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்துக் கட்சியின் மறைந்த தலைவர்க ளுக்கு மௌன அஞ்சலி செலுத்தினார்.

ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் பேசுகை யில் கூறியதாவது, நாம் அருமைபெருமையாகப் பெற்ற சுதந்திரத்தின் மகிமையால் சிங்கள, தமிழ், முஸ்லிம், பறங்கியர், மலாயர் ஆகிய அனைத்து மக்களும் அமைதியாகவும் இலங்கையர் என்ற அடிப்படையிலும் வாழ்வதற்கான சூழ்நிலையை எமது மூத்தத் தலைவர்கள் உருவாக்கினார்கள். இதே கொள்கைகளையே நானும் இங்கு உறுதிப் படுத்துகின்றேன். அரசியல் முன்னெடுப்புகளை யும் இதே நோக்கத்தில் எமது கட்சி பின்பற்றி வந் தது. இதன்பொருட்டு அனைத்து இன மக்களின் அமைப்புகளும் எமக்கு உதவினர். இதனை நம் பியே மக்கள் எமது கட்சியோடு இணைந்து கொண்டனர்.

நாம் இலங்கையர் என்ற கண்ணோட்டத்தி லேயே எமது கட்சியின் கொள்கை அமைந்துள் ளது. இதன் அடிப்படையில் இங்கு வாழும் பல் லின மக்களின் மொழி, கலாசாரம், பண்பாடுகள் ஆகிய விழுமியங்கள் பேணப்படவேண்டிய கட் டாயம் உள்ளது. இதன் அடிப்படையிலே நாட்டின் அபிவிருத்திகள் அனைத்தையும் படிப்படியாகக் கட்டி எழுப்பினோம். மிகப் பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் தொடக் கம் எல்லோராலும் கையாளப்படும் கைய டக்கத் தொலைபேசி வரை அனைத் துத் தேவைகளையும் எமது கட்சி அரசே பெற்றுக் கொடுத்தது.

இவற்றை எல் லாம் சீரழித்துவிட்ட இன்றைய அரசு ஜன நாயக மரபுகளை மதி யாமல் தாம் விரும் பிய படி குடும்ப ஆட்சி யையும் தமக்குத் தேவைப்பட்டவர்களை யும் காப்பாற்றிக்கொள் ளும் வகையில் கருமங் களை முன்னகர்த்தி வருகின்றது.

இந்த நாட்டில் மகா மன்னர் என்ற ஒருவர் இல்லை. நாம் எல்லோருமே மன்னர்கள்தான். எமது நோக் கம் நாட்டில் இறைமை பாதுகாக்கப் படவேண்டு மென்பதாகும். பல சமூக மக்கள் வாழும் இந்த நாட் டில் அரசும் பல சமூக அமைப்பாக இடம்பெற வேண்டும். இந்த நல்லெண் ணத்தை தவிடு பொடியாக்க இடமளியோம். புலிகளுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் மூலமாகவே ஜனாதிபதி மஹிந் தரும் இன்று தொடர்ந்து பதவியில் இருக்கிறார்.

இன்று நாட்டைத் தவறான முறையில் இட்டுச்செல்லும் மஹிந்தரின் ஆட்சியைத் தோற் கடித்து ஐ.தே.கட்சியைப் பதவியில் அமர்த்த நீங்கள் எல்லோரும் முன்வரவேண்டும். இந்த அரசின் அடக்குமுறைக்கு எதிராக மக்கள் முன்வர வேண்டும். 13 ஆவது அரசியல் சாசன திருத்தத் தின் மூலம் ஏற்படுத்தப்பட்ட மாகாண சபைத் தேர் தல்களை இன்றைய அரசு களியாட்ட விழா போன்று நடத்தி வருகின்றது.நாட்டு மக்கள் இந்த அசாதாரணங்களை பொறுமையுடன் அவதா னித்தவண்ணம் இருந்து வருகின்றனர்.

எமது கட்சி விரைவில் எடுக்கப்போகும் தீர் மானங்களுக்கு ஏற்ப கட்சியைச் சீர்குலைக்க உள் ளும் புறமும் எதிராகச் செயற்படும் சக்திகளுக்கு ஒருபோதும் இடம்கொடுக்கமாட்டோம். மக்களின் அபிமானத்தைப் பெற்ற டி.எஸ்., டட்லி, சேர். ஜோன், ஜே.ஆர்., பிரேமா, டி.பி. ஆகிய தலைவர்களின் ஆதர்ஷ நடைமுறைகளை ஒதுக்கிவிட இயலாது. இவ்வடிப்படையில் கட்சியின் முன்னேற் றத் துக்கு பாதகமான செயல்படுபவர்கள் மீது நாம் மிகுந்த அவதானத்துடன் ஒழுக்க நடவடிக்கைகளை எடுக்கத் தயங்கமாட்டோம். எம்மை நம்பி வாழ் கின்ற மக்களின் நம்பிக்கைக்குத் துரோகம் இழைக் கவும் இயலாது எனவும் ரணில் மேலும் தெரிவித்தார்.


### இடமாற்றம்

236, ஸ்ரான்லி வீதியில் இயங்கி வந்த தில்லையம்பதி மோட்டர்ஸ் நிறுவனம் 02.09.2009 முதல், 114, ஸ்ரான்லி வீதியில். (மக்கள் வங்கி முன்பாக) இயங்கிவருகின்றது. என்பதை எமது வாடிக்கையாளர்கள் அனை வருக்கும் அறியத்தருகின் றோம்.

**தில்லையம்பதி மோட்டர்ஸ்,**
14, ஸ்ரான்லி வீதி, (மக்கள் வங்கி முன்பாக),
யாழ்ப்பாணம். தொ.பே: 0212225710


### மரண அறிவித்தல்

**அன்னலெட்சுமி (சந்திராதேவி) திருச்செல்வம்**

(ஓய்வுபெற்ற ஆசிரியை)



யாழ்ப்பாணம், சிவன்பண்ணை வீதி யைப் பிறப்பிடமாகவும் 16, ஆசிர்வாதம் ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதியை வதிவிடமா கவும் கொண்ட அன்னலெட்சுமி திருச்செல் வம் நேற்று (06.09.2009) ஞாயிற்றுக்கிழ மை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரை ஐயா - கண்மணி தம்பதியினரின் அன்பு மகளும் ஞானம் இம் மானுவல் - மேரிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் ஈ.ஆர்.திருச்செல்வத்தின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) பாசமிகு மனை வியும் காலஞ்சென்ற மாதவி மற்றும் ஜெயகாந்தன், முரளித ரன் (கண்ணன்), கீதா (மக்கள் வங்கி, திருநெல்வேலிக் கிளை), ஜெயமுகுந்தன் (செலான் வங்கி, யாழ்ப்பாணம்), ஜெயராக வன் (இலங்கை வங்கி, பொலநறுவை) ஆகியோரின் பாசமி கு தாயாரும் சாந்தினி, துஷ்யந்தினி, கிளென்சியஸ் லொயலா (உரிமையாளர் லொயலாஸ்), தமயந்தி (ஆசிரியை, யா/வேம் படி மகளிர் உயர்தர பாடசாலை), ராஜசூரியர் (லண்டன்) ஆகியோ ரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்ற மாக்கிரட்ராணியின் மைத்துனியும் வைதேகி, காலஞ்சென்ற தேவகி மற்றும் லாவண்யா, லக்ஸ்மன், பிரியங்கா, வைஷ்ணவி, கோபிநாத், எறின்கிளென்சியா, பிரதீஷா ஆகியோரின் பேர்த்தியும் சின்ன ராசாவின் (கொழும்பு) உடன்பிறவாச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனைகள் நாளை (08.09.2009) செவ்வாய்க்கிழமை பி.ப. 2.30 மணியளவில் அவரின் இல்லத் தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.16, ஆசீர்வாதம் ஒழுங்கை,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்:
ஈ.ஆர்.திருச்செல்வம்.


### இடமாற்றம்

212, கோவில் வீதி, நல்லூரில் இயங்கிவந்த எஸ். எஸ்.யசோதரன் ஆட்ஸ் நிறுவனம் இன்று முதல் 356, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் (வண்ணை சிவன்கோயிலுக்கு முன்பாக) என்னும் முக வரிக்கு மாற்றப்பட்டுள்ளது என்பதை அனைத்து வாடிக்கையாளருக்கும் அறியத்தருகின்றோம்.

**எஸ். எஸ். யசோதரன் ஆட்ஸ்**
356, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0718270396, 0777110610

**PAPER CLASS**
கணக்கீடு
திரு. தவா
புதன் - 6 a.m
பொருளியல்
திரு. சண்
செவ்வாய் - 3 p.m
வணிகக்கல்வி
திரு. யசோ
செவ்வாய் -4.30 p.m
யுனிவேர்சல்
தனிப்பாட அனுமதி உண்டு.

**SUBRA 14** சித்தங்கேணி
சிங்களம் - BY: Prof. லீலாகிருஸ்ணன்
★ எவ்வாறு இலகுவாக சிங்களம் கற்பது
★ மூன்று மாதத்தில் எழுத வாசிக்க பேச பயிற்சி
'இலவச கருத்தரங்கு'
08.09.2009 காலை 8 மணிக்கு

**Computer Education for Kids**
*Introduction to Computer
*Computer Typing
*Word Processing
*Drawing & Painting
*Kids E-Learning




பதிவுகள் 10.09.2009 முன் நேரில்
324, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்
பரமேஸ்வரா சந்தி அருகில், Bus Route - 764
Supported by UNDP/JRRP

**படிவம் விற்பனையாகிறது**
நிவாரணக் கிராமங்களில்/ நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டிருக்கும் குடும்பங்களைப் பொறுப் பேற்பதற்கான படிவம்.
பூபாலசிங்கம் புத்தகசாலை
இல.4, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.09.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.